தத்ஜ்ஞானைபோதின்

Rbb
N14
119019

# Thathvagnana Bothini.

(ADVAITHA PHILOSOPHY.)

## தத்துவஞான போதினி,

(அத்வைதமஞ்சரி)

IN TAMIL.

PUBLISHED BY

C. S. RATHAKRISHNA AIYAR,

(EDITOR LOKANUKULAN,)

KUMBAKONAM.

PRINTED AT THE

LAKSHMI VILASA PRESS,

KUMBAKONAM.

PRICE] 1914. [As. 8.

Copyright Registered.

620



ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரிய சுவாமிகள்.

Rbb
1114

119019

"THE THATHVAGYANA BODHI."
"BHAKTHI VILAKKAM"
"MAHATHMAS."

## PREFACE.

These three small Books forming a set are now offered to the public by the Editor of the "Lokanukoolan" Kumbakonam; the 1st of them deals with the essential Principles of Hindu Philosphy on a non-technical basis; the 2nd of them illustrates the abstract principles by reference to the personal Gods and avatars of the Hindu religion; and the last of them deals with the lives of eminent souls who had realised the eternal bliss in their own life. A popular exposition of the essential principles of the Philosophy of Life must be a boon of no ordinary worth especially to those who have no avenues to the knowledge of the Vedantha through the prescribed orthodox mode of initiation. The Editor attempts in the 1st of the series of the books mentioned above, an exposition, to suit the level of ordinary understandings, of the grandest questions of philosophy—The idea of God, the significance of Pranavam, the nature of the soul, the relation between the soul and the body, "Who am I?"—"Whence"—"Whither?" — the miseries of conditioned existence,—and the final goal. "Bakthi-Vilakkam" treats at much length of the personal gods, Vinayaka, Subramanya, Siva and others, and of avatars like Sri Rama and Sri Krishna, and gives a lucid exposition of the esoteric significance underlying each of them and illustrates concretely the abstract principles of philosophy dealt with in the "Thathvagyana Bodhini."

The third of the series the "Mahatmas" deals with the lives of the illustrious Sankar, Bodhendra Swamigal, of Theagaroya Swami of the Keerthana fame, of Ayyavargal of Thiruvasanalloor of recent fame, of Sadasiva Brahman the adeit *yogi*, and a host of others of equal celebrity.

The Editors humble aim in offering these books to the public is to familiarize the reading public with the grand truths of our philosophy and enable them to try *to live* consistently therewith and realize the eternal bliss even here. ........." the place where, in the end,
We find our happiness, or not at all!"

THE AUTHOR.

# INTRODUCTION.

Mr. Radhakrishna Aiyer, the author of this book requires no introduction to the public as he had been well known for a long time as the Editor of the Tamil Paper Lokaupakari and this pamphlet is only a reproduction of the series of articles, in his paper. The book gives a general idea, of the Hindu-Philosophy which it is hoped would be useful to tamil reading public.

12—12—1913 } S. PANCHAPAGESA SERMA, B.A., L.T.
Saidapet. } *Assistant, Teacher's College,*
*Saidapet.*

# முகவுரை.

" தாருணை நண்பயமே யல்லா லொன்றுந்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
பொருளாய்க் கற்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது [illegible] யிலிருந்
ஞானவாக்கியமெறி நேயத்தி
ஞானருவு மருவாம வாரேயி ஏற்றும்
குருநயிதன் பெருமை வெவர்க்கார் சொல்வார்
அருளாரு மௌனமய ரதீல சொல்லும் " — தாயுமானவர்.

"தத்வஞானபோதினி" என்னும் இந்நூலுக்கு முகவுரை ஒன்று எழுதித்தருமாறு எமது நண்பர் ஸ்ரீமான் C. S. இராதாகிருஷ்ண ஐயரவர்கள் எம்மைக் கேட்டுக்கொண்டார்கள். நண்பருடைய வேண்டுகோளை மறுக்கமாட்டாது முகவுரையாக ஒரு சில வார்த்தைகள் யாம் எழுதலானோம்.

"தத்வம்" என்னும் பதம் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். ஆனாலும், இவ்விடத்தில் அப்பதம் உண்மை என்னும் பொருளை உணர்த்தி நிற்கின்றது. ஆகவே "தத்துவஞானம்" என்றால் "உண்மை ஞானம்" என்பது பெறப்பட்டது. "நன்று சொன்னீர்! ஞானத்தில் உண்மை ஞானம், பொய் ஞானம் என இரண்டா இருக்கின்றது?" என்று சிலர் வினவலாம். ஆம்; ஞானம், மெய்ஞ்ஞானம், பொய்ஞ்ஞானம் என இருதிறப்படும். இவற்றுள் மெய்ஞ்ஞானத்தை உணர்த்தவே, "தத்துவஞானம்" என்னும் சொற்றொடர் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்த மெய்ஞ்ஞானத்தை இந்நூல் போதிப்பதால், இதற்குத் "தத்துவஞானபோதினி" என பெயர் சூட்டப்பெற்றிருப்பதாக யாம் கருதுகின்றோம். இந்நூல் அச்சிட்டுக்கொண்டிருந்தபோதே, இதன் ஒரு பிரதியை நண்பர் எமக்கு அனுப்பினார்கள். அவற்றை யாம் படித்தபோது இந்நூலுக்கு இட-

[illegible] பெயர் பெறப் பொருத்தமுடையதென்பது இனிது [illegible] பட்டது. பிரளயம் முதல் தொடக்கப் பல [illegible] அறியவிருப்ப[illegible] பற்றி இந்நூல் விளக்குகிறது. [illegible] தர்கள் அனைவ[illegible] உண்மை தெரிய வேண்டுமே தவ[illegible] மயக்கு கூறுவதாற் பயனில்லை. ஆகையால் [illegible] பற்றிக் கூறுது, இந்நூல் சம்பந்தமாய்ப் பொதுவான [illegible] குறிப்புக்களை மாத்திரம், சாதக[illegible] இதனைப்படிப்பதில் மனஞ் செலுத்தி [illegible] தக்கதாகும்.

இவ்வுலகத்தில் மக்களாய்ப் பிறந்துள்ள நாமெல்லோரும் பெருமைக்குரிய [illegible] பொருள்களின்மேலே நம் கவனத்தைச் செலுத்தி வருகிறோம். நாம் வெளியில் [illegible] காண்பதெல்லாம் மண், பொன், பெண், என்னும் மூன்று [illegible] இவற்றின் [illegible] பற்றுக்கோடாகக் கொண்டிருக்கின்றன. நாம் (ஆத்மா) வசிக்கும் சரீரங்களும், இந்திரியங்கள் இயங்குகின்ற நிலையும், இவற்றிற்கு உபகாரமாயிருக்கும் வேறு பதார்த்தங்களும் நிலையற்றனவாய், ஒரு கணத்தே தோன்றி மறைந்து [illegible] அழிந்தொழியும் இயல்புடையனவாயிருக்கின்றன.

"மேற்சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னுமிந்தப்
படிமீதில் வாழ்வை விரும்பலல்லால், பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்யவேண்டுமென்றே யறிவாரில்லையே"

என்று முற்றத்துறந்த பட்டினத்தடிகள் அருளிச்செய்தபடி. நிலையற்றனவான சரீரமும் பிறவும் சாவது தெரிந்துங்கூட மீண்டும் மீண்டும் அவைகளிலேயே நம் அறிவு செல்கின்றதன்றோ? அவைகளைப் பற்றுக்கோடாகக்கொண்டு நிற்கும் ஞானந்தான் பொய்ஞ்ஞானம் எனப்படும். "பொன்னினம்பலவர் அடிசார்ந்து நாமுய்யவேண்டுமென்று அறிவதுதான்" மெய்ஞ்ஞானமெனப்படுமே. இந்த மெய்ஞ்ஞானம், நிலையற்ற உலகியற் பொ[illegible] செல்லும் அவாவினையும் அறிவினையும் [illegible]



நிலையுள்ளதாய், சுத்த அருள்மயமானதாய், பேரின்பப் பெருஞ் சாகரம்போன்றதாயுள்ள கடவுளிடத்தில் அவ்வவாவினையும் அறிவினையும் செலுத்தும் மகான்களுக்கு, அவன் அருளால், ஏற்படுமே தவிர ஏனையோருக்கு ஏற்படாது.

"மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்;
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா, விமலா, விடைப்பாகா, வேதங்கள்
ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே,
வெய்யாய், தணியாய், இயமான னாம் விமலா;
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே"

என்று ஸ்ரீமாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்தபடி, மெய்ஞ்ஞான சொரூபியாய்த் திகழும் இறைவனை அறியும் ஞானமே மெய்ஞ்ஞானம்,—அதுவே தத்துவ ஞானம்!

இன்னும் இந்த மெய்ஞ்ஞானமே பரனை அறிவிக்கும் ஞானமாதலால் பரஞானம் என்றும், பதிப்பொருளை உணர்த்துவதால் பதிஞானம் என்றும், ஏனைய, அபரஞானம் என்றும், பாசஞானம், பசுஞானம் என்றும் ஆன்றோரால் வழங்கப்படுகின்றன. இனி, இம்மெய்ஞ்ஞானம் என்பது யாது? தத்துவஞானம் என்றால் என்ன? என்று நுணுகி ஆராயும்வழி, ஒரு பொருளின் ஸ்தூலமான சொரூபத்தைமாத்திரம் அறியும் ஞானம் ஸ்தூல ஞானம் என்பதும், அப்பொருளின் சொரூபத்தால் உணர்த்தப்படும் அந்தரங்கக் கருத்தை அறியும் ஞானம் தத்துவஞானம் என்பதும் அறிவுடையார் யாவர்க்கும் தெற்றெனப் புலப்படும். "தண்ணீர் என்றால் என்ன?" என்று சாதாரண அறிவுடைய ஒருவனைக் கேட்டால், "அது திரவரூபமானது: ஆறுகளிலும் குளங்களிலும் அது இருக்கும்; குடிப்பதற்கும் குளிப்பதற்கும் அது உபயோகப்படுகிறது." என்று சொல்லுவான். அதே கேள்வியை ஆய்கலை பயின்ற ஒரு மாணாக்கனை நோக்கிக் கேட்டால்,

தண்ணீர் என்பது இரண்டு பங்கு ஜலவாயுவும் ஒருபங்கு பிராணவாயுவும், ஒன்று சேருவதால் உண்டாகும் திரவ பதார்த்தம்" என்று விடையளிப்பான். இவற்றுள் முன்னவன் கூறிய பதில் ஸ்தூல ஞானத்திற்கும் பின்னவன் கூறியவிடை தத்துவஞானத்திற்கும் உதாரணங்களாகும். இதுபோலவே நம்முடைய மதபேர்தனைகளிலும், புராணங்களிலும், ஆலயங்களிலும் அடங்கியிருக்கும் இரகசிய பொருள்களை அறிவதுதான் தத்துவஞானமென்றும் மெய்ஞானமென்றும் சொல்லப்படும். உதாரணமாக இரண்டொன்றை எடுத்துக்காட்டுவோம்.

இவ்வுலகத்தை ஆதிசேஷன் என்னும் பாம்பு தன் தலையில் தாங்கிக்கொண்டிருக்கிறதென்றும், அதனாலேயே இந்த உலகம் நிலைபெற்றிருக்கிறதென்றும் நாம் புராணங்களில் படித்திருக்கிறோம். அதுகொண்டு அப்படியான பாம்பு இருப்பதாகவும், அதனுடைய தலையில் இப் பூமி இருப்பதாகவும் கருதுவது ஸ்தூல ஞானம். அதி நுட்பமான சுத்தமாயை (Pure and Subtle Matter) சிருஷ்டிகாலத்திற்குமுன் இயங்காமற் கிடந்தது. இப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கத் திருவுளங்கொண்ட இறைவன், தம்முடைய அருட்சக்தியை அம்மாயையிற் செலுத்திக் கலக்கினர். அப்படிக் கலக்கியபோது அம்மாயையில் பாம்பு மண்டலித்ததுபோன்ற சுழல்சுழலான இயக்கமுண்டாயிற்று. அவ்வியக்கத்தின் வேகத்தினால், முன் கட்புலனுக்குத் தோன்றாது சிதறிக்கிடந்த பரமாணுக்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து கட்புலனுக்குத் தோன்றும் பிரபஞ்சமாயிற்று. இவ்வுண்மையைத்தான் "ஆதிசேஷன் பூமியைத் தாங்குகின்றான்" என்னும் புராணவரலாறு குறிப்பிக்கிறது. சுத்தமாயையிற்றோன்றும் சுழல் சுழலான இயக்கமே ஆதிசேஷனாகவும், அவ்வியக்கத்தினால் இவ்வுலகம் நிலைபெற்றிருத்தலை ஆதிசேஷன் தலையில் பூமியிருப்பதாகவும் உருவகஞ்செய்து புராணங்கள் கூறுகின்றன. இவ்விதம் அந்தரங்கக் கருத்தை அறிவதுதான் தத்துவஞானம் எனப்படும்.



"ஒரே பெயரால் அழைக்கப்படும் இரண்டு பறவைகள் ஒரு மரத்தில் வசிக்கின்றன. அவைகளுள் ஒன்று அம்மரத்தின் கனிகளைப் புசிக்கின்றது. மற்றொன்று சாட்சிமாத்திரையாய்ச் சுற்றிப்பார்த்துக்கொண்டிருக்கிறது" என்னும் பொருள்கொண்ட சுலோகம் ஒன்று வடமொழியில் சுவேதாசுவதர உபநிடதத்தில் காணப்படுகின்றது. இதன் அந்தரங்கப்பொருள் யாது என்று ஆராய்வோமாயின்,—"மாயை என்னும் மரத்தில் பரமாத்மா, ஜீவாத்மா என்னும் இரண்டு பறவைகள் இருக்கின்றன. அவற்றுள்ள மாயை என்னும் மரத்திற் பழுக்கும் நல்வினை, தீவினை என்னும் கனிகளை ஜீவான்மா புசித்துப் பிறப்பிறப்புகளிற் கிடந்துழல்கின்றான். பரமான்மா இருவினையினால் தாக்குறாது சாட்சிமாத்திரையாய் இருக்கின்றார்." என்பது இனிதுபுலப்படும். மாயை மரமாகவும், பரமான்மா ஒரு பறவையாகவும், ஜீவான்மா மற்றொரு பறவையாகவும், நல்வினை தீவினைகள் கனிகளாகவும் இங்கு உருவகஞ் செய்யப்பட்டிருக்கின்றனவேயன்றி வேறில்லை.

"பிரணவம் என்றால் என்ன?" என ஒருவரைக் கேட்டால் ஓம் என்னும் ஒலியே பிரணவம் எனப்படும். அ, உ, ம் என்னும் மூன்று ஓசைகளின் சேர்க்கையால் அது உண்டாகிறது" என்று அவர் பதில் கூறுகின்றார்; இங்ஙனம் உரைப்பது ஸ்தூலஞானம். அப்பிரணவத்தின் மகிமையையும், அவ்வளவு மகிமை அதற்கு ஏற்பட்டிருப்பதற்குக் காரணத்தையும் நுணுகி அறிவதுதான் தத்வஞானமெனப்படும். ஒலியானது இயற்கை ஒலி செயற்கை ஒலி என இருதிறப்படும். இவற்றுள் பிரணவமானது இயல்பாகவே எழும் ஒலியாதலாலும், மற்ற ஒலிகளுக்குத் தான் இடந்தந்து நிற்பதாலும், நாதத்துவம் என்று சொல்லப்படும், பெருமையுடையதாய்த் திகழ்கின்றது. பிரணவம் இயற்கையாய் எழும் "ஓம்" என்னும் ஓரொலியாய் நிற்குங்கால் சமஷ்டிப் பிரணவம் என்றும், மற்ற ஒலிகள் தோன்றுவதற்குத் தான் இடந்

கருவதோடு அவைகளில் தானும் வியாபித்து நிற்குங் கால் வியஷ்டிப் பிரணவமென்றும் பெயர்பெற்று ஈரியல் பாய் விளங்குகின்றது. இவ்வுண்மை புலப்படுத்தற்கன்றே

“ஓமெனும் ஓங்காரத்துள்ளே ஒருமொழி
ஓமெனும் ஓங்காரத்துள்ளே யுருவருவம்
ஓமெனும் ஓங்காரத்துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே”

[illegible]ந் திருமூலரும் அருளிச்செய்வாராயினர். பிரணவ[illegible]வம் சிவத்தின் உருவைக் குறிப்பிக்கின்றது. சிவன் எல்லாமாய் அல்லதுமாய் ஒன்றாய்ப்பலவாய் நிற்பதுபோல பிரணவமும் எல்லா ஒலியாயும், எல்லா ஒலியும் அல்லாத தாயும், ஒன்றான சமஷ்டி ரூபமாயும் பலவான வியஷ்டி ரூபமாயும் இருத்தல்கொண்டு இவ்வுண்மை தெளியப்படும். இன்னும் சிவம் ஒன்றே சிருஷ்டி, ஸ்திதி, சங்கார கிருத்தியங்களை நடத்துங்கால் முறையே பிர்ம, விஷ்ணு, ருத்திரராய் விளங்குகின்றது என்னும் தத்துவ உண்மையினை இப்பிரணவம் சூசிப்பிக்கிறது. எங்ஙனமெனில்,— பிரணவம் அ, உ, ம், என்னும் மூன்று ஒலிகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறதென்று முன்னரே கூறினமன்றே? இவற்றுள் அகரம் வாயைத்திறந்த மாத்திரையிலேயே முதல் முதல் தோன்றும் ஒலியாதலின் அது சிரு[illegible]யையும், அங்ஙனம் தோன்றிய அகர ஒலியே [illegible]விகற்பத்துடன் உகரமாகத் திரிந்து நிற்றலின் உகரம் ஸ்திதியினையும், மகரம் வாயை மூடிய மாத்திரையில் முன்தோன்றிய அவ்வொலிகளையும் ஒடுக்கிவிடும் இயல்பாயிருத்தலின் அது சங்காரத்தையும் குறிக்கின்றன. இம்மூன்று ஓசைகளுக்கும் நிலைக்களனான விந்து, நாத தத்துவங்களும் இப்பிரணவத்தில் அடங்கியிருக்கின்றன அதனால் இவ்விரண்டு தத்துவங்கட்கு அதிபதிகளான மகேசுரரும், சதாசிவமும் பிரணவத்தால் உணர்த்தப்படுகின்றன. எனவே, பஞ்சகிருத்தியங்கள் இயற்றும் பஞ்சமூர்த்திகளுக்கும் பிரணவம் ஓர் உறையுள் போன்றது என்பது பெறப்பட்டது. இவ்வுண்மையை,



“எண்ணிலவோங்காரத் தீசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன் மாலொடு பரமனதி தெய்வம்
அகர வுகரம் மகரத்தாம்”

என்னும் ஆன்றோர் வாக்காலும் அறிக. இப்பிரணவத்தைப்பற்றிய தத்துவார்த்தங்கள் இன்னும் பல உள. அவற்றினை விரிவஞ்சி விடுத்தாம். இப்புத்தகத்தின் நூலாசிரியரே பிரணவ சம்பந்தமாய் இப்புத்தகத்தில் எழுதியிருக்கும் பகுதிகளை வாசகர்கள் கூர்ந்து படிப்பார்களானால் இன்னும் பல உண்மைகள் புலப்படும்.

இங்ஙனமெல்லாம் நுணுகி ஆராய்ந்து ஒரு பொருளின் அந்தரங்கக் கருத்தை அறிவதுதான் தத்துவஞானம் என்று சொல்லப்படும். இத்தகைய இரகசியார்த்தங்கள் பல இந்நூலில் காணப்படுகின்றவாதலால் இதற்குத் “தத்துவஞானபோதினி” என்னும் பெயர் ஏற்றதேயாம். இந்துமத அபிமானிகளும், தமிழில் விழைவுடையாரும் இவ்வரிய நூலை வாங்கிப்படித்து நலம்பெற எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக! சுபம்.

தேவக்கோட்டை } நாகை-ஸி. கோபாலகிருஷ்ணன்,
23—12—13 } ‘வைசியமித்திரன்’ உதவிப்பத்திராதிபன்

# சிறப்புரை.

அலைகடற் புடைசூழிவ்வவனியின் வதியுமான்மகோடிகள் பலசமயத்துறையுழினும், முதன்மையாந்துறையாய் நின்று நிலவும் பிர்மமம் என்னும் துறையே மிகச்சிறந்தது. இதற்கு வேதத்துறையென்று சொல்லுவது இதனாலன்றோ? ஆளுடைய பிள்ளையாரின் புகழைப் பரவுவானெடுத்துக்கொண்ட சேக்கிழார் "வேதநெறி தழைத்தோங்க" என்றும், ஆளுடைய பிள்ளையார் அம்மறை முதலானே உலகம் செழிக்க வேண்டியதெனவும், அதை நெறியோடு ஓதி கிரியை இயற்றியதன் பயனால் ஞானகாண்டப் பொருளாம் பிரமத்தை யறிதலே மேலானதெனவும் விளக்க, 'வாழ்கவந்தணர்' என்றும் அருளிச்செய்தார்கள். மற்றும் வடமொழி நூலோரும், தென்மொழி நூலோரும் யாவரும் வேதமென்பதனையே பிரமாணமாகக் கொண்டாராதலின் அவ்வேதத்தின் பெருமையை விரித்துரைத்தல் நமக்குச்சிரமமன்றே?

அவ்வேதத்தினாற்போந்த பயன் யாதோவெனின், சரீரபந்தத்தை நீக்கி முக்திக்கைவல்யத்தை அடைவதே? இவ்வேதம் கிரியாகாண்டமெனவும், ஞானகாண்டமெனவும் இருதிறப்படும். இது பிரமகாண்டமெனவும் பிரமத்துக்கு நிமித்தமாம் ஞானகாண்டமெனவும் படும். அதாவது, முன்னையது வேதமும், பின்னையது வேதாந்தமுமாம். இவ்வேதாந்தப் பொருளின்றி முக்திகூடாதென்பது நிச்சயம் என்று வேதாந்தப்பொருளையே நோக்கும் வேதாந்த மகாசூத்திரமும் நிச்சயிக்கும்.

வேதாந்தப் பிரதிபாத்யமான வேதாந்த மகாவாக்யம் தத்துவமசி, அகம்பிரம்மாஸ்மி, பிரம்மோகம் என்பனவே. இவ்வாக்கியத்திற்கு வியாசசூத்திரமும், அச்சூத்திரத்திற்கு ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் இயற்றிய பாஷியமும் ஆதாரமாம். இவ்வரிய பெரிய நூலை உலகோர்க்கு "தாயின்புறவருலகின் புறக்கண்டு" எனும் பொய்யாமொழியைக் கடைப்பிடித்துப் பயன்படும்படி அவரவர்கள் பிரம்மஞானத்தையடைய "தத்துவஞானபோதினி" எனப் பெயர்தந்து எளிதில் வசனநடையாக்கி அச்சிட்டுபகரித்த கும்பகோணம் மகா-ள-ள-ஸ்ரீ C. S. இராதா கிருஷ்ண ஐயாவர்களுக்கு என்ன கைமாறியற்றவிருக்கின்றனம்?

மதுராந்தகம் } சு. கட்டப்பேரி சுப்பிரமணியன்.
30—11—1913. }



# தத்வஞானபோதினி.

ஓம்.

## பிரணவம்.

ஓம் என்ற அக்ஷரத்தைப் பிரணவமென்று சொல்லுவார்கள். இதுதான் வேதங்களுக்கு முதலிலும், மத்தியிலும், முடிவிலும் வருகிறது. ம் என்பது பீஜம். அகாரமுதல் க்ஷகாரம் வரையிலுள்ள 51 அக்ஷரங்களுடன் ம் என்ற பீஜம் சேர்ந்து பீஜாக்ஷரங்களாகின்றன. அதேமாதிரி, தமிழ் பாஷையின் உயிரெழுத்துக்களாகிய அ, இ, உ, எ, ஒ, என்ற ஐந்தெழுத்துக்களுடன் ம் என்ற பீஜம் சேர்ந்து ஓரெழுத்தாய் ஓம் என்ற பீஜாக்ஷரம் அல்லது பிரணவமாயிற்று. இப்பிரணவமில்லாமல் உலகில் மந்திரமென்பது கிடையாது. மந்திரங்களுக்கெல்லாம் உயிராகவிருப்பது ஓம். பிரணவத்தின் தத்வார்த்தத்தை இவ்விடத்தில் நான் உள்ளபடி உரைக்கிறேன். ஆனால் மற்றவர்களவ்விதம் அதனுடைய அர்த்தத்தை தெரிந்து பயனடைந்தார்களென்று ஏற்படவில்லை. ஏனென்றால் அதைப்பற்றி அநேகர் பலவாறாக எழுதியிருக்கிறார்கள். பரமசிவனுக்கு ஸ்ரீ சுப்பிரமணியர் அருளிச்செய்தவாறு, இவ்விடத்தில் தத்துவார்த்தங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவையாவன:— ஏற்கனவே ஓம் என்ற பிரணவமானது அ, இ, உ, எ, ஒ, என்ற ஐந்து உயிரெழுத்துக்களுடன் ம் என்றபீஜம்சேர்ந்து ஓரெழுத்தாயிற்றென்று சொன்னோம். அவைகளில், அ—என்றால் அவன் அல்லது அது, இ—என்றால் இவன் அல்லது இது, உ—என்றால் உவன், எ—என்றால் எவன் அல்

லது எது, ஓ—என்றால் ஓவன் அல்லது ஒருவன் என்று அர்த்தமாகின்றன. ஆகையால் ம் என்றதை எல்லா அர்த்தங்களுக்கும் சேர்த்து அவனும், அதுவும், இவனும், உவனும், எவனும், ஓவனும் என்றாகி முடியாததால் பாக்கியாகவின்ற நானும் என்றதைச் சேர்த்து எல்லாமொன்றாகிவிடுகின்றன. அதாவது, அவன், அது, இவன், இது, உவன், எவன், ஒருவன், நான் ஆகிய இவைகளெல்லாம் ஒன்றாய்ச்சேருகிறபடியால் எல்லாருமொன்றாய்விடுகிறார்கள். ஆகையால் ஓம் என்றது எல்லா பிராணிகளிடத்தும் ஒரே வஸ்துவாயும் நிரந்தரமாயும் நிர்பயமாயுமுள்ள ஆத்மா அல்லது உயிராகிய கடவுளை உணர்த்துகிறது. இதனால் ஓம் என்ற பிரணவமானது பரஞ்சோதியாகிய கடவுளையே குறிப்பிடுகிறதென்று இதைப் படிப்பவர்களறியக்கடவார்கள். கோயில்களிலடிக்கும் மணியின் சப்தமானது ஓம் என்ற பிரணவத்தையே தொனிக்கிறது. அத்தொனியானது எல்லாபிராணிகளிடத்தும் நானிருக்கிறேன் அதை எல்லோரும் அறிந்துகொள்ளுங்களென்று சொல்லுகிறதுபோலிருக்கிறது.

ஓக்காரமான மேற்கூறிய (ம்) காரமயப் பிரம்மேஸ்வரமானது நிராமய, நிராகார,—அறிவாகாரமாய் விளங்குகின்றது. (ஓ) நிர்குண அரூபாகார அறிவாகாராகாரமாய் விளங்குகின்றது. (அ) காரமயப் பிரம்மேஸ்வரமானது சகுணரூபாகார தரிசனமூர்த்தமாய் விளங்குகின்றது. (உ) காரமய பிரம்மேஸ்வரமானது மந்திர நாமாகார மூர்த்திகரமாய் விளங்குகின்றது. கடைசி (ம்) காரமயப் பிரம்மேஸ்வரமானது சர்வசிருஷ்டிகளாய் விளங்குகின்றது. ஆகையால் நிராகார அறிவாகார மயமானது ஈஸ்வரத்துவமாம். அரூபாகார அறிவாகாயாகாரமானது ஈஸ்வரசக்தித்துவமாம். ரூபாகார தரிசனாகாரமானது ஈஸ்வர ஆன்மத்துவமாம். நாமாகார மூர்த்திகரமானது ஈஸ்வர ஜீவத்துவமாம். ஆகையால் நிராகாரமும் அரூபாகாரமும் ஈஸ்வரமயமாம் ரூபாகாரமும் நாமாகாரமும் ஆன்மமயமாம். சர்வசிருஷ்டியாகா





ரமானது ஈஸ்வரஜடத்துவமாம். மகோலய ஞானிகள் முதலிரண்டு சொரூப உண்மைகளை அகக்கண்ணால் அறிந்து கலந்துய்வர். மகேசலன அஞ்ஞானிகள் பின்னிரண்டு சொரூப உண்மைகளை புறக்கண்ணால் தரிசித்து, பூசித்து, தியானித்து உய்வர். நிராகார, அரூபாகாரமென்றிரண்டுவகை சயரூபமாய் நின்றும் பஞ்சகிருத்தியத்தைச் செய்யும் இரகசியத்தை ரூபாகார நாமாகாரமாயும் நின்று செய்கிறேனென்று ஆதியிலிருந்த அருந்தவசிகளுக்கு காட்டியவாறு இக்காலத்தில் ஆலயங்களிலும் வருஷந்தோறும் முப்பத்திரண்டு தத்துவங்களையுடைய சுத்த-உடலை ஞானுடிக்கு ஒப்புவமையாகிய த்வஜஸ்தம்பத்தில் (32) கண்டபிரிவு வளையமிட்டு அதின் உச்சியிலும் (32) தத்துவங்களோடு மேற்கூறிய சதுர்வித சொரூபமாய் நின்று பஞ்சகிருத்தியஞ்செய்கின்றனரென்று பஞ்சகிருத்தியத்திற்கு பஞ்ச வீண்டையும், சதுர்சொரூபத்திற்கு நான்கு கலசத்தையும் அமைத்து பஞ்சகிருத்திய த்வஜங்கட்டி பஞ்சகிருத்திய பிரம்மோற்சவத்தை (11) நாள் செய்தும், தரிசனப்பிராப்தி சாந்தி வசந்த உற்சவத்தை (21) நாள் செய்து முடிக்கின்றனர். மேற்கூறிய (11) நாள் பிரம்மோற்சவத்தில் முதல் ஐந்து நாள் சிருஷ்டிக்கிரம பஞ்சகிருத்தியமுடையன. பின் ஐந்து நாள் லயக்கிரம பஞ்சகிருத்தியமுடையன. கடைசி ஒரு நாள் மோக்ஷப்பிராப்தியுடையன. மேற்கூறிய (21) நாள் வசந்த உற்சவமுதல் (16) நாள் சோடசஈஸ்வர காலதரிசனமுடையன. பி (4) நாள் சதுர்தாரக பிரம்ம சாக்ஷியுடையன. கடைசி ஒரு நாள் ஏகப்பிரம்ம ஐக்கியமுக்தியுடையன. இவ்விதமாய் (32) தத்துவவிர்த்தி லயக்கிரமத்தை மறவாமலிருக்க (32) நாள் உற்சவத்தால் உணர்த்தப்படும். இது பக்திஞானத்திற்குரியவையாம்.

## தத்துவஞானம்.

உலகில் சரீரத்தின் தத்துவங்களை யறிவதற்கு அநேகர் பிரயாசைப்படுகிறார்கள். அங்ஙனமே பிரபஞ்சத்தின் தத்துவங்க

லையும், விசாரிக்க பிரயாசைப்படுவது வியாபமேயாகும். அந்த கையோர், மது தேசத்தில் பண்டையகாலந்தொட்டு, நமது தேசத்திலேயே குடிகொண்டிருக்கிறார்கள். அவ்விஷயத்தைப்பற்றி வேதத்தின் ஒருபாகமாகிய உபநிஷத்துக்களும் கூறுகின்றன.

இவ்வுலகிற்கும் நமக்கும் காரணம் யாது? நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் எப்படி ஜீவிக்கிறோம், எதன்பேரில் நாம் இருக்கிறோம்? இத்தகைய கேள்விகளைக் கேட்டுக்கொண்டு தத்வ விசாரத்திற்கு மஹரிஷிகள் ஆரம்பித்தார்கள். இவ்விஷயத்தைப்பற்றி விசாரிக்கத் தொடங்கியவர்களைக் காரியினும் நிலைமையுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிப்போம்.

அவர்கள் யாரெனில் சார்வாகர், லோகாயுதர் இந்திரியவாதி, மனோவாதி, புத்திவாதி, க்ஷணிகவிக்ஞானவாதி (புத்தமதம்) வைசேஷிகம், (ஸாங்கியம்) பூர்வமீமாம்சகர், பதஞ்சலியோகம், பிரம்மவாதி முதலியோர்களேயாம். சார்வாகர்களும், லோகாயுதர்களும் கூறுவது யாதெனில், பிரத்தியக்ஷமாக பார்க்கப்படுகிற சரீரமே ஆத்மா. அதை போஷிப்பதே நமது கடமை. அதை பலமாக பாதுகாக்கப்பட்டால் போகங்களுக்குபயோகமாகும் சரீரமுள்ளவரைக்கும் இந்திரிய சுகத்தை அனுபவிப்பதே மோக்ஷம்: கடன்வாங்கியாவது திருடியாவது ஸ்திரீ சுகத்தை யனுபவிக்கவேண்டும். இச்சரீரம் இறந்தபின் வேறு லோகமில்லை. பூதங்கள் பூதங்களோடு சேருகின்றன. பூதங்களையன்றி வேறு ஆத்மா வேறொன்றுமில்லை. இம்மதத்தை யனுசரித்தே பாமரர்களும் நடக்கிறார்கள். இம்மதமே மற்றவர்களைப்பார்க்கிலும் தாழ்மையானது. இவர்களைப் பார்க்கிலும் உயர்ந்த அபிப்பிராயங்களை இந்திரியவாதிகள் கூறுகின்றனர்.

இந்திரியவாதிகள்:— சார்வாகர்கள் கூறுகிறபடி தேகமே ஆத்மாவென்றால் தூங்கும்போது தேகமிருந்தும் ஒரு போகத்தையும் அனுபவிக்கமுடியவில்லை. ஆனதால் தேகத்திற்கு வேறாக இந்திரியங்களே ஆத்மாவாகவேண்டும். ஏனெனில் அவைகளே





போகங்களை அனுபவிக்கின்றன. அவைகளின்றி சரீரமிருந்து என்ன பிரயோசனம். ஒவ்வொரு இந்திரியங்களும் தனது விஷயங்களை அனுபவிப்பதற்கு முயற்சி செய்கின்றன. லோகத்தில் இந்திரிய ஹீனர்கள் ஒரு காரியத்திற்கும் பிரயோசனப்படமாட்டார்கள். அவர்களை நொண்டி குருடு செவிடு என்று ஒருவரும் மதிப்பதில்லை. இந்திரியங்கள் புஷ்டியாயிருந்தால் அவனை எல்லோரும் மதிக்கிறார்கள். அவன் எல்லா சுகத்தையும் அனுபவிக்கலாம். ஆகவே சுகநிச்சிருப்பிடமாய் இருத்தலால் இந்திரியமே ஆத்மா. ஆனதால் இந்திரியங்களை இரக்ஷிக்கவேண்டும்.

மனோவாதி:—இந்திரியங்கள் போகத்தை யனுபவிப்பினும் மனதின் துணையின்றி அவைகளால் ஒரு போகத்தையு மனுபவிக்க முடியாது. மற்றும் மனதே நினைத்தல் மறத்தல் என்ற சக்தியை யுடைத்தாயிருக்கின்றது. அது நினைத்தால் இந்திரியங்கள் ஏவலாளர்களைப்போல் பிரவிருத்திக்கின்றன. அது நினையாதிருப்பின், அவைகள் பிரவிருத்திப்பதில்லை.

மனயேவ மனுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோஹோ

என்றபடி மனதே பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாயிருக்கிறது. உலகத்தில் தைரியமுள்ளவர்கள் மிக்க கௌரவக்கிறார்கள். மனோவலிமையுடையவனே பெரியவனாய் விளங்குகிறான். இந்திரியங்கள் ஒரு விஷயத்தை கண்டபினும் மனதின் சம்பந்தமின்றி அதனது யதார்த்த ஞானத்தை அறியமுடியாது. மனதோ எவ்விஷயத்தையும் அனுபவிக்க சக்தியுள்ளது. மனதே ஸர்வவிஷயத்தையும் நமக்குக் காட்டுகிறது. அதுவே ஸ்வப்பனாவஸ்தையில் எல்லா இந்திரியங்களினுடைய சக்திகளையும் கிரஹிக்கின்றது. மனதில்லையாயின் ஒன்றும் தோன்றுவதில்லை. மனதின் சக்தி குறைந்தவனைப் பிராந்தன் என்கிறார்கள். ஆனதால் மனதே ஆத்மா என்று கூறுகின்றார்கள்.

க்ஷணிகவிக்ஞானவாதி:—மனோவாதியை க்ஷணிகவிக்ஞானவாதியான புத்தர் கண்டித்து புத்தியையே ஆத்மா என்கிறார்.

என்னவெனில், மனது விஷயத்தில் பிரவிர்த்திக்கிறதாலும் புத்தியின் சக்தியின்றி அதற்கு ஒரு பிரவிர்த்தியுமில்லை. அப்புத்தியும் க்ஷணிகத்திற்கு க்ஷணிகம் மாறுகின்றது. முதல் க்ஷணிகம் அடுத்த க்ஷணிகத்திற்கு காரணம். அங்ஙனமே க்ஷணிகரூபமாயிருக்கும் புத்தியே ஆத்மா. அதுவே ஸ்லோகத்திற்கும் ஆஸ்பதமாயிருக்கிறது. நிக்ஷன்னியமான புத்திமானையே யோகியென்கிறோம். ஆனதால் சர்வவிஷயத்தையும் தியாகஞ்செய்து இந்திரியங்களை அடக்கி மனதையொடுக்கி புத்திமயமாகவே யிருப்பின் அதுவே நிர்வாணம். அவனுக்குச் சர்வசித்தியும் உண்டாகும். அவனையே முக்தனென்போம். அவனே காருண்ணியநிதி. ஒருவரையும் ஹிம்சிக்கலாகாது. பரஹிம்சையை யொழிப்பதே புத்தமதத்தின் முக்கிய கருத்து. பரஹிம்சையை தனக்குவரும் இம்சையாக நினைத்தல்வேண்டும். அப்படி நினைப்பவனே அவரை பின்பற்றியவன். ஆனதால் புத்தரது அபிப்பிராயப்பிரகாரம் புத்தியே ஆத்மா. இதில் யோகசாரி, மாத்மிகர், வைபாஷிகரென அனேகபேதம் உண்டு. விரிவஞ்சி விடுத்தனம்.

பூர்வமீமாம்ஸகர்:—புத்திக்குமேல் நான் என்று ஒரு கர்த்தா ஒருவன் சரீரத்தில் இருக்கிறான். அவன் ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறாய் விளங்குகிறான். அவனே ஜீவன். அவன் செய்யும் கருமங்கட்குத் தக்கவாறு பலன்களைப் பெறுகிறான். ஆனதால் வேதத்திற்குரிய கருமத்தையே இயற்றவேண்டும். கருமத்தைவிட்டவன் பிரஷ்டனே. காயியற்றும் கருமமே பலனை யளிக்கும் வல்லமையுடையது. இந்திராதிதேவர்கள் கருமத்தை நிமித்தமாகக்கொண்டே பலனை யளிக்கிறார்கள்.

வேதம் முழுவதும் கருமத்தையே கூறுகின்றன. வேதவாக்கியங்களுக்கு கிரியாபரமாகவே அர்த்தம் செய்யவேண்டும். அக்கியார்த்தங்களைச் செய்யின் அனர்த்தமேயாகும். ஆனதால் கருமத்தையியற்றினால் ஜீவன் சொர்க்கலோகங்களிற் சுகத்தையநுபவிக்கிறான். ஆனதால் சரீரவிலக்ஷணனான ஜீவனுக்கு பர





லோகத்திலும் கதியுண்டெனக் கூறுகிறார்கள். இதன் பிறகு கபிலமஹரிஷியானவர் புத்தியையும் ஜீவனையும் பார்க்கிலும் வேறான தத்வங்களை ஜகத்காரணமென்கிறார். அது யாதெனில் இவ்வுலகமானது சத்வ ரஜஸ் தமோ குணங்களுடைய பரிணாமமாகவே இருக்கின்றன. அவைகளின் சமமான அவஸ்தைக்கு பிரதானமென்று பெயர். அப்பிரதானமானது ஜீவனான புருஷனுக்கு போகத்தை கொடுக்கும்பொருட்டு சுதந்திரமாய் பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கின்றது. அதுவே அழிக்கிறது. அதனாலேயே இரக்ஷிக்கப்படுகிறது.

உதாரணம்:—பிரம்மமானது ஜெகஜீவ பரங்களாயத் தோன்றுகிறது. ஜெகமென்றால் உலகம். ஜீவன் என்றால் உலகத்தில் வாழும் பிராணிகள். பரன் என்றால் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடாத்தும் பிரம்மவிஷ்ணு ருத்திரர்கள். ஜெகஜீவபரங்களெல்லாம் உண்மையில் பிரம்மத்தின் தோற்றமேயன்றி வேறல்ல. இவ்வாறிருக்கப், புறமதத்தார் ஒருவர் பள்ளியில் வாசிக்கும் மாணாக்கர்களை நோக்கி உங்கள் மதத்தில் மூன்று கடவுளிருக்கிறதே கடவுள் ஒன்றாயிருக்க மூன்று என்று எப்படிச் சொல்லலாமென கேட்கிறார்கள். இதற்கு சமாதானம் சொல்லத்தெரியாத இந்துப்பிள்ளைகள் ஆச்சரியத்தால் விழிக்கின்றனர். இத்துடன் விடுகிறார்களா புறமதஸ்தர்கள். பிரம்மாதானே உலகிலுள்ள சகல மனிதர்களையும் சிருஷ்டித்தவர். ஸரஸ்வதியையும் அவர்தானே சிருஷ்டித்தார். அப்படியிருக்க, அவர் தம் பெண்ணாகிய ஸரஸ்வதியைத் தாமே கல்யாணஞ் செய்துகொள்ளலாமா என்னும் அஸந்தர்ப்பமான கேள்விகள் கேட்கிறார்கள். முற்கூறியபடி பிரம்மமானது திரிமூர்த்திகளாய்த்தோன்றி சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் முத்தொழிலை நடத்துகின்றதென்று வைத்துக்கொள்வோம். சிருஷ்டிப்பதற்கு வித்தை அவசியம். ஆகலின் பிரம்மாவானவர் வேதமாகிய வித்தையைக் கொண்டிருக்கிறார். வித்தையைத்தான் ஸரஸ்வதியென்கிறோம். ஸரஸ்வதி

யென்பது கையும் காலும் தலையுமுள்ள ஓர் ஸ்திரீயைக் குறிக்க வில்லை. வித்தையையே குறிக்கிறது. அவனுடைய நாக்கில் ஸரஸ்வதி யிருக்கிறாளெனின், அவனுடைய நாக்கில் ஸரஸ்வதி யென்று 150 பவுண்டு நிறையுள்ள ஓர் பெண்ணிருக்கிறாளென்று அர்த்தமாகுமா? இப்படித்தான் பிரம்மாவின் நாக்கில் ஸரஸ்வதி யிருக்கிறாளென்பதும், பிரம்மாவுக்கு ஸரஸ்வதி மனைவியென்பதும். இந்த தத்வத்தை யறியாமல் புறமதஸ்தர்கள் அவலக்ஷணமான கேள்விகள் கேட்கின்றனர். இக்கேள்விகள் ஆபாஸமென்பதை அறியாமல் பள்ளிப்பிள்ளைகள் வீணாய்க் கெட்டுப்போகின்றனர். ரக்ஷிக்கும் தொழில் விஷ்ணுவுக்குண்டு. ரக்ஷிக்கவேண்டுமானால் பணமிருக்கவேண்டும். பணத்தை லக்ஷ்மியென்கிறோம். இப்போதும் பணக்காரனை லக்ஷ்மி புத்திரன் யென்கிறோம். நிஜமாகவே லக்ஷ்மி யென்பவள் ஓர் பெண்ணாகவும் அவள் விஷ்ணு என்னும் புருஷனுக்கு மனைவியாகவுமிருந்தால் அவ்விஷ்ணுவுக்குச் சொந்தமான வைகுண்டத்தை லக்ஷ்மீ புத்திரர்களாகிய பணக்காரர்களன்றோ பங்கிட்டுக்கொள்ளுவார்கள். ஆகலின் லக்ஷ்மியென்பது தனத்தைக் குறிக்கும் சொல்லென்றறிக. இம்மாதிரியே ஸம்ஹாரம் செய்வதற்குக் கையில் பலம் வேண்டும். அதாவது சக்தி அவசியம். இந்த சக்தியைத்தான் ருத்திரனுக்கு மனைவியென்று சொல்லுகிறோம். மேற்கூறியவற்றால் ஸரஸ்வதி லக்ஷ்மி பார்வதி யென்னும் பதங்களெல்லாம் முறையே வித்தையையும், செல்வத்தையும், சக்தியையும் குறிக்கின்றனவென்று புறமதஸ்தர் கண்டுகொள்வாராக. முதலில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிரம்மமே ஸரஸ்வதி, அந்த பிரம்மமே லக்ஷ்மி. அந்த பிரம்மமே பார்வதி. அந்த பிரம்மமே திரிமூர்த்திகளும். அந்த பிரம்மமே சகலமும். ஆனதால் இந்த தத்துவத்தை இந்து மாணாக்கர்கள் தெரிந்துகொள்ளுவார்களாக.

## பஞ்சபூதங்கள்.

பரம்பொருளாகிய கடவுளிடத்திலுண்டானது பஞ்சபூதங்கள், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்.





பிருதிவி—பூமிப்பகுதி, மறைவுதரும்பொருள்.

அப்பு—தண்ணீர் பூமியை யளக்குவிக்கும்பொருள்.

தேயு—ஜோதி, ரூபம் விளக்கும்பொருள்.

வாயு—தீயுறுகாற்று, உள்ளதாகவிளக்கும் பொருள்.

ஆகாசம்—விளக்குவதாக உள்ளபொருள்.

இவ்வுலகமும், உலகிலுள்ள பிராணிகளும், பஞ்சபூதங்களாக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரபஞ்ச கர்த்தனாகிய பரஞ்சோதியைச் சுற்றிலும் அவருடைய சக்தியாலுண்டாக்கப்பட்ட பஞ்சபூதங்கள் நிறைந்திருக்கின்றனபோலவே, சரீரத்துள்ளிருக்கும் அவரது அணுப்பிரமாணமாகிய ஆத்மாவைச் சுற்றிலும் பஞ்சபூதங்கள் நிறைந்திருக்கின்றன. ஆகையால் சரீரபோகத்தைக்காக மாத்திரம் பஞ்சபூதங்களுண்டாக்கப்பட்டிருக்கின்றன.

முதல்வனாகிய ஆத்மா சரீரத்தைவிட்டு பிரிந்துவிட்டால் அதைச்சுற்றியிருக்கும் பஞ்சபூதங்களும் அடங்கிவிடும். ஆகையால், சரீரத்தை உயிர்ப்பிக்க ஆத்மாவும், போஷிக்க பஞ்சபூதங்களும், கன்மங்கள் செய்விக்க மனது பஞ்சேந்திரியங்கள் முதலிய அவயவங்களும் பிரதானமாகின்றன. சரீரத்திலுண்டாகும் வேறுபாட்டால் மனத்திற்கு விகாரமுண்டாகிறது. அவ்விதம் சரீரத்தில் வேறுபாடுகளுண்டாவதற்கு காரணம், பஞ்சபூதங்களின் மிகச்சேர்க்கை அல்லது மிகக்குறைச்சலாம்.

உதாரணம்:—பிருதிவி பூதத்தின் மிகச்சேர்க்கையால் கட்டிச்சிரங்குகளுண்டாகின்றன. அப்புவின் மிகச்சேர்க்கையால் நீர்வியாதி அல்லது வீக்கங்களுண்டாகின்றன. தேயுவின் மிகச்சேர்க்கையால், மலச்சிக்கலும் வீக்கங்களுண்டாகின்றன. வாயுவின் மிகச்சேர்க்கையால் வயிற்றுவலி வீக்கம் முதலியவைகளுண்டாகின்றன. இந்த நான்கு பூதங்களுமில்லாதவிடத்தில் சூம்பலுண்டாகி அவ்விடம் செத்துப்போகிறது. இப்படிக்கில்லாமல், பஞ்சபூதங்கள் நிதானமாகயிருந்தால் மாத்திரம் சரீரம்

சரியான ஸ்திதியிலிருக்கிறது. சற்றேறக்குறைந்தால், மேற்கூறிய வியாதிகளுண்டாகின்றன. இவ்வித பஞ்சபூதங்களின் மிகச்சேர்க்கையால், சரீரத்திலுள்ள மின்னல்சாரந் தடைபட்டு அதனுடைய வேகம் குறைவதுமுண்டு. இப்பேர்ப்பட்ட வியாதிகளை நிவர்த்திக்க, பஞ்சபூதங்களின் மிகச்சேர்க்கையை சாப்பிடக்கூடிய ஔஷதம் சாப்பிடவேண்டும். அல்லது பஞ்சபூதங்களுக்குத்தக்கவாறு மந்திரப் பிரயோகத்தால் மிகச்சேர்க்கையை குறைத்தால் மின்னல்சாரம் எப்போதும்போல் வேகமாய்ப்பரவி ஓடும்படி சிகிச்சை செய்கிறவனின் மின்னல் சாரத்தை நோயாளியின்நோயுள்ளவிடத்திற்செலுத்தியாவது வியாதிகள் நிவர்த்திக்கக்கூடும். ஆகையால் சிகிச்சை செய்கிறவன் நோயாளியின் எந்தயிடத்தில் எந்த பூதத்தால் வியாதி உண்டாயிற்றென்று அறிந்துகொண்டு அதற்குத்தக்கவாறு மந்திரப்பிரயோகம்செய்தால்வியாதி நிவர்த்தியாகிவிடுமென்பதிற்சந்தேகமில்லை.

## ஈசுவரனும் ஜீவனும்.

இவ்வுலகில், ஊர்வன, நடப்பன பறப்பன செயற்கொண்டிருப்பனவாகியஜீவராசிகள்எண்ணிறந்தன. இவைகளொவ்வொன்றும் ஒவ்வொரு சரீரத்தை எடுத்தவுடன் அதை இரக்ஷிப்பதற்காக பிரயாசைப்படுகின்றன இவைகள் அஞ்ஞானத்தில் மூழ்கிச்சரீரத்தையே நாமென்றெண்ணி இதை ஒழிந்தால் தானே போய்விட்டதாக வெண்ணி மலைகின்றன. அதுகண்டு தாயுமானவரும்,

நானென்றுமோரறுந்தை யெவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நானாவாகித்
தான்வந்து தொடருமித்தால் வளரும் ஜன்பச்சா
கரத்தின் பெருமையெவர் சாற்றவல்லார்
ஊனென்றும் மூடலென்றுங் கரமென்று
முன்னென்றும் புறமென்றுமொழியானின்ற
வானென்றுங் காலென்றுந் தீயென்று





மண்ணென்று மலையென்றும் வனமதென்றும்
மலைபாக்காட்சி கண்காணமையாதி.
மறப்பென்றுநினைப்பென்றுமாயாவாரி
யலை யலை பாடிக்குமின்பதுன்பமென்று
மதைவிளைக்கும் வினைகளென்று மதனைதீர்க்கத்
தலைபலவாஞ் சமயமென்றுந் தெய்வமென்றுஞ்
சாதகரென்றும் மதற்குச்சாக்ஷி யாகக்கலைபல
வாநெறியென்றுந் தாக்கமென்றும்
கட்டுருதானமனை யெண்ணிக்காணும்போதும்

காணரியவெல்லான்றான் கட்டுக்கடாக விளையுமென்று கூறியபடி. சரீரத்தில் நான் என்ற அஹந்தை தோன்றியவுடன் இச்சீவ பாவத்திற் சாக்ஷியாக விளக்கும் பரமேசுவரனை மறந்து. உடல், உயிர், காரணம், உலகம் முதலியவனைத்தும் ஒன்றுபோக வொன்றாய் தோன்றிச் சமாசாரத்தைச் சாகரமாய்ப் பெருக்கி அதனிடத்துச் ஜீவனை யமுத்திவிடுகிறது. அந்தோ இதன் பெருமையை எவர் கூறவல்லார். ஜீவர்கள் அகந்தையாலன்றோ அநேக ஆபத்துக்களில் மூழ்குகிறார்கள். கோசகாரப்புழுவானது தனது வாயினது கபத்தால் நூலையியற்றி அதனால் ஓர் கூடைச் சுற்றி அதனுள்ளிருந்து வெளிக்கிளம்ப வழியறியாது அதினிடத்தே மாள்வதுபோற் ஜீவர்கள் அநேகஜென்மங்களிற் செய்த கர்மவசத்தால் சரீரங்களையடைந்து இவைகளை நிலையென்றெண்ணி உண்டு உடுத்தாரங்கி தொழிலிற் பிரவர்த்திக்கின்றனர். ஒரு நிமிழமாவது ஒழியாமல் சரீரத்தை வளர்ப்பதற்கு இதிலுள்ள அற்ப ஸ்திரீயாதி இன்பங்களை யனுபவிப்பதற்கும் காலத்தை ஒழிக்கின்றனர். தோ அநாதிகாலந்தொட்டு பரம்பரையாய் அஞ்ஞானமென்னும் கொடியிலுண்டான காய்கள்போல் பழுத்துப்பழுத்துச் சரீரங்கள் வீழ்கின்றன. இங்ஙனம் வீழ்ந்துகொண்டிருப்பதை நேராக பார்த்திருந்தும் அவரவர்கள் தமதுசரீரத்தை நிலையென்றெண்ணி

விவகரிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் சுடுகாட்டில் பிணங்கள் சுடப்படுகின்றன. அதைக்கொண்டும் நமது சரீரம் நிலையென்று நினைப்பது ஆச்சரியமன்றோ! ஜீவன் தன்னை எவ்வென்று அறிந்து கொள்ளாது மூழ்கிய மோஹமென்னும் சமுத்திரம் அலையடித்துக்கொண்டு இருக்கின்றன. இதில் பிறவி என்பதே யலை. இது கண்டே திருவள்ளுவரும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

என்றார். இம்மோஹமயமான பிறவிக்கடலைத்தாண்டுவோமாயின் இறைவனாகிய எம்பெருமானுக் கருணைத்தடங்கடலான பரமபதியை பஜித்து, அவனடியை அடையவேண்டும். அவனிடத்தே சேராதார் இக்கடலைத்தாண்டார். அவரோ ஒவ்வொரு நிமிஷத்திலும் நாம்செய்யும் செய்கைகட்கெல்லாம் அந்தர்யாமியாயிருந்து நடத்துகிறார். அவருக்கு எப்பொழுதும் நம்மிடத்தில் காருண்யம் மிகுதியாயிருக்கிறது. நம்மை எவ்வழியிலும் நல்வழியிற் றிருப்பவென்றே வேத சாஸ்திரம்.

## பிரம்மஞானம்

மானிடர்கள் அடையத்தகுந்த புருஷார்த்தங்களில் மேலானது மோக்ஷம். மோக்ஷம் ஆக்க அபாரவடிவாக பெற்றுள்ள பரமானந்தமேயாம். அந்த மோக்ஷம் ஆத்மஞானத்தினால் உண்டாகின்றது. ஆத்மஞானமுள்ளவனே ஆத்மாவாகிறான்.

அப்பேர்கொற்ற ஆத்மா ஜீவாத்மா பரமாத்மாவென இருவகையாகப்பிரிக்கப்பட்டுள்ளது. ஜீவாத்மா தேகவிலக்ஷணமாயும், தான் கர்மத்தைச் செய்கிறவனென்றும், தான் போகத்தை அனுபவிக்கிறவனென்றும், தான் சுகதுக்கமுள்ளவனென்றும், நானென்றுமுள்ள ஞானத்திற்கு விஷயமாயுள்ளவன். ஒவ்வொரு சரீரமும் வேறுபட்டிருப்பதனால் ஜீவாத்மா என்னிறந்தவனாகும். அந்த





ஜீவாத்மாவிற்கு சரீரம் கர்மத்தினால் உண்டாகிறது. அந்த கர்மம் புண்ணிய கர்மமென்றும், பாப கர்மமென்றும், மிச்ரகர்மமென்றும், மூன்று வகைப்பட்டுள்ளன. புண்ணிய கர்மத்தினால், சுகானுபோகங்களுக்குச் சாதனமாயுள்ள, தேவசரீரம் முதலியனவாயுள்ளன. பாபகர்மத்தினால் துக்கத்திற்குசாதனமாயுள்ள பசு பக்ஷி, மரம், முதலியனவாகிய சரீரமுள்ளன. மிச்ரகர்மத்தினால் சுகதுக்கமிரண்டிற்கும் சாதனமாயுள்ளமனிதசரீரமும் உள்ளன. நித்ய, சுத்த, முக்த ஸ்வபாவமுள்ளவனும், எல்லாவற்றையும் அறிந்தவனும், ஸமஸ்த சக்திகளுமுள்ளவனும், காருண்யனும், சகலபுவனங்களையும் உண்டாக்க வல்லவனும் எண்ணற்கரிய மகத்துவமுள்ளவன் யாவனோ அவனே பரமாத்மா. அப்பேற்கொற்ற பரமாத்மா ஆகாயத்தைப்போல ஸர்வவியாபியாயிருப்பதனால் எங்கும் நிறைந்த பரம்பொருளாகவிருக்கிறார். அப்பேற்கொற்ற பரமாத்மா பஞ்ச பூதங்களாலும், இன்னும் அவைபோன்ற ஜடவஸ்துக்களாலும் செய்யப்பட்ட சரீரமில்லாததினாலே எங்கும் காணப்படுகிறதில்லை. அப்பேர்கொற்ற ஈஸ்வரன், ச்ருதி, ஸ்மிருதி, புராணப் பிரமாணங்களினாலே நன்கு விளங்குகிறார்.

வேதவாக்கியங்களின், பிரமாணங்களைச்ருதியாகவும், வேதவாக்கியங்களுக்கு விரோதமில்லாமலும் வருணாச்ரம தர்மங்களை விளக்கியுள்ளதாயும், மனு, பராசரர், யாக்ஞவல்கியர், முதலான மஹான்களாலே செய்யப்பட்டுள்ளதே ஸ்மிருதியெனவும், பல மஹாராஜாக்களுடைய சரித்திரத்தை அனுசரித்து பகவத்ஸ்வரூபத்தைவிளக்குவது இதிகாஸமெனவும், சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மனுவந்தரம் முதலான விஷயத்தைவிளக்குவது புராணமெனவும் சொல்லப்படும். இவ்வுலகம் கர்த்தாவையுடையது. (பிரதிக்ஞை) காரியமிருந்தால் (எது குடம்போல்) குடமானது தானேயுண்டாகாமல் குயவனால் உண்டாக்கப்படுவதுபோல் காரியமாகிய இவ்வுலகம் கர்த்தாவினால் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும். இதுவே ஈஸ்வரன் ஒருவன் உண்டென சித்திக்கிறது. பரமாத்மா

ஒருவன்தான். அவனுக்குச்சரியானவர் இல்லை, ஒருவன் அப்படியே ஸர்வ பூதங்களுக்கும் அந்தராத்மாவாயிருக்கிறானென்றும் பிரமாணங்களின்படிக்கு அந்தபரமாத்மா ஒருவனேயிருந்த போதிலும் ஸத்வரஜஸ் தமோ குணங்களால் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்து பிர்மா, விஷ்ணு, ருத்ரன், என்கிற நாம ரூபங்களுடன் விளங்குகிறார்.

ஏகவஸ்துவாகிய பகவான் ஜநார்த்தனனே ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்வதால் பிர்மா, விஷ்ணு, சிவன் என்னும் பெயர்களையுடைய சரீர பேதங்களினால் உலகத்தை ஸ்ருஷ்டிக்கிறான் இரக்ஷிக்கிறான் ஸம்ஹரிக்கிறான். அப்படிப்பட்டவனையும், ஆதிதேவனையும், உயர்ந்தவனுமயிருக்கிற பரமபுருஷனை ஒருவன்மனதில் தியானஞ்செய்து மோக்ஷமடைகிறானென விஷ்ணுபுராணமும், ஒரே மண்ணு கடைபலபாண்டங்களாயிருப்பது போலும், ஒரே ஸ்வர்ணம் அநேக ஆபரணங்களாயிருப்பதுபோலும், ஒரே தன்மையுள்ளவற்றின் பால் அநேக பசுக்களிலிருந்து உண்டாகுவது போலும், ஒரே பரமாத்மா அநேக தேகத்திலிருக்கிறார் என பத்மபுராணத்திலும் கூறியிருக்கின்றன. அப்பேற்பெற்ற பரமாத்மா இராமகிருஷ்ண அவதாராதிகளில் பிரத்தியக்ஷமாயிருக்கின்றார் என்பது எல்லோராலும் அறியப்பட்டிருக்கிறது. அப்பேற்பெற்ற பரமாத்மா துஷ்ட நிக்கிரஹஞ் சிஷ்ட பரிபாலனஞ் செய்து தர்மத்தை நிலைநிறுத்துவதின்பொருட்டு அவதரிப்பதாக கீதையில் சொல்லியிருக்கிறது. மனிதனுடைய சிரேயஸ்ஸுக்கு சாதனமாயுள்ளது தர்மமே. ஆகையால் ஆரியர்களாகிய நாம் பிர்மஞானத்தை அடைவதற்குரியமார்க்கத்தை நாடுவது நலம்.

## நம் வேதம்.

ஆத்மாக்களுக்கு முன்பு இகபர சுகத்தைத்தந்து, ஜனனமரண துக்கத்தினின்றும்விடுபட்டு பரமுக்தியைத் தரும் சாஸ்





திரங்களெல்லாவற்றிலும் முதன்மைபெற்றது வேதம். வேதம் என்னும் சொல் வித் என்னும் தாதுவினின்றும் தோன்றியது. அதன்பதப்பொருள் அறிதற்கருவியாம். அவ்வேதம் அஞ்ஞானமென்னும் பேரிருளிலழுந்திக்கிடக்கும் ஆன்மகோடிகள் அவ்வஞ்ஞானத்தினின்றும் நீங்கிப்பேரறிவுபெற்று உஜ்ஜீவிக்கும்படி பரம கருணாநிதியாகிய பரமேஸ்வரனால் அநாதியாய் அருளிச் செய்யப்பட்டது.

அது இருக்கு, யஜுர், ஸாம, அதர்வணம் என நான்காகும். அவற்றுள் இருக்குவேதம் இருபத்தோரு சாகையும் யஜுர்வேதம் நூற்றொரு சாகையும், ஸாமவேதம்ஆயிரம் சாகையும், அதர்வணவேதம் ஒன்பது சாகையும், உடையன. இவை நான்கும் கர்மாநுஷ்டானங்களையும், ஆத்யான்மிக ஞானத்தையும், எடுத்துக் கூறும்.

ருக் என்றால் மந்த்ரம். யஜுர் என்றால் கட்டளை, சாமம் என்றால் ஸ்துதி, அதர்வணம் என்றால் எங்கும் கலந்தது. அதாவது மேற்படி மூன்று வேதங்களிலும் கலந்திருப்பதாம்.

வேதமானது சிக்ஷை, வியாகர்ணம், நிருத்தம், சந்தஸ், ஜோதிடம், கல்பம் என ஆறு அங்கங்களுடையது. சிக்ஷையாவது வேதத்தின் ஸ்வரங்களையும் உச்சாரணலக்ஷணத்தையும் சொல்லுவது. வியாகர்ணமாவது வேதத்தின் பதலக்ஷணத்தைச் சொல்வது. நிருத்தமாவது வேதத்தின் பதங்களின் விவரணம் கூறுவது. சந்தஸாவது வேதத்தின் பலதுறைப்பட்ட வாக்கியங்களுக்கு இன்னது இத்தனை இத்தனை எழுத்துடையன என அக்ஷரவரையறை கூறியது. ஜோதிடமாவது வேதத்திற் சொல்லப்பட்ட வைதிக கர்மங்களைச்செய்யவேண்டிய காலத்தைசொல்வது. கற்பமாவது வைதிக கர்மங்களைப் பிரயோகஞ்செய்யுமுறை கூறுவது. இவையாறும் வேதங்களை ஓதுவதற்கும் அவற்றின் பொருளை உணர்வதற்கும் உணர்ந்தவாறு ஒழுகுவதற்கும் அத்தியாவசியமாக முன்பு

கற்கவேண்டிய சாஸ்திரங்களாம். அல்லாமல் அவ்வேதம் என்றும் ஓர் எள்ளளவேனும் மாறாமலும் மாற்றப்படாமலும், விலை பெறும்படி (அரசர்க்கு மெய்க்காப்பாளர்போல) காத்துநிற்பவைகளாம்.

வேதமானது கன்மகாண்டம் ஞானகாண்டம் என இருவகைப்படும். மற்றொரு வழியில் மந்திரம் அர்த்தவாதம், விதி, என, மூன்றுவேற்றுமைகளைப் பெற்றுள்ளது. அவற்றுள் கர்மகாண்டத்தில் யாகம் முதலிய கருமங்கள் கூறப்பட்டன. ஞானகாண்டத்தில் ஜீவாத்மாவானது பரமாத்மா அடையும் வழி. உபாசனையாதிய இவற்றைக் கூறுகின்றது. மந்திரமானது அவரவர் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களை விவரித்துக்காட்டுவது. அர்த்தமாவது கேட்பவர்களுக்கு எளிதில் விருப்பமுண்டாக அதிருபமாகச்சொல்லி அக்கருமங்களைச்செய்துசுகம்பெறத்தூண்டுவதாயிருப்பது. விதியோ காட்சி முதலிய பிரமாணங்களால் அறிதற்கருமையானபரம்பொருளை உணர்த்துவது.

வேதத்தில் சிருஷ்டிக்கிரமம், தெய்வ லக்ஷணம், ஆன்மலக்ஷணம், மன முதலிய அந்தக்கரண லக்ஷணம், பந்தலக்ஷணம், விடுதி லக்ஷணம் யோகமுறை ஞானமுறை முதலியனவெல்லாம் தத்வசாஸ்திரங்களுக்கும், தர்க்கசாஸ்திரத்திற்கும் மாறுபடாமல் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கூறுகின்றன.

வேதத்திற்கு அனேகபாஷ்யங்களும், ஸ்மிருதிகளும், புராணங்களும், இதிஹாஸங்களும், இருக்கின்றன. வேதத்திலுள்ள ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துக்குறைந்தாலும், அதிகப்படாமலும், மாற்றப்பட்டாலும், அவ்வாக்கியம் சுரத்தோடு ஓதுதற்கு இசையாது. அதுமாத்திரமா? பொருளும் கெட்டு மற்றைய நூல்களோடுமாறுகொள்ளும். அதுமாத்திரமா? வியாகரணத்துக்கும் பகையாகும். அதுமாத்திரமா சந்தஸ்ஸென்னும் எழுத்துக்கணிதநூலுக்குவிரோதப்படும். அதுமாத்திரமா நியாயசாஸ்திரத்திற்கு அசம்மதமாகும்.





வேதமானது ஆத்மாக்களுடைய கர்ம பரிபாகத்தையும்புத்தி தாரதம்மியத்தையும், சரீரபலாபலத்தையும், காலதேசவேறுபாடுகளையும் அநுசரித்து, அநேக பிரகரணங்களாலும்முக்தி அடையும் வழிபாடுகள் சொல்லுகின்றது. ஆகையால் அவரவர் தகுதிக்கேற்றபடி ஒழுகலாம்.

வேதம் வெகு விரிவாயிருப்பதால் வேதவியாசர் அதைநான்கு பாகமாக்கி ஒவ்வொருவேதத்தையும் ஒவ்வொரு இனத்தார் முன்னோதக்கற்க விதித்தனர். அவ்வாறே கற்று வருகின்றமையால் அதுகாரணமாகச் சிலர் ருக்வேதிகளென்றும் சிலர் யஜுர்வேதிகளென்றும், சிலர் ஸாமவேதிகளென்றும், சிலர் அதர்வணவேதிகளென்றும், அந்தணர்களில் சொல்லப்படுகிறார்கள். இதனால் மற்றவேதங்களைக் கற்கப்படாதென்பதல்ல. தங்களுக்குரிய வேதத்தைமுன்பு கற்கவேண்டுமென்பது கருத்து. அதர்வணவேதிகள் வடதேசத்திலிருக்கின்றார்கள்.

வேதத்தின் பிர்பாகமாகிய ஞானகாண்டமென்னும் உபனிடதங்கள், 10 தசோபனிடதங்களெனவும், 32 துவாத்திரியம் உபனிடதங்களெனவும், 108 அஷ்டோத்தர சதோபனிடதங்களுக்குச் சர்வாசாரியர்களும் பாஷியஞ்செய்திருக்கிறார்கள். அந்தத்தசோபனிடதங்களாவன — ஈசம், கேனம், கடம் பிரசன்னம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரியம் சாந்தோக்கியம் பிரகதாரண்ணியம், ஐதரேயங்களாம். இவ்வுபனிடதங்களில் ஜீவேஸ்வர ஜகங்களைப்பற்றியும் மோட்சமடையுமார்க்கத்தைப் பற்றியும் சாங்கோபாங்கமாகச் சொல்லியிருக்கின்றன.

வேதம் என்னும் பெயர் ஆரியர்களான நமது மூலசாஸ்திரத்திற்கே உரியது. மற்றவர்கள் தங்கள் மதத்திற்குச்சிறப்பாயிருக்குமென்று கருதி இத்தேசத்திற்கு வந்தபிறகு வைத்துக்கொண்டார்கள். மற்றவர்களுடைய மூலமான மதகிரந்தங்கள் வேறுபாஷைகளிலிருக்கின்றன. அப்பாஷைகளில் வேதமென்

றும் சொல்லுடையாது. வேதமென்னும் சொல் சமஸ்கிருதபாஷையானமையால் சமஸ்கிருதபாஷையிலுள்ள நமது ஆரியமத மூலக்கிரந்தத்திற்கே பொருந்துமென்பதாம். இன்னும் எவ்வளவோ வேதத்தைப்பற்றிச் சொல்லலாம். இவ்வளவு சிறப்புள்ள வேதத்தையும், அதனோடு ஒற்றுமையுள்ள சாஸ்திரங்களையும் அனுசரித்து, அவற்றிற் கூறியபடி யொழுகி, ஞானாகாச சொரூபியான பரப்பிரம்மத்தை அனுதினமும் பஜித்து மாயபாசத்தையொழித்துப் ப்ரகதி அடைவோமாக

## வேதாந்தம்.

வேதாந்த சாஸ்திரமென்பதற்கு வேதஸம்பந்தமான அல்லது இந்தியாவில் வழங்கும் புண்ணியமான சாஸ்திரமென்று மட்டும் அநேகம் ஓர் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். “வேதம்” என்பது யாதொரு புத்தகத்தையும் குறிக்கமாட்டாது. “வேதம் என்பதற்கு “ஞானம்” என்றும், “அந்தம்” என்பதற்கு முடிவு என்றும் பொருள். ஆதலின், வேதாந்தமென்பதற்கு “ஞானமுடிவு” என்பதே பொருள். அந்தசாஸ்திரம் ‘முடிவு” இன்னதென்பதையும் அந்த முடிவையடையும் வழி இன்னதென்பதையும் விளக்குவதால் அதற்கு “வேதாந்தசாஸ்திரம்” என்னப்பெயர் வாய்த்தது. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள ஒற்றுமையையறிவதே பலவகைப்பட்ட அறிவின் முடிவு. எந்த வஸ்துவை நாம் முடிவாய் அறிகிறோமோ அதுதான் ஸர்வவியாபியான ஆத்மா. அதுதான் கரையிலா ஞானக்கடல். பல்லாயிரம் மைல் ஓடிச்செல்லும் நதிகள், முடிவில் கடலிற் போய்ச்சேருவதுபோலப் பிரபஞ்சத் தோற்றத்தில் பலவழியில் சென்றலையும் அறிவு நதிகள், முடிவில் கரையற்ற அகண்டஸச்சிதானந்த பிரேமைக்கடலிற் போய்ச்சேருகின்றன.

இந்த ஒற்றுமையை யறிவதே சரியான எல்லா மதத்தினுடையவும் கருத்தாதல் வேண்டும். ஆரியரிஷிகள் அறிந்த அளவு





தெளிவாய் அறிந்தவர்களேனும், அவர்கள் வெளியிட்டதுபோல நிர்ப்பயமாய் வெளியிட்டவர்களேனும், வேறெந்நாட்டிலும் எக்காலத்திலும் நாம் அறிந்தமட்டில் மதஸம்பந்தமான சரித்திரத்தில் இல்லை. “ஸத் ஒன்றே. ஆனால் அதனையடையும்வழி பல” என்ற உத்கிருஷ்டமான கொள்கை, சுமார் சென்ற 5000 வருஷகாலமாக இந்தியா நாட்டிலேயுள்ளது. “உள்ளது ஒன்றே. அதனைப்பெரியோர்கள் பல பெயரிட்டழைக்கின்றனர்” (ஏகஸத்விப் ராபஹுதாவதந்தி) என்பதை வேதங்களுட் புராதனமான ருக்வேதத்தினுட் காண்கிறோம். அந்த ஸத்தை யூதர்கள் “ஜிஹோவா” என்றும், “தேவன்” அல்லது “பரமண்டலத்திலிருக்கும் பிதா” என்றும், மகம்மதியர்கள் “அல்லா” என்றும், ஜைனர்கள் “ஜினன்” என்றும், பௌத்தர்கள் “புத்தன்” என்றும் வணங்குகின்றார்கள், அதனையே இந்துக்கள் “பிரம்மம்” என்கிறார்கள். வேதாந்தசாஸ்திரமுழுதும் அவ்வடிப்படையான தத்துவத்தையே ஆதாரமாய்க்கொண்டுள்ளது. “பல பெயர்களால் வழங்கினும் உள்ள வஸ்துவொன்றுதான்” என்ற விஷயத்தை மற்றை மதங்களினும் அதிகமாக அது வற்புறுத்துகின்றது. த்வைதம், விசிஷ்டாத்வைதம் எனவழங்கும் பலவிதமான கொள்கைகளிலும் மற்றவைகளிலில்லாத அடிப்படை அதனிடம் காணப்படுகின்றது. அதனால் பலமதங்களையும் ஒப்பிட்டு உய்த்தறியும் கல்விமான்கள் இவ்வுண்மையைத் தெளியத் தொடங்கிவிட்டார்கள். ஆராய்ந்தறியின் உலகில் வழங்கும் பலமதங்களையும் தன்னுள் அடக்கிய ஓர் பொதுமதத்தை விளக்குவது வேதாந்தத்தின் இயல்பு. இன்னாரெனக் குறிப்பிடக்கூடிய ஒருவரையுமனுசரித்து அது ஏற்படாததால் ஸர்வஸம்மதமான இவ்விந்தையான இயற்கை இன்னும் விந்தையாகின்றது. ஒருவனை யாதாரமாகக்கொண்டு ஏற்படும் எந்தமதமும் எந்தசாஸ்திரமும் யாவருந்தழுவும் மதமாக இயைந்து வராது. எந்த ஸாஸ்திரமாயினும்மதமாயினும் யாவருந் தழுவுந்தன்மையதாய் இருக்கவேண்டி எவனேனுமொருவ

லைச் சிறிதும் குறிப்பிடாதிருக்கவேண்டியது இன்றியமையாததாகும். ஓர் மதஸ்தாபகர் இன்றியென்று ஏற்பட்டுவிட்டால், கிருஸ்துமதம், மகம்மதியமதம், பௌத்தமதம், முதலிய அந்தந்த மதங்களில் நாம் காண்பதுபோல் அவற்றையுண்டாக்கினவர் பெயரையும் மகிமையையுமட்டும் அநுசரித்து வருமல்லாது ஸர்வஸம்மதமாகமாட்டாது. இந்தப்பெரிய மதங்களைத் தழுவி நடப்போர் மதத்தின் தத்துவார்த்தங்களை மறந்து ஸ்தாபகர்களிடம் அபிமானம்வைத்து மற்றவற்றைக் கருதாதுபோகின்றார்கள். இதுவே மதஸம்பந்தமான சரித்திரங்களில் நாம் காணும் வரம்.

வேதாந்த விஷயமோ பலமுகமுள்ளது. தன்தெய்வமெனக்கொண்டாடிவணங்கவும் ஏதேனுமொருவிதக்கொள்கையிற்பற்றுவைக்கவும் இடங்கொடுக்கும். துவைதமதம், பூதமதம், கிருஸ்துமதம்,முதலிய மதங்கள்போன்ற துவைதம் அத்துவைதங்களிவைகள் அடிப்படை (அல்லதுமுதன்மையான) வியாபங்களும் அந்தப்பன்முகத்திலடங்கியுள்ளது.

விசிஷ்டாத்வைத பாகமோ பகவானுடைய ஸர்வவியாபகத்துவத்தையும், ஸர்வத்திற்கும் அப்பாலாயுள்ள தன்மையையும் போதித்திருக்க எல்லா சாஸ்திர கோட்பாடுகளையுமனுசரித்திருக்கிறது. 'பகவான் நம்மிடத்திலும் பிரபஞ்சத்திலும் விளங்குகிறார். நாம் இருப்பதும், நகர்வதும், வளர்வதும், உண்டாவதும், பகவானிடத்திலேயே. அவர் அநு நாமெல்லாம் அவர் புத்திரர்கள். நித்தியானந்தத்தின் திருக்குமாரர்கள்.''

இத்தகைய அபிப்பிராயங்களையெல்லாம் விசிஷ்டாத்வைதமானது தன்றுள்ளே அடக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், வேதாந்தத்தின் அத்வைதபாகமோ எல்லாவற்றினுமேம்பட்டது. சர்வோத்கிருஷ்டமானது. இவ்விதஆத்மாவின் அத்வைதத்தன்மையின் சிறப்பையும் உயர்வையும் அறியக்கூடிய புத்திமான்கள்





பிக்கிறேர. ஸகல சாஸ்திரங்களாலும் ஏற்படும் பிரஸ்னங்களுக்கும் முடிவாகிய முக்திக்கும் முறையே உத்தரங்களும் சாதனங்களும் இந்த அத்வைதத்தில்தான் நன்குபுலப்படுகின்றன. அத்வைத ஞானத்தினுல் தான் "நானும் என்பிதாவும் ஒன்று" என்பதை பரிஷ்காரமாக நிரூபிக்கக்கூடும். வேதாந்தமானது சாஸ்திரசம்பந்தங்களையும் மதக்கோட்பாடுகளையுந் தழுவி நிற்பது. ஒரிக்தேசத்திலும் வெவ்வேறே சாஸ்திரக்கொள்கையிலிருப்பது உண்மையே. ஆனால் அவைகளிலொன்றேனும் மனிதனுக்கு மனத்தில் நிகழும் மதக்கோட்பாடுகளுக்கு இணங்கிவருவதில்லை. நிர்விகற்ப ஸமாதி (பிர்மானந்தம்) அடைந்து அஞ்ஞானம் தன்னைக்கருதல், மற்றுமுள்ள துர்க்குணங்களை விலக்க எப்படி வேதாந்தசாஸ்திரம் எளிதாய் புகட்டுகின்றது. இனிவருகுங்காலத்தில் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும் எல்லாவுண்மைகளுக்கும் தன்னிடத்தில் போதுமான இடங்கொடுக்கின்றது. ஒவ்வொரு மதத்திற்கும் முடிவில் லக்ஷியமான வஸ்து எதுவோ அதற்கு இன்னதுதான் வழியென்று விதிக்காதது வேதாந்த சாஸ்திரத்தின் மற்றோர் விசேஷம். இன்னும் விசேஷம் யாதெனில், மனிதர்கள் பலவாறான தன்மையோடிருப்பதால் அவரவர்கள்மனோபாவத்திற்கேற்ப பொருந்திய வழியைக்காட்டுகிறது. மனிதர்கள் அவரவர்கள் மனோபாவத்திற்குத்தக்கபடி நான்கு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்ட அபிப்பிராயங்களுள்ளும் சிலமனிதர்களும் வந்தடங்குவார்கள். ஒவ்வொரு வகுப்பினரும் அவர்களுக்குத்தக்கபடி மேன்மையாய் நடக்கக்கூடியவழிகளையும் காட்டுகிறது. ஒவ்வொருவழிக்கும் ஸம்ஸ்கிருதத்தில் யோகம் எனப்பெயர். அவற்றுள் முதலாவது கர்மயோகம் எனப்படும். அது சுறுசுறுப்புள்ளவர்களுக்கும் தொழில்புரிய மனமுள்ளவர்களாய்ப் பிறர்க்குதவிபுரிய எப்பொழுதும் ஏதேனும் ஒப்பிடச்செய்யத் தயாராயிருக்கப்பட்டவர்களுக்குமாக ஏற்பட்டுள்ளது. சுருக்கச் சொல்லின், ஸதா உழைக்கத்திறமுடைய ஆண்பாலாருக்கும்பெ

ன்பாலாருக்கும் இக்கர்மயோகம் ஏற்பட்டிருக்கிறது. கர்மயோகத்திஞல் கர்மத்தின் உட்கருத்தையும் ரகசியத்தையும் அறியலாம். தினந்தோறும் நாம் செய்யும் எத்தொழிலையும் எவ்வாறு பலாபேக்ஷையில்லாத கர்மமாகச்செய்து கொள்ளலாமென்பதை இப்பிறப்பில் கர்மமட்டுமே யுணர்ந்து எவ்வாறு முக்தியையடையலாமென்பதையும் கர்மயோகம் நமக்கு நன்குணர்த்துகின்றது. உழைக்கும் மனமுடையோர் அற்பசிரம மெடுத்துக்கொண்டால் பெருந்தொழிலையும் முடிக்கலாமென்பதைக் காட்டுவதால் அனுபவத்திற்கும் வரக்கூடியது. அவர்களுக்கு மிகவும் இன்றியத்திற்கும் வரக்கூடியது அவர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. ஓயா அலுவலிஞல் இந்நாட்டில் பெரும்பாலோரது மனத்துயரஞ் செறிபோகின்றது —மனவலிமையின்மையே இதற்குக் காரணமன்றோ? கர்மம் எவ்வாறு செய்யவேண்டுமென்றும், சகிப்புத்தையறிவதற்கு மனவலிமையை வினை விரைவிடமைப் பூலையும் நிடிக்கச்செய்யலாம். கர்மயோகம் மேற்கூறிய உண்மைகளைவெளித்து விளக்கி சிரத்திக்கிரசக்தியையடைய வழியைக்காட்டுகின்றது. இரண்டாவது, பக்தியோகம். அது மனவுருக்கமுள்ளவர்களுக்கே யேற்பட்டது. சாதாரணமான உருக்கம் எவ்வாறு உயர்ந்த பக்தியுருக்கமாய்ப் பெருகி எல்லா மதங்களின் முடிவினது ஆனிலை யறிவதற்கு எவ்வாறு நம் யுக்திகளைக்க வழி காட்டுகிறதோ அப்படி மற்றவைகள் காட்டுவதில்லை. யுக்திக்கொவ்வாத எதையேனும் அல்லது தர்க்க முதலான சாஸ்திரங்களுக்குப் பொருத்தமில்லாத எதையேனும் ஏற்றுக்கொள்ளும்படியாவது, அனுபவிக்கும்படியாவது வேதாந்த சாஸ்திரம் சொல்லுவதேயில்லை. இந்தியாவிலோ தர்க்கம் கலைகள் மற்றவைகளும் ஒன்றைவிட்டொன்று பிரியக்கூடாத சம்பந்தமுள்ளவைகளென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இதனுல்தான் புராதனமாயுள்ள வேதாந்த சாஸ்திரங்கள் தற்கால மற்ற சாஸ்திரங்களுக்கும் ஒத்துவருமேயால்லாமல் சற்றேனும் விரோதமாயிருப்பதில்லை. பரிசோதனார்த்





தை சாதனமாகுமென்பதைக்காட்டுகின்றது. சுருக்கச்சொல்லின் பக்தியும் பிரேமையும் நிறைந்தவழியாம். பக்திமுறையின்னதென்று எடுத்து விளக்கி மானிடரிடம் செலுத்தும் அன்பு எவ்விதம் தெய்வத்தினிடம் மாறி இகபரமிரண்டிலும் பிறவிப் பயனை எவ்வாறு கொடுக்குமென்பதையுங் காட்டுகின்றது. மூன்ருவது ராஜயோகம். அது மனத்தை ஒரு நிலைபடுத்தித் தியானஞ்செய்யும் மார்க்கம். அதைப்பற்றிய விஷயமோ மிகவும் விஸ்தாரமானது. அது மனத்தைப்பற்றியதேயாம். அந்தயோகத்தால் மனத்தின் சக்தியை விருத்திசெய்து பிறர் மனநிகழ்ச்சியையறிதல், மனவலியால் நோயைத்தீர்த்தல், உலகத்தவரால் அற்புதங்களென்று சொல்லக்கூடிய எல்லாத் தொழில்களையும் புரிதல் கூடும். இந்த யோகத்தால் ஏசுகிறிஸ்துவும் அவர்களுடைய சீடர்களும் செய்ததாக தெரியவரும் சகல அற்புதங்களையும் நம் ஆரிய ரிஷிகள் இவர்களுக்கு வெகுகாலத்துக்கு முந்தியே செய்து காட்டியதுமன்றி இப்பொழுதும் செய்கின்றார்கள். இராஜயோகம் மனத்தின் வல்லமைகளையும் அதன் பகுதிகளையும் நன்ருகவெடுத்துக்காட்டி அவைகளைக்கொண்டு ஓர் சாஸ்திரம் உண்டாக்குகிறது. ஸ்வாஸலக்ஷணங்களையும் எடுத்துக்காட்டுகின்றது. பிராணயாம பழக்கத்தால் உண்டாகும் பயனை மேனுட்டில் மனவல்லமையால் நோயைத்தீர்க்குமவர்கள் அறியாமலிருக்கவில்லை. இராஜயோகம் மனவல்லமையும் அதனுலுடையும் சித்தியையும் செய்யக்கூடும். பல அற்புதங்களையும் சாஸ்திர முறைப்படி எடுத்தாளினும் அவ்வல்லமையடைவது பிரம்மஞானத்தையடைவதற்கு சாதனமாகமாட்டாதென்று வற்புறுத்துகின்றது. இவ்வாறு அற்புதச்செய்கைகள் பிரம்மஞானத்திற்கு பாதகமாகமாட்டாவென்று பரமோபதேசத்தை மனவலியால் நோயைத்தீர்க்குமவர்களும் இந்த நாட்டு கிறிஸ்துவஸாஸ்திரிகளும் நம் பரதகண்டத்துயோகிகளிடத்து கற்கவேண்டியதவசியமானவிஷயம். மனோசக்தி உருதிப்படுவதற்கு முன்பே அற்புதத்தியுள்ளவர்

களும் மதியீனர்களும் பிர்மஞானமேர்வழியைவிட்டு விலகுகிறார்கள். தன்னிடமுள்ள சொல்ப சக்தியால் வயிற்றுவலி முதலிய பிணிகளைத்தீர்க்கிறேனென்பதைக்கண்டு உயர்வான பிர்மஞானத்தையே பெற்றுவிட்டதாக எண்ணுகிறார்கள். அற்புதங்களைச்செய்தும் மனோவலியால் பிணிகளைத்தவிர்த்தும், வருவாய்க்குக் காரணமாக இச்சக்திகளை யேற்படுத்திக்கொள்வதும் பிர்மஞானத்தையடையப் பெரிய இடையூறென்று ராஜயோகம் முறையிடுகிறது. அந்த ராஜயோகத்தின் முக்கியமான கருத்து யாதெனில், அதையப்பியசிப்பவர்கள் மனத்தை இதரவழிகளிற் செல்லாது ஒருநிலை நிறுத்தித்தியானஞ்செய்ய மார்க்கங்களையும் உபாயங்களையும் கற்பித்து ஜீவாத்மா பரமாத்மாவுடன் கலந்து அகண்ட ஸச்சிதானந்தத்தை யனுபவிக்கும் உயர்ந்த பதவியையடையச் செய்வதேயாகும். நான்காவது ஞானயோகம்; இது ஐயந்திரிபிலா அறிவாலும் பகுத்தறிவாலும் உண்டாகிய மார்க்கம். நுண்ணறிவும் பகுத்தறிவுமுள்ளவர்களுக்கே யேற்பட்ட வழி. வேதாந்த விஷயம் எவ்வளவு விஸ்தாரமானதென்பதை நாம் இப்பொழுது ஒருவாறு சிறிது அறியக்கூடும். பிர்மவித்தைக்குத்தகுதியான ஆதாரமிவையென எடுத்துரைக்கின்றது. சரீரம் போனபிறகும் ஆத்மா நித்தியமென்பதையும், அதனது நிலையின்னதென்பதையும், எவ்வித ஆத்மா நம்முடன் கலக்குமென்பதையும், அதன் பிறகு அது எவ்வாறு ஆகின்றதென்பதையும் பற்றகலா ஆத்மா கர்மவசப்பட்டுத் திரும்பத்திரும்ப எவ்வாறு பூமியில் மானிட ஜென்மமெடுத்துப் பிறக்கின்றதென்பதையும் அது நமக்கு உரைக்கின்றது. அது ஆத்ம தத்துவத்தை விளக்குகின்றது.

உலகில் ஆங்காங்குள்ள பெரிய மதாசாரியர்கள் சொல்லியுள்ள விஷயங்களை யேற்றுக்கொண்டு அவரவர்களை நல்லோராய் அவதார புருஷர்கள் என மதிப்புடன் உலக நன்மையின்





பொருட்டு இனிமேலும் அவதாரபுருஷர்கள் வரவிருக்கிறார்களென்பதையும் விளக்க அது இடந்தருகின்றது. வேதாந்தமானது நீதிசாஸ்திரத்தின் பிரதம கொள்கையையும் எடுத்து விளக்குகின்றது. நாம் ஏன் அறவோராயிருத்தல்வேண்டும்; ஏதோ ஒருவன் இதைச்சொன்னான் அதைச்சொன்னான் என்பதற்காகவன்று. இன்ன நூலில் இன்ன அத்தியாயத்தில் இப்படிச்சொல்லியிருக்கிறது என்பதற்காகவன்று; யாவும் ஒன்றேயன்றி இரண்டல்ல என்ற நியாயம் பற்றியே. பிறர்க்குத் தீங்கிழைப்பின் உனக்கே தீங்கிழைத்துக்கொண்டவனாவாய் நீ தீயவனாயின் உனக்கே கேடுவிளைத்துக்கொள்வதோடு பிறர்க்கும் கேடுவிளைப்பாய். பொருள் வேற்றுமை மாத்திரமேயன்றி நாமும் அயலோரும் உண்மையிலொன்றேயாதலின் அவ்வொற்றுமைப் பற்றியேதான். நாம் நம்போலவே பிறரையும் நேசிக்கவேண்டுமென்னும் உத்திருஷ்டமான உண்மையை நன்குணர்த்துகின்றது. வேதாந்தம் ஸகல மதங்களும் ஒன்றுக்கொன்று சற்றும் விரோதமின்றி ஒருமுகப்பட்டிருக்கவேண்டுமென்பதையும் காட்டுகின்றது. இவ்வேதாந்த ஆட்சி யெங்குளதோ அங்குள்ளயாவரும் மதஸம்மந்தமான கொடியவாதனைகளை வேரறுத்துவிட்டு மதக்குரோதமற்று ஸர்வசம்மதராய் ஒற்றுமைக்கொண்டாடுவார்கள். வேதாந்தத்திற்கு ஜாதிபேதமுமில்லை. அவன் இன்னவகுப்பைச் சேர்ந்தவனென்பதுமில்லை. அவன் இன்ன பெயரினனென்பதுமில்லை. அவன் கிருஸ்தவனுமல்ல, மகம்மதியனுமல்ல, பௌத்தனுமல்ல, ஜைனனுமல்ல, ஹிந்துவுமல்ல ஆனால் இவ்வெல்லாக் கொள்கைகளிலேயும் சேர்ந்தவன் கிறிஸ்தவன் கோயிலுக்கும், மகம்மதியர் பள்ளிவாசலுக்கும், இந்துக்கள் தேவாலயத்திற்கும் தாராளமாய்ப்போவான். அவன் பெயரில்லா உருவில்லா ஈறில்லாச் சகலமதக்கொள்கைகளையும் தன்னுள்ளடங்கிய ஸர்வஸம்மதமான மதத்தைச் சார்ந்தவன். இந்த ஸர்வஸம்மதமான

மதத்தை யூன்றி யூன்றிப்பார்க்கில் "எந்த மதத்திற்கும் வேதாந்தமிடம் கொடுக்கிறது. உண்மையில் அது எல்லாமதத்தையும் தழுவியுள்ளது." எவரெவர் எந்தெந்த வழியைப் பற்றினாலும் என்னையே வந்தடைகின்றார்கள். இடையில் பலவாறு தமாறிலும் நித்திய ஸத்தாகிய என்னையே முடிவில் அவ்வழியே வந்தடைகிறார்களென்று எல்லா ஸாராம்சமும் திரட்டி உருட்டியுள்ள ஸ்ரீ கிருஷ்ணபகவானது ஸ்ரீ கீதாவாக்கிய உபதேசம் ஸமஸ்தத்திற்கும் அடிப்படையாதலின் அவ்வாக்கியத்தின் கருத்துவேறெவ்வாறு இருக்கமுடியும்?

## சரீரம்

மனிதர்கட்குச் சரீரம் ஒரு வீடுபோலிருக்கிறது. ஒரு வீட்டிலுள்ள ஸம்பாரங்களுஞ் சரீரத்திலிருக்கின்றன. விசாரிக்குமளவில் மிக்க ஸம்ஸாரியான குடும்பமே. இக்குடும்பம் எப்பொழுதும் தரித்திரத்திலேயே மூழ்கியிருக்கிறது. தரித்திரமெனில் போகக்கூடியதில்லை. அழியாத் தரித்திர மமைந்திருக்கிறது. இதை எப்படிக் குடும்பமெனக் கூறுவோம்.

இச்சரீரம் இரண்டுகால் விறத்தி அதன்மேல் வீடுபோல் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வீடு சலிக்கக்கூடியது. வீட்டில் ஜன்னல்களிருப்பதுபோல காது கண் முதலியவைகளிருக்கின்றன. சாக்கடைகளைப்போல் மலத்வாரங்களிருக்கின்றன. கூரையைப்போல் தோலும் மயிர்களும் வளர்கின்றன. இவ்வீட்டிற்கு தினந்தோறும் பழுது பார்க்கவேண்டும் ஏனெனில், ஒருநாளுணவில்லையானால் இளைத்துவிடும். கண் பஞ்சடையும். காது கேளாது. கால் சோர்ந்துவிடும், ஆனதால் தரித்திரமன்றோ.

ஒருநாளுணவை யொழியென்றாலொழியாய்
யிருநாளைக்கேலென்றாலேலா — யொருநாளு
மென்னோவறியா யிடும்பைகூறென்வயிறே
யுன்னோடு வாழ்தலரிது.





எனக்கூறியிருக்கின்றாரன்றோ. ஆனதால், இவ்வீட்டை ஒவ்வொரு நாளும் பழுதுபார்த்து வரவேண்டும். அதிற் குடியிருப்பவர்கள் யாரெனில் ஜீவனென்ற மஹாப்பிரபு. இப்பிரபு எப்பொழுதும் சிற்றின்பப்பிரியர். இடைவிடாது தனது மனைவியை பிரியாமலே இருப்பர். மனையாளிட்டதே இவருக்குச் சட்டம். அவள் காலாலிட்டதை தலையால் வணங்கிக்கேட்டு கையாற் செய்வார். இவரை அவர் மனைவி மோஹமென்னும் மருந்தைக் கொடுத்து தன் வசப்படுத்திக்கொண்டிருக்கிறாள். அவள் எப்பொழுதும் காமவெறிகொண்ட காதகி. அவள் பெயரைச் சொன்னால் உலகெலாம் நடுங்கும். அவளாலேயே உலகமனைத்தும் மயக்கப்படுகின்றன. அச்சீமாட்டியாரெனில் மனோவதியே. அவள் தனக்காக மூன்று தாதிகளை வைத்துக்கொண்டிருக்கிறாள். அவர்களைக்கொண்டு கணவனுக்கும் தனக்கும் வேண்டிய சுகங்களைச் செய்துவைக்கிறாள். அவர்கள் யாரெனின், புத்தி, சித்தம், அகங்காரம். இக்குடும்பத்திற்குழைப்பதற்கே இவர்கள் அடிமைப்பட்டிருக்கிறார்கள். மனோவதி என்னும் ராணி தான் நினைத்த காரியத்தை உடனே புத்தியிடத்துக் கூறுவாள். அவள் சித்தத்தினிடத்தே கூறுவாள். அகம்பாவமும் அதை ஆமோதிப்பாள். ஒவ்வொரு விஷயமும் தனது கணவனோடு சுகிக்கத் தக்க முயற்சியையே தேடுவாள். எதைக்கண்டாலும் தனக்கு வேண்டுமென்று ஆசைப்படுவாள். அதைச் சம்பாதிப்பதற்கு கணவனைத் தூண்டுவாள். அவர் முடியாதபக்ஷத்தில் அவரை பலவழியிலுமலைத்திருமாக்கிருப்பாள். அவள் எப்போதும் கணவன் சொற்படி நடந்தறியாள். எப்பொழுதும் கணவனைத் தனது சொற்படி நடத்துவாள். நடக்காவிட்டால் தாதிகளைக் கொண்டு இம்சிக்கச் செய்வாள். அவளுக்கு பத்து புத்திரர்களுண்டு. அவர்களே கண், காது, மூக்கு, நாக்கு, துவக்கு, கை, கால் முதலியவைகளே. அவர்களை யொருபோதும் தனது கண

வன் சொற்படிக் கேழ்க்க விடுவதில்லை. எப்பொழுதும் தனது புத்திரர்களை தனது சுகத்திற்குழைக்கும்படி செய்துகொண்டிருக்கிறாள். இப்படியே சரீரமாகிய வீட்டை இடைவிடாது பரிபாலனம் பண்ணிவருகிறாள். ஒரு சரீரத்திற்குப் பழுதுவந்தால் தனது பரிவாரங்களோடு மற்றொரு சரீரத்திற்குச் சென்றுவிடுவாள். தனது புத்திரர்களை தனது சுகத்தின்பொருட்டு வெளியிலிருந்து கொண்டுவரும்படிசெய்வாள். அவைகளெல்லாவற்றையும் கணவனோடுசேர்ந்து தானும் புசிப்பாள். அவரென்றைக்கேனும் இவளிடத்தில் ரமிக்காமலிருக்கக்கண்டால் தனது புத்திரர்களை ஏவவிட்டு அவர் மறுபடியும் தன்னிடத்தில் ரமிக்கும் வரையில் இம்சிக்கச்செய்வாள். அவளைப்போல் பாதகி ஓரிடத்திலுமில்லை. அவள் நெஞ்சழுத்தம் ஒருவருக்கேனுமில்லை. ஈசுவரனையுமவள் மதியாள். ஆகாசத்திற் பந்தலிட்டு இந்திரஜால வித்தைகளையெல்லாம் செய்வாள். வேசிகளைப்போல் கணவனைப் பலமுறை வினயமாகக் கூறுவாள். அந்தோ அவள் வசப்பட்டு முழிக்காத ஜீவப்பிரபுக்களில்லை. எக்காலத்தும் மனோவதியின் மயக்கத்தால் மாண்டவரநேகர். அவள் ஒவ்வொரு விஷயங்களிலும் ஆசையோடு பரந்து கொண்டிருப்பாள். தனது கணவனது ஐசுவரியத்தை யெல்லா மொழித்து அவரை வெளியிற்கிளம்பவொட்டாமல் அந்தப்புறத்தை விட்டகலாமல் காவல் வைத்திருக்கிறாள். அவளிடத்தில் ஐந்து வீரர்களுண்டு. அவர்களாலேயே இக்கிரஹம் காக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அரண்மனைப்போன்ற பெரிய வீட்டின் நவத்துவாரங்களிலுமிருந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாரெனில் பிராணன், வியானன், அபானன், உதானன் இவர்களே. இவர்களிடத்தில் நாகன், கூர்மன், தேவதத்தன் முதலியோர் பணிவிடை செய்கிறார்கள், மனோவதி யென்னும் ராணியானவள் ஹிருதயமென்னும் அந்தப்புரத்திலிருந்து புத்தி முதலியோர்





கைகால் பிடிக்க, தனது கணவனோடு கொஞ்சிக் குலாவிக்கொண்டிருப்பாள். பிராணன் என்னும் சேவகன் எப்பொழுதும் ஜாக்கிரதையாய் அரண்மனைக்கபாயம் வராமற் காப்பாற்றுகிறான். அபானனென்போன் அன்னாசயத்திலிருந்து பாகாதிகளைச் செய்கிறான். உதானன் என்போன் ஆகாராதிகளை உள்ளே செலுத்துகிறான். ஸமானன் என்பான் அவர்கட்கு சமமாகபங்கிட்டுக் கொடுக்கிறான். வியானன் இவ்வரண்மனை முழுவதும் சுற்றிக்கொண்டேயிருக்கிறான். இவளுடைய பத்துப்புத்திரர்களும் அவர்கள் தங்களுக்குள்ள வேலைகளைச்செய்துவருகிறார்கள் எல்லோரும் தனது மாதவினிடத்தில் மிக்கப்பிரியமுள்ளவர்கள். அவரவர்கட்கு வேலையாதெனில் காது தனது மாதாவுக்கு வெளியிலிருந்து சொல்பவர்களுடைய வாக்கியங்களைக் கேட்டுக் கூறுகிறான். கண் வெளியிலிருக்கும் பதார்த்தங்களைப் பார்த்து அம்மாவுக்குத் தெரிவிக்கிறான். மூக்கு அம்மாவுக்கு உயர்ந்த வாசனை சாமான்களை கொண்டுபோய்க் கொடுக்கிறான். துவக்கு தன் கிரஹத்திற்கு வந்தவர்களையறிந்து உபசரிக்கிறான். நாக்கு தனது மதாவிற்கு ருசியான சாமான்களைக் கொண்டுபோய்க் கொடுக்கிறான். கால் தனது மாதா நினைத்த விடத்திற்கு வீட்டையே தூக்கிக் கொண்டுபோகிறான். கை தனது மாதாவிற்குவேண்டிய சாமான்களைக் கொண்டுபோய்க் கொடுக்கிறான். வாக்கு தனது மாதாகூறியதை பிறருக்குரைக்கிறான். வாயு வீட்டின் வெளிப்புறத்தில் கெட்ட சாமான்களைப் பெருக்கித் தள்ளுகிறான். ஸ்திரீகள் தனது மாதாவிற்கு ஆனந்தத்தை யடிக்கடி யுண்டுபண்ணுகிறான். இவள் தனது புத்திரர்களை மிக்க நயமாகக்குடும்ப வேலைகளை யொற்றுமையாகச் செய்யும்படியாக சிக்ஷித்திருக்கிறாள். அந்தோ! இந்த ராக்ஷஸி வசப்பட்டு இப்பிரபு திண்டாடுகிறான். அவர் என்ன செய்வார். ஒரு நிமிஷம் விலகவெண்ணினால் நையப்புடைக்கிறாள். சிலசமயம் தனக்குக்களைப்பு வருமாயின் புத்திரர்களை யழைத்துக்கொண்டு

தாதிகளுடன் கூட குகையிலொடுங்கி விடுவான். இவனை எப்படியாவது தன் வசப்படுத்த முயன்றும் நன்றாகாமல் தவிக்கிறார். இவனைச்சிலர் தன் வசப்படுத்திச் சுதந்திரமாகவுமிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டவ்வழி நடப்போமென போகவெண்ணினால் அதைப்பலவழியாலும் தடுத்துவிடுகிறான். ஆ! ஆ! இக்காதகியின் கடுமை சகிக்கப்பாலதோ! இவனிடத்தில் காமக்குரோதலோப மோஹமென்னும் ராக்ஷஸ குணங்களிருக்கின்றன. அவைகளாலேயே இவ்வுலகத்தையும் வெல்லுகிறான். எவ்வளவோ மகரிஷிகளும் இவைகளை ஜெயிக்கமுடியாமல் வருந்தமடைந்தார்கள். இவனுக்கு பரமேஸ்வரனும் லக்ஷியமில்லை. யதோ ஒருவரிருவர் இவனது மாயையிலிருந்து விடுபட்டாலும் அநேகர் அலைந்துவிட்டார்கள். இந்த ராக்ஷஸியின் குடித்தனத்தை நினைக்க நினைக்க பயத்தைக் கொடுக்கின்றது. இவன் ஒரு நிமிஷத்தை யுகமாக்குவான். யுகத்தை நிமிஷமாக்குவான். ஒரு கொடியில் வெகுதூரஞ்செல்லுவான். இவன் வல்லமையை கம்மாற் கூற வொண்ணாது. ஆனதால் இவனை எவ்விதத்தும் வசப்படுத்தலாமென அநேகர் யோஜிக்கிறார்கள். அதற்காகவே வேதசாஸ்திரங்களு முண்டாயிருக்கின்றன. அதற்காகவே தூரவ்கனைத்தனஞ்செய்கிறார்கள். அதற்காகவே தீர்த்தயாத்திரை செய்கின்றார்கள். அதற்காகவே தேவாலங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காகவே கண்மூடிக் குகைகளில் தபசு செய்கிறார்கள். எங்கு சென்றாலும் இவனுடைய வார்த்தையே கேட்கப்படுகிறது. இவனை யடக்கிவிட்டால் நாம் சுதந்தரராய் மோக்ஷமடைந்துவிடலாம். மனமடங்கில் மதியடங்கும் மதியடங்கில் மௌனமே கூடும். அம்மௌனமே மோக்ஷமென்பது அம்மோக்ஷமே. இந்த ராக்ஷஸியின் பந்தத்தினின்று விடுதலை ஆனதால் இம்மஹாபந்தத்தினின்று விடுதலையடைய பெருங்கருணைத்தடங்கடலாகிய பரமபதியைப் பணிவாம்.





ஏங்காவி முடலிலேயுயிருமுளைப்போலிரு
 க்கவில்லையோ மனதெனு
மியானுமென்னட்பாம் பிராணனுமெமைச்சடம
 தென்றுனேச்சித்தென்றுமே
யங்காவிலெவனோ பிரித்தானதைக்கேட்ட
 வன்று முதலின்றுவரைய
மஸியாயமா யெமையடக்கிக் குறுக்கேயடந்தரசு
 பண்ணி யெங்கள் முன்னுக
நீ யென்னகோட்டைகொண்டாயென்று
 மூடமனயிகவுமேச
மூண்டெரியுமனலிலிட்ட மெழுகாயுனங்குருகன்
 முறைமையோ பதிறுயிரஞ்
சொன்னாலு நின்னருளிரக்கவில்லையே
 யினிச்சுகம் வருவதெப்படி சொல்லாய்
சுத்த நிற்குணமான பரதெய்வமே பரஞ்
 சோதியே சுகவாரியே.

## தேஜஸ்.

இத்தேசத்து பூர்வீக மகரிஷிகளால் ஆதிகாலந்தொட்டு ஆசரிக்கப்பட்டுவரும் ஆசாரங்களனைத்தும் வெகு ரகஸ்யார்த்தங்களையுடையன. அவர்களொன்றையும் உண்மை யறியாதிருந்தடிப்பதில்லை. சரீரத்திலுள்ள சக்திகளை யபிவிர்த்தி செய்து கொள்ள எவ்வளவோ முயர்ச்சி செய்திருக்கிறார்கள். இக்காலத்தார் பூததத்துவங்களை ஆராய்ந்து தந்தி புகைவண்டி இயந்திரங்கள், பாடும் இயந்திரம் முதலியவைகளை இயற்றுவதுபோல் முற்காலத்து நம்மவர் சரீரதத்துவங்களை தனதுயிர் செல்லவும் சகிக்கத்துணிந்து வெய்யிலிலும் மழையிலும் காற்றிலும் சரீரத்தை வாட்டி முயர்ச்சித்து இதனிடத்திலநேக அபூர்வ சக்திகளை

உண்டாக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நினைத்தால் ஒரு மரத்தை பஸ்மமாக்குவார்கள். விஸ்வாமித்திரர் [அந்யமந்திரம் கரிஷ்யாமி] யென்று வெகு தைரியமாய் திரிசங்குவிற்கு அந்தரிக்ஷத்தில் சுவர்க்கம் கற்பித்தார். வேறு இந்திரனையும் உண்டாக்குவேனென்றார். நினைத்தால் ஒருவனுக்கனுக்கிரஹிக்கவும் அவர்களால் முடியும். அவர்கள் தமது சரீரத்தோடாகாசத்திலும் பறக்கும் சக்தியை யுடைத்தாயிருந்தார்கள். இச்சரீரத்தை விட்டு வேறு சரீரத்திற்கு போகுஞ்சக்தி அவர்களிடத்திலிருந்தது. திருகாலஞானத்தை நிமிஷத்திற் சொல்லக்கூடிய சக்திகளை வைத்திருந்தார்கள். அவர்களறிந்த அளவிறந்த சக்திகளை சிலதைப் புஸ்தகமூலமாய் யெழுதிவைத்தார்கள். சிலதை அனுபவத்தாலேயே அறியவேண்டியதாயிருந்தன. இப்பொழுது அச்சக்திகள் முற்றிலும் நம்மவர்களிடத்தற்றுவிட்டது. பெயருக்கு மாத்திரம் ராஜவேஷம் தரித்த மரப்பொம்மைப் போல் விளங்குகிறோம். அவர்களறிந்த அருமையான விஷயங்களிலொன்றாகிய தேஜஸைப்பற்றித் தெரிவிப்பாம்.

தேஜஸ் என்பது மனிதனது சரீரத்திலுள்ள ஒருவிதச் சக்தி. இது மூன்று வகைப்படும். அவையாவன,—தேஜஸ், ஓஜஸ், வர்ச்சஸ் இவைகளில் சரீரத்தில் ஆகாரத்தாலும், ஸ்நானத்தாலும் சுசியான காரியங்களாலும் உண்டாகுஞ் சக்திக்குச் சுத்த தேஜஸ் யென்று பெயர். ஓஜஸ் என்பது பலத்தாலபிவிர்த்தியாவது. வித்தையாலும் மந்திர சக்தியாலும் ஈசுவர தியானத்தாலும், பிராணாயாமாதிகளாலும், பக்தியோகத்தாலும், சத்கர்மானுஷ்டத்தாலும், ஸாத்வீக குணத்தாலும், சத்சாஸ்திர பயிர்ச்சியாலும், ஈசுவர பூஜையாலுமுண்டாகும் சக்திக்கு வர்ச்சஸ்என்று பெயர். இவைகளனைத்திற்கும் பொதுவாகத் தேஜஸ் என்ற பெயரை வைத்துக்கொண்டு பேசுவோம்.

இது சரீரத்திலெப்படி உண்டாகிறது? எப்படி யபிவிர்த்தியாகின்றது? நாம் உண்ணும் ஆகாராதிகளின் சத்து பல்வி





தமாக மாறி அதனது சூக்ஷமாம்சங்கள் பரமாணுவைப்போல சரீரத்திற் பரவுகின்றன. அங்ஙனுமே மனத்திலும் மேற்கூறிய காரியங்களாலோர் சக்தி யபிவிர்த்தியாகின்றது. அதனது இருப்பை, நாம் தெரிந்துகொள்ளுவதனால் அநேக சாதனங்களிருக்கின்றன. அத்தேஜஸின் மகிமையாலேயே நம்மவர்களிடத்தில் பூர்வசக்திகளுண்டாகின்றன. இது சரீரத்திலெங்கும் பரவியிருக்கும். தேஜஸ் ஸர்வசரீரத்திலுமிருக்கிறது. மிருகாதிகளுக்குமுண்டு. சில சுத்த மிருகங்களது தேஜஸானது அநேக வியாதிகளையும் போக்குகிறது. இதைப் பூர்வத்திலாராய்ந்த மகான்கள் இதைக்கொண்டே அநேகசித்திகளை இயற்றினார்கள். அது ஒரு சரீரத்திலிருந்து மற்றொரு சரீரத்திற்கு போகும் இயல்புளது. ஒருவரை ஸ்பர்சித்தாலும் நினைத்தாலும் பார்த்தாலும் அவர்களிடத்திற் செல்லும். இதைக்கொண்டே மந்திரவாதிகள் ஜலத்தையாவது விபூதியாவது மந்திரித்து கொடுக்கிறார்கள். அவைகளில் அம்மந்திரத்தாலுண்டான தேஜஸ் செல்லுகின்றன. அதனால் வியாதி முதலானது தொலைகின்றன. நாம் நல்ல ஆகாரத்தைச் சாப்பிடுவதாலும் சத்சாஸ்திரங்களை அப்பியசிப்பதாலும் ஈஸ்வரனை பஜிப்பதாலும் பிராதஸ்நானாதிகளைச் செய்வதாலும், ஸத்கர்மானுஷ்டானங்களை அனுஷ்டிப்பதாலும் நம்மிடத்தில் நல்ல தேஜஸ் உண்டாகின்றது. நல்ல தேஜஸ் உள்ள ஒருவன் அசுத்தமான தேஜஸ் உள்ளவனோடு பழகினால் இவனது நல்ல தேஜஸ்களவனுக்குச் சென்று அவனது கெட்ட தேஜஸ்கள் இவனுக்கு வரக்கூடும். அதுகொண்டே பிராம்மணர்கள் சாப்பிடும்போது தமது ஆகாரங்களை மற்றவர் பார்க்கலாகாதென்கிறார்கள். பார்ப்பின் அசுத்த தேஜஸின் சங்கத்தால் இவர்களது ஆகாரமு மழிந்துவிடுமாம். பிராம்மணர்கள் பறையர் முதலான கீழ்ச்சாதிகளைக்கண்டால் வெகு தூரம் போம்படி விலக்குகிறார்கள். அவர்களும்செல்லுகிறார்கள். அதற்குக் காரணம் யாதெனில் அவர்களிடத்திலுள்ள அசுத்த தேஜ

ஸ்கள் சுத்த தேஜஸ் உள்ள பிராம்மணர்களிடத்து வியாபித்து
விடுமென்றே இவ்விதிகளேற்பட்டிருக்கின்றன. மற்றும் நமது
தேசத்தில் தீட்டு முதலிய ஆசாரங்களும் இதைக்கொண்டே
ஏற்பட்டிருக்கின்றன. இது சரீரத்தை விட்டெப்படி வெளிக்
கிளம்புகிறதெனில், சரீரத்தின் மயிர்க்காம்புகளின் வழியாகவும்
நகக்கண்களின்வழியாகவும் வெளிக்கிளம்புகின்றது. அதை எவ்
வனமறியலாமெனில் மந்திரவாதி ஜலத்தை யபிமந்திரிக்கும் கா
லத்தில் தனது கையை ஜலத்தில் வைத்து ஒரு மனஸுடன்
மந்திரங்களை யுச்சரிக்குங்காலத்தில் அவனது தேஜஸ் ஜலத்தில்
பரவுகின்றன. அந்த ஜலத்தை அபிஷேகம் பண்ணுவதால்
விஷம் முதலானவைகள் போய்விடுகின்றன. தேஜஸ் இன்றி
ஜலத்தை அபிஷேகம் செய்வதால் போகாதன்றோ. இப்ப
டியே அன்னத்தையும் லக்ஷித்துக்கொள்க. மற்றும் நமது தேசத்
தில் உண்ணும்பொழுது புகைபோவதைக்கண்டு யாரோ நினைக்
கிறார்கள் என்பார்கள். அதாவது அங்கு நினைப்பவர்களின் தே
ஜஸ் இவரிடத்தில் அதே க்ஷணத்தில் பரவுகின்றன. அனில்
கொம்பில், ஆமை இணற்றில் என்று ஒரு பழமொழியுண்டு.
அணில் கொம்பிலிருந்து தனது பேடை நினைத்து கர்ஜிப்பதை
ஆமை கேட்டவுடன் கர்ப்பம் தரித்துவிடுமாம். இங்ஙனம் மீன்
முதலிய அநேக ஜந்துக்களுண்டு. பூர்வத்து ரிஷிகளும் ஒர்
அங்கிய ஸ்திரிக்கு புத்ரோற்பத்தியைச் செய்யவேண்டுமானால்
அவ்விடத்தில் சேர்ந்தால் பாதிவிருத்திய பங்கம் வருமென்று
அவளை தங்களது பரிசுத்த தேஜஸ் பொருந்திய வீக்ஷண்யத்தால்
பார்த்தவுடன் அவள் கர்ப்பத்தை யடைவாள். நாட்டுக்குதிரை
யினிடத்தில் உயர்ந்த குதிரையைப் பிறப்பிக்கச்செய்ய, குதிரை
வளர்க்கும் நிபுணர்கள் மட்டப்பெண்குதிரையுடன் மட்டஆண்
குதிரையை புணர்ச்சிசெய்ய விடுத்து, அப்பெண்குதிரையின்
கண்ணிற்கெதிரில் உயர்ந்த குதிரைகளை நிறுத்திவைப்பது வழக்
கம். அக்குதிரையை மட்டக்குதிரை நன்றாய் உற்றுநோக்கும்





காலத்தில் கர்ப்பம் தரித்தால் இக்குதிரையினிடத்தாம் உத்தம அஸ்வங்களே உண்டாகுமாம். இத்தேஜஸின் உண்மை யறிந்த மகம்மதியர்கள் தங்கள் ஸ்திரீகளை பரபுருஷர்கள் பார்த்தால் அவர்களது தேஜஸ் பரவிவிடுமென்று கோஷாவாசவே வைத்திருக்கிறார்கள். நமது தேசத்தில் அங்ஙனம் வைத்திருக்கவில்லை. அதற்கு காரணம் யாதெனில், நமது ஸ்திரீகளிடத்தில் வராமலிருக்கக்கூடிய சில ஏற்பாடுகளைச் செய்யப்பட்டிருக்கின்றன. தங்கம் முதலிய உயர்ந்த ஆபரணங்களை போடப்பட்டிருக்கின்றன. இந்த உயர்ந்த லோகங்களிடத்திலோர் சக்தியுண்டு. அவைகள் சரீரத்தில் அசுத்த தேஜஸை வரவொட்டாமல் தடுக்கின்றன. அந்நியர்களுடைய தேஜஸையும் வரவொட்டாமல் தடுக்கின்றன. கிழவிகள் தனது பேத்தி முதலிய பெண்கள் புக்ககம் முதலிய விடங்கட்கு போகும்பொழுது வேப்பிலையை தலையில் வைத்து அனுப்புவார்கள். அதுவும் இதுபற்றியே. இத்தகைய அநேக உதாரணங்களைக் கூறலாம். ஆனதால், நாம் நமது சரீரத்தில் நல்ல தேஜஸை உண்டாக்கிக்கொள்ளுவோமாயின் அநேக சௌகரியமுண்டு. அதற்கு என்ன செய்யவேண்டுமென்றால்,

1. தினந்தோறும் பிராதஸ்நானம் செய்யவேண்டும்.

2. ஸந்தியாவந்தனாதி காரியங்களைத் தவராமற் செய்யவேண்டும்.

3. ஆடைகளில் அழுக்கின்றி வைத்துக்கொள்ளவேண்டும்.

4. அசுத்த தேஜஸ் அபிவிர்த்தி யாகக்கூடிய ஆகாராதிகளை உண்பதை கூடியமட்டும் ஒழிக்கவேண்டும்.

5. நாம் வசிக்கும் ஸ்தானங்களை கூடியமட்டும் நல்லகாற்று வரக்கூடியதாயும் சுத்தமாயும் வைத்துக்கொள்ளவேண்டும்.

யோக சாதனைகளையும் இன்னும் இத்தகைய சுத்த காரியங்களையும் செய்வதால் சுத்த தேஜஸ் அபிவிர்த்தியாகி சரீரத்திற்கு சுகத்தையே பயக்கும்.

## மனோசக்தி.

மனத்தின் சுவரூபமோ ஆச்சரியப்படத் தக்கதாய் இருக்கின்றது. எதைக்கண்டாலும் அதைத்தரித்துக் கொள்ளுகிறது. அத்தாகாரமாய் மாறுகிறது. வாயுவைப்போல் வேகத்தோடு விஷயத்தை விளக்கிறது. அதை மறைக்கிறது. திரும்பவும் விளக்கிறது. இங்ஙனமே நினைப்பதும் மறப்பதுமே மனதின் இலக்ஷணம். அதுவே பந்தமாகிய துக்கத்திற்கும் ஹேதுவாக இருக்கிறது. அதுவே சம்ஸ்கரிக்கப்பட்டால் மோக்ஷத்திற்கும் ஹேதுவாக இருக்கிறது. அந்தோ மனதெனும் குரங்கின் வசப்பட்டு உலகமெல்லாம் மயங்குகின்றன. ஒரு க்ஷணமேனும் வினையாமலிருக்கச் சாத்தியமில்லையே. எதைக்கண்டாலும் மனது அதை அனுபவிக்க இழுத்துச்சென்றுவிடும். சாதுக்கள் சங்கத்தைவிட்டு தோஷத்தால் நிறைந்து காற்றிறைல் இலவம் பஞ்சுபோல் பறக்கிறது. ஒருவிஷயத்தைவிட்டு மற்றொரு விஷயத்திற்கு நாயைப்போல் அலைகிறது. மஹத்தான ஐசுவரியத்தை அடைந்தாலும் திருப்தியடைகிறதில்லை. எவ்வளவு இந்திரிய சுகங்களை அனுபவித்தாலும் சல்லடையில் எவ்வளவு ஜலத்தை விட்டாலும் எங்ஙனம் நிறைகிறதில்லையோ அங்ஙனமே மனதும் திருப்தியடைகிறதில்லை. மனதின் பிரவிருத்தி யெல்லாம் வியர்த்தமாவே இருக்கிறது. அந்தோ! மனத்தினது வசப்பட்டு விவகாரஞ் செய்தால் எல்லையில்லாத ஜன்மத்தை எடுக்க நேரிடும். ஸ்வப்னத்தில் ஒரு க்ஷணத்தை ஒருமாதமாக்குகிறது. ஒரு மாதத்தை ஒரு க்ஷணமாக்குகிறது. ஒரு க்ஷணத்தில் பலகோடி காரியங்களைச்செய்கிறது. பூர்வ ஜன்மங்களில் அநுபவித்த வாசனைகளையும் இச்சென்மத்தில் அநுபவித்த வாசனையையும் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு கனவில் பெரும் பட்டணங்களை சிருஷ்டிக்கிறது. பெரும் ரதங்களை காட்டுவிக்கிறது. ஏதேதோ பெரியகாரியங்களைச் செய்விக்கிறது. பெ





ண்ணையும் ஆணையும் ஒன்றுகூட்டி சவத்தைப்புசிப்பதுபோல் ஆசையென்ற ஸ்திரீயுடன் மனதால் பிணைக்கப்பட்டுத் துக்கத்திற்குள்ளாகிறான். பெருங்காற்றானது திரணங்களைத் தூக்கி ஆகாசத்திற்கொண்டுபோய் கீழே போடுவதுபோல் மனதால் அலைவிக்கப்படுகிறான். விருதா காரியங்களில் அழுத்தப்படுகிறான். கிரியையோனிகளால் ஜன்மங்களை அடையும்படி தள்ளப்படுகிறான். அந்தோ மனதின் ஸ்வரூபத்தை விசாரித்தால் அதன் நிலைமையைத் தெரிந்து கொள்ளலாம். மனதையடக்குவதைப்போற் கஷ்டம் வேறொன்றில்லை. அக்கினியைப் பார்க்கிலும் உஷ்ணமான குணத்தையுடையது. வஜ்ஜிரத்தைப்பார்க்கிலும் கெட்டியானது. சமுத்திரத்தை பானம் பண்ணிவிடலாம். மேருமலையைத் தாண்டிவிடலாம். நெருப்பை விழுங்கிவிடலாம். மனதை யொடுக்குவது மஹா கஷ்டம். சதா மனதை யொடுக்க முயன்றால் அநேகர் தங்களாலாகாமல் பிறகு அதன் வழிப்பட்டார்கள். விஸ்வாமித்திரர் முதலிய மஹாரிஷிகளும் மனதின் வசப்பட்டு அதன் வழிசெல்லவில்லையா? ஆகையால் தன்மனதை தன்னிலைப்படுத்தி சரியான வழியில் செல்லவிட்டு நல்ல விஷயங்களை கவனித்து வருவார்களாயின் அதே மனதின் நிலைக்கு ஓர் ஆதாரமாகும்.

## மனோவேகம்.

11601

ஒவ்வொரு மனிதனுக்கும் பஞ்சேந்திரியங்களேற்பட்டிருக்கின்றன. இப்பஞ்சேந்திரியங்களுக்கு ஏதுவான ஸ்தானமாகவிருப்பது மனம். மானிட தேகத்துக்குள் தெய்வத்தன்மையும் அபார சக்தியையுமுடையது மனம். மனதிற்கு எந்தகாரியத்தையும் தனிமையாகச் செய்துமுடிக்கத் திறமையுண்டு. எப்பொழுதும் எங்கும் திரிந்துகொண்டிருக்கும் சுபாவமுடையது ஏனென்றால் ஆத்மாவாகிய கடவுளின் செய்கைகள் மனதின்மேல் பிரதிபிம்பப்பட்டு அல்லது பிரதிபலித்து அவனுடைய

செய்கைகளாகிய எல்லாம் செய்ய வல்லமை, எங்கும் வியாபித்திருத்தல், இவ்விரண்டும் மனதினிடத்து ஏற்பட்டிருக்கின்றன. ஸர்வேசுவரனுக்கு நன்மை, தீமை, என்ற வித்தியாசமில்லை. ஆனால் சரீரத்திலுறுப்பாகிய மனதுக்கு நன்மை தீமை என்பவைகளுண்டு. ஆகையால் மனதானது நன்மை தீமைகளாகிய இரண்டிலும் பிரவிர்த்திக்கிறது. மனதினுடைய செய்கை எண்ணம் அதாவது எந்த காரியத்தையாவது செய்துமுடிக்க நினைத்தால், மனிதனுடைய சரீரத்தில் மனம் மூளையாகிய இரண்டும் முதன்மையான உறுப்புகள். அதாவது, மூளை அறியப்படுத்துவோன். மனது அதை அறிந்துகொண்டு பஞ்சேந்திரியங்களை அடக்கிவிட்டால் தானே காரியத்தைச்செய்து முடிப்போன். ஆகையால் மனம் மூளையாகிய இவ்விரண்டு உறுப்புகளின் உதவியல்லாமல்பஞ்சேந்திரியங்கள் தங்களுடைய வேலையை செய்யமுடியாது. உதாரணமாக—நாம் கண்ணை விழித்துக்கொண்டே அண்ணாந்துகொண்டு ஒரு விஷயத்தில் மனதையும் மூளையையுஞ் செலுத்தி யோசனை செய்துகொண்டிருக்கையில், ஒரு மனிதன் எதிரில்வந்து நின்றால், அவன் கண்ணுக்குத்தெரியமாட்டான். ஏனென்றால், மனதும் மூளையும் வேறு காரியத்தில் வேலை செய்துகொண்டிருக்கின்றன. எதிரில் நிற்கும் மனிதனைப் பார்க்க மூளை சொல்லவுமில்லை. மனது அதைப்பற்றி ஒன்றையும் கிரகிக்கவுமில்லை. ஆகையால் கண்கள் விழித்திருந்தும், எதிரில் நின்ற மனிதனைப் பார்க்கவில்லை. இதே மாதிரியாக மனதும் மூளையும் சேராமல், மற்ற இந்திரியங்கள் வேலை செய்யாது. ஆகையால் மனதானது நான் என்பவனால் சொல்லப்பட்ட நல்ல காரியங்களை மூளையாலறிந்து செய்து முடிக்க முயலவேண்டும். மூளையானது கெட்டகாரியங்களைக்கூடத் தெரிந்து கற்பித்துச் சொல்லும். அதாவது திருடர்களுக்கு மூளையானது கன்னக்கோல் வைக்குந்திறனைச் சொல்லிக்கொடுத்துமனைத்திருடச் சொல்லுகிறது. அப்பொழுது





நான் என்பவன் மத்தியில் வந்து இந்த வேலை செய்யவேண்டாமென்று மனதுக்குச்சொல்லுகிறது. மனது நான் என்பவன் சொல்லுகிற வழியில் சென்றால் நல்லவனாகிவிடுகிறான். ஆகையால் மனது நான் என்பவனுக்குக் கட்டுப்பட்டு நான் என்பவன் சொல்லுகிறதைச் செய்துமுடிக்க நாம் பழகவேண்டும். இப்படிப்பழகுவது அசாத்தியமன்று. சுலபத்திலெல்லோரும் பழக்கஞ்செய்து கொள்ளலாம். அதற்காக அடியில் வருமாறு செய்யவேண்டியது.

நான் என் மனதை அடக்க எனக்குச் சக்தியுண்டு.

நான் சொல்லுகிறபடி என் மனது கட்டாயமடங்கியிருக்கும்.

நான் செய்யச் சொல்லுகிற காரியங்களை என் மனது கட்டாயம் செய்து முடிக்கும்.

மனதினுடைய செய்கை எண்ணம் என்று ஏற்கனவே சொன்னோம். ஒவ்வொருமனிதனும் ஒரு காரியத்தைச் செய்ய நினைக்கும் எண்ணம் மனதினுடைய செய்கை. உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் நினைக்கிற எண்ணங்கள் ஜலத்தில் உண்டாகிற அலைகள் போலவும், சப்தம் காற்றிற் பரவியோடுகிறது போலவும் படிப்படியாய்ப் பரவிச் செல்லுகின்றன. அப்படிப் பரவிச்செல்லும் பொழுது நல்லெண்ணங்கள் நல்லெண்ணங்களையும் கெட்டெண்ணங்கள் கெட்டெண்ணங்களையும் கிரகிக்கும் சக்தியானது கடவுளினுடைய இயற்கையமைப்பு.

உதாரணமாக:— ஒருவன் சத்திரங்கட்டி அன்னதானஞ்செய்ய நல்லெண்ணங் கொண்டிருந்தால், இதே மாதிரி நல்லெண்ணங்கொண்டிருக்கிற மற்றொருவனுடைய அலையும் முற்கூறியவன் மனதிலும் மூளையிலுமடித்து அவனுடைய நல்லெண்ணத்தை இரட்டிப்பு பலப்படுத்தி அவ்வெண்ணத்தை முடிவுபெறச் செய்கிறது. அல்லது, ஒருவன் கொலை செய்து சம்

பாதிக்க வேண்டுமென்று கெட்ட எண்ணம் எண்ணினால், அதே மாதிரி வேறு கெட்ட எண்ணம் நினைக்கிற மற்றொருவனுடைய அலையானது முற்கூறியவனுடைய மனதிலும் மூளையிலுமடித்து, அவனுடைய கெட்ட எண்ணத்தை இரட்டிப்பு பலப்படுத்தி அவனையுங் கெடுத்துவிடுகிறது. ஆகையினாற்றான் "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற வசனமேற்பட்டது.

மேற்கூறியபடி, ஒருவன் மனதை நல்வழியில் வசப்படுத்த வேண்டுமானால், நான் என்பவனால் சொல்லப்பட்ட நல்ல காரியங்களையே பிரதிதினமும் எண்ணிக்கொண்டு, தன்னிலும் மேலானவர்களுடைய நல்லெண்ணங்களைக் கிரகிக்கவேண்டும். அப்படி கிரகித்தால் தன்னுடைய மனது சுத்தப்பட்டு நல்வழியில் வரும். மனதினுடைய வேகத்தை எல்லோருமறிவார்கள். அது மின்னலைப்பார்க்கிலும் அதிவேகமாய் நடக்கிறது, ஆகையால் எந்தக்காரியத்தையும் சீக்கிரத்திலும் சுலபத்திலும் முடிக்க அதற்குச் சக்தியுண்டு. இந்த மனோவேகத்தைக்கொண்டு தான் வியாதிகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. வில்லில் கோர்த்த ஒரு பாணத்தை எதிரிமேல் விடுவதுபோலவும், அல்லது பாணத்தை அபிமந்திரித்து விடுதல் போலவும், மனோவேகமாகிய வில்லில் மந்திரமாகிய பாணத்தைக்கோர்த்து விடுத்தால் அது சென்று வியாதியஸ்தன் மனதிலும் மூளையிலுந்தாக்கி, அவ்வாறு வியாதியை உடனே நிவர்த்தி செய்கின்றது. முதலில் தன்னுடைய சரீரத்துள் நான் என்பவனை கண்டுபிடித்துப் பிறகு, அவனுடைய உதவியால் எவன் மனோவேகத்தைக் கொண்டு எந்தக்காரியத்தைப் பிரயோகஞ்செய்கிறானோ, அவனுக்கு அந்தக்காரியம் சுலபத்திலும் சீக்கிரத்திலும் சித்தியாகிவிடும். எந்த வியாதியையும் நிவர்த்தி செய்துவிடும். பரஞ்சோதியையும் நேரில் காணல் கூடும். ஆகையால் வியாதிகளை நிவர்த்தி செய்வதற்கும், பரமனைக் கண்டுபிடிப்பதற்கும் மனோவேகந்





தான் உபயோகப்படுத்தப்படுகின்றது. மற்ற இந்திரியங்களால் யாதொரு பிரயோசனமுமில்லை. அவைகள் மனதை நல்வழியில் செல்லவொட்டாமற் கெடுக்கத்தான் உதவுகின்றன. பஞ்சேந்திரியங்களற்றுப்போய், மனது மாத்திரம் நான் என்பவன் காட்டுகிற வழியிற் சென்றால், உலக வியாபாரங்களற்றுப்போய் பரலோகத்தில் பரஞ்சோதியை யாரும் அடையலாம்.

## நான்.

அகம் பிரம்மோஸ்மி நானே பிர்மாவாயிருக்கிறேன் என்பது அத்வைதிகளின் கொள்கை. இக்கொள்கை சிறந்ததா வென்று யுக்தி வழியால் பார்ப்போம். கடவுளை நாம் அப்பா, அம்மா, நண்பா, நாயகா வென்று கூப்பிடுவது சிறந்ததாயினும் அவ்வாறு கூப்பிடும் போதெல்லாம் நம்மை வேறாகவும் அவரை வேறாகவும் எண்ணுகிறோமென்பதில் தடையுண்டோ? அவ்வாறு நினைப்பது மிகுந்தப் பிரீதியைக்குறிக்குமா? அல்லது அவருக்கும் நமக்கும் வித்யாஸமில்லை அவரே நாம் நாமே அவர். என்றெண்ணுவது சிறந்ததாகுமா? இதை அறியும்பொருட்டு அடியில் வரும் ஓர் சிறு கதையைக் கவனிப்போம்.

உதாரணம்;— முன்னாளில் ஓர் நாயகன் தன் காதலியின் வீட்டிற்குச் சென்று கதவையிடித்தான், உள்ளேயிருந்து யார் என்ற சப்தம் உண்டாயிற்று. அதற்கு அவன் நான்தான் என்றான். ஒன்றும் பதிலில்லை, கதவும் திறக்கவில்லை. மறுபடியும் இடித்தான். அவன் மனைவி யாரங்கே, என்றாள். அதற்கவன் இதோ இருக்கிறேன் என்றான். அப்போதும் கதவைத் திறக்கவில்லை. மூன்றாம் தடவையும் கதவைத் தட்டினான். உள்ளே இருந்தவள் யாரங்கே என்றாள். உடனே புருஷன் நீயாகவிருக்கும் நான் என்றான். தக்ஷணமே மனைவி மனங்குளிர்ந்து கதவைத்திறந்தாள். அவனும் உள்ளே சென்றான். இதனால் உன

சுருமெனக்கும் வித்யாஸமில்லை யென்ற பிரீதிதான் மிகப்பெரியதென்பது ஏற்படுகிறது. தன்னிடம் பிரீதிகொள்ளாத மனிதனுண்டா! எவனுக்கும் தன்னுயிர் வெல்லம். தன்னைக்காப்பாற்றிக்கொண்ட பிறகே பிறரைக் காப்பாற்றுகிறான். ஆதலின் பிதா, மாதா, நண்பன், நாயகன் முதலிய எல்லா பந்துக்களிடமும் கொள்ளும் பிரீதியைவிடத் தன்னிடம் கொள்ளும் பிரீதியே சிறந்தது. ஆகையால் அநம் பிரீய்ஹோஸ்மி என்னும் அத்வைதிகளின் கொள்கை மற்ற மதஸ்தர்களின் கொள்கைகளைவிட ஆயிரமடங்கு சிறப்புற்றது. சிற்க இன்னொரு யுக்தியுண்டு. பகவான் ஸர்வ வியாபகர். அவரில்லா இடமில்லை. அவரைத் தவிர வேறே பொருளில்லை யென்று சொல்லி நாம் வேறு ஈசுவரன் வேறு என்றால் எவ்வாறு பொருந்தும்? இப்படி வேற்று நினைப்பதுதான் மாயையின் காரியம். இந்த மாயை யொழிப்பதற்கு ஞானம் வேண்டும். ஞானத்தையடைய கடவுளின் கிருபை அவசியம். அது பக்தியால் கிடைக்கும் அந்தபக்தியோ ஸத்கர்மங்களால் விளைந்து விர்த்தியாகும். ஆதலின் முதலில் கர்மயோகியாய்ப் பிறகு பக்தியோகியாய் விளங்கிக் கடைசியில் ஞானயோகியாய்ப் பிரகாசித்து ஜீவன் முக்தர்களாவது புத்திமான்களின் கடமை. உழைப்பின்றி பிழைப்பில்லை, எந்த ஜீவனத்திலும் பிரயாசையுண்டு, பிரயாசைப் படாதவர்களுக்குப் பலன் கிடைக்காது. தினந்தோறும் ஸ்நாநம் ஸந்தியாவந்தனம், ஜெபம், தபம் முதலிய ஸத்கர்மங்களைச் செய்யாமல் வர்ணாசிரம தர்மங்களைக் கவனியாமல் 23 மணி நேரத்தை நீக்கி ஒரு மணி மட்டும் ராமராம கிருஷ்ண கிருஷ்ண சிவசிவ வென்று சொல்லி மோக்ஷத்தைப் பெற்றுவிடலாமென்று சிலர் நினைக்கின்றனர். இது ஸாத்தியமா வெனின் ராமாயண சாஸ்திரிகள் பாகவதர்கள் அந்தூர்ப் பெரியவர் இந்தூர் பெரியவர் ஆகிய இவர்களெல்லாம் தங்களுக்கு அப்படி சொல்லி உபதேசித்ததாய்க் கூறுகின்றனர். லக்ஷம் ஜன்மமானாலும் கர்மத்தையனுபவித்தே தீரவேண்டுமெ





ன்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கூறியிருக்கிறார். 23 மணி நேரத்தில் இவர்கள் செய்யும் பாபகர்மங்கள் பலனைத்தராமல் மாமாய்ப் போகுமோ? அப்பலன்களை இவர்கள் அனுபவிக்காமல் மாற்றிவிடக்கூடுமோ; சாஸ்திரங்களும் வேதங்களும் கூறுவதை நம்பாமல் இக்காலத்திய அந்தூர்ப்பெரியவர் இந்தூர்பெரியவர் முதலிய காசாசை பிடித்தவர்களின் பேச்சை நம்பி மோசம்போவது அறியாமையேயாம்.

நாமென்பது சரீரமோ அல்லது வேறோ. சார்வாகர்களும் மற்றுஞ்சிலரும் சரீரத்தையே நாமென்று எண்ணுகிறார்கள். அது அறியாமையே. சரீரத்தை விசாரித்தால் பூதாம்சமேயன்றி வேறல்ல. இச்சரீரம் ஸ்தூல பூதங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பூதங்களோ ஜடப்பொருளை சார்ந்தன. இது அன்னத்தைத் தின்பதினால் வளர்கின்றது. தாயினது யோனியில் பிதாவானவன் காமத்தாலே ரேதஸ்ஸை விட்டால் அது கர்ப்பாசயத்தில் சுரோணிதத்தோடு பரிபக்குவப்பட்டு பத்து மாதத்திற்குள் பூரணமான சரீரமாகின்றது. பத்து மாதஞ்சென்று கீழே விழுந்தவுடன் தாயினது பாலால் வளர்க்கப்பட்டுப் பிறகு அன்னத்தால் வளர்க்கப்படுகின்றது. நாம் உண்ணும் உணவுகள் மூன்றாகப்பிரிந்து அதில் ஸ்தூலபாகமானது ஸ்தூல சரீரத்தை வளர்க்கின்றன. சூக்ஷ்ம பாகங்கள் மனதையும் இந்திரியங்களையும் வளர்க்கின்றன. இங்ஙனம் அன்னத்தால் அபிவிருத்தியாகி அன்னமின்றேல் அழிகின்றது. ஆனதினால் இச்சரீரத்தை எப்படி நான் என்று கூறலாம். நான் என்று சேதனத்தையே லோகத்தில் கூறுகிறார்கள். இச்சரீரத்தையே நான் என்று கூறத்துணிந்தால் மரத்தையும் நான் என்று கூற வேண்டும். ஏனெனில் மரமும் ஜடமே சரீரமும் ஜடந்தான். இறந்த சவத்தையும் நான் எனக்கூறலாம். அங்ஙனம் கூறுவது வழக்கமில்லை. ஒருவனிறந்தால் சரீரமெதிரிலிருக்க அவன் எங்

கேயோ போய்விட்டானென்று சுற்றத்தாரனைவரும் வீழ்ந்தழுகி
றார்கள். சிலக்ஷணம் தீயிலிடாதிருந்தால் நாற்றமுண்டாகிவிடு
கின்றது. யாராவது பிணத்தை நான் என்று கூறத்துணிவாரோ?
துணியாரன்றோ? அங்ஙனமே சரீரத்தையும் நான் என்று
கூறலாகாது. அற்றேல் நான் என்பதெதுவென்றால் சரீரத்தை
யாளவல்லமையுடைய மற்றொரு பொருளே. அப்பொருளை
யே ஆன்றோர் ஜீவனென்பர். ஜீவலக்ஷணம் யாதெனில் இத்தூ
ல சரீரத்தை யொழித்து இதற்கு விலக்ஷணமாக சூட்சமமான
பூதங்களாலமைந்த சூட்சமசரீரமொன்றிருக்கிறது. அச்சரீரமும்
நாமல்ல அதுவும் ஜடப்பொருளாலமைந்ததே. அச்சரீரத்தில்
மாத்திரம், நாம் இருக்குங்காலத்தில் கனவைக் காண்கிறோம்.
பிறகு விழித்தவுடன் நாம் கனவு கண்டோமென்று ஞாபகமுண்
டாகிறது. அக்கனவை யறிந்தவன் ஜடப்பொருளுக்கு வேறான
சிதம்சமாயிருத்தல்வேண்டும். அங்ஙனமே தூங்கும் ஸ்தானத்
திற்கு காரண சரீரமென்று பெயர். அக்காலத்தில் நாமொன்
றையுமறியாமலிருந்து விழித்தவுடன் இதுவரையில் தூங்கினோ
மென்று கூறுகிறோம். அத்தூக்கத்தையும் அறிந்தவன் ஒருவ
னிருத்தல்வேண்டும். ஆனதால் ஸ்தூல சூக்ஷும காரண சரீரங்
கட்கு விலக்ஷணனாய் இச்சேதனனிருத்தல்வேண்டும். அச்சேத
னன் இச்சரீரத்திலிருந்து விவகாரங்களைச் செய்கிறான். அவன்
முற்கூறிய மூன்று சரீரங்களையும் அறியும் சக்தியுள்ளவன்.
இவைகளழிந்தாலும் அழியாதவன். அவன் நித்தியன். அவன்
இத்தூல சரீரத்தைவிட்டு வெளிக்கிளம்பியவுடனே இறந்தான்
எனக் கூறுகிறார்கள். அவன் எப்படி வெளிக்கிளம்புகிறான்,
எவைகளோடு போகிறானெனில் அதற்கு உத்தரம் வேதாந்த
சாஸ்திரிகள் கூறுவது யாதெனில், பஞ்சபூதங்களுக்கு ஆதாரமா
யும், இவ்வுலகமனைத்தும் தோன்றுவதற்கு காரணமாயும், அனைத்
தையும் தாங்கியும் ஒன்றிலுமொட்டா ஆகாசம்போல் வியாபித்து
விளங்குகிற பரமேஸ்வரனுடைய சொத்தமாயிடத்து பிரவசனீயமான





அந்ஞானத்தால் ஜீவபாவமுண்டாகி, சூக்ஷும காரண சரீரங்க
ளுடன் கூடிய அநேககோடி ஜீவர்கள் இருக்கிறார்கள். அவர்
கள் ஸ்வச்சன்மங்களியற்றும் புண்ணிய பாவங்களுக்குத் தக்க
படி ஸ்தூலதனுக்களுண்டாகிறது. அச்சரீரங்களை ஒவ்வொரு
ஜீவர்களும் நானென நினைத்து விவரிக்கிறார்கள். சரீரத்தை
நானென நினைத்து இச்சரீர சுகத்தின்பொருட்டு கிருத்தியங்
களைச் செய்கிறார்கள். அவ்வாசனைகளனைத்தும் சூக்ஷும சரீரத்தி
னம்சமான மனதில் பதிந்து கிடக்கின்றன. அவ்வாசனையின்
வசத்தாலேயே மறு கருமங்களும் நடத்தப்படுகின்றன. ஜீவன்
ஒரு ஒரு சரீரத்தைவிட்டுச் சென்றாலும் அவனோடுகூடச் செல்
லும் சூக்ஷும சரீரத்தில் சர்வ வாசனைகளும் குடிகொண்டிருப்ப
தால் அவ்வாசனைக்குத்தக்கவாறு ஜன்மங்களுண்டாகின்றன.
அவ்வஜென்மங்களிலுண்டாகும் சுகதுக்கங்களனைத்தும் பூர்வ
ஜென்மங்களிற்செய்த கருமத்தின் பயனே. எப்படியெனில்,
ஒருவீட்டில் குடியிருந்த ஒருவன் இவ்வீட்டிலிருக்குங் காலத்தில்
பொய்சாக்ஷி சொல்லியும், திருடியுமிருந்து வேறு வீட்டுக்குச்
சென்றாலும் முன்செய்த குற்றத்திற்காக தண்டிக்கப்படுவான
ன்றோ? அங்ஙனமே பூர்வ சரீரத்திலிருந்த காலத்திற் செய்த
பாபபுண்ணியங்கள் மற்றொரு சரீரத்தில் சுகதுக்கங்களை யனுப
விப்பது இயல்பே. வாசனையின் வழியாகவே பிரவர்த்தி உண்
டாவதால் அப்பிரவிருத்திக்கு தக்கவாறு பலனுமடையப்படுகின்
றது. ஆனதால் என் தலைவிதி என்பது நான் பூர்வ ஜன்மத்தில்
செய்த கருமத்தின் பலன் என்று பொருள். ஆனதால் என் தலை
விதி யென்று நம் தேயத்தில் எல்லோரும் கூறுவதற்குக் காரணம்
ஒருவாறு தெரியவந்தது. நான் பூர்வஜன்மத்தில் செய்த கரும
த்தின் பயனே என் தலைவிதி என்பதின் பொருள், பிரமன் தலை
யில் எழுதினான் என்றால் பிரமன்ஜீவர்கள் செய்த கருமத்திற்குத்
தக்கவாறுபலனையளிக்கிறார். நியாயாதிபதியானவன் தண்டனை

விதிப்பதுபோல் ஈசுவரனும் இவர்கள் செய்த பாப புண்ணிய கருமத்திற்குத் தக்கவாறு பலனைக் கொடுக்கிறார். சிலர் தனக்குத் துக்கமுண்டான காலத்தில் பாழுந்தெய்வம் எனக்கு துக்கத்தைக் கொடுத்தது என்பார்கள், அது மூடத்தனம். ஸர்வஜீவ தயாபரனான ஈசுவரனுக்கு யாராலாகவேண்டியதென்ன? அவர் எல்லா காரியங்களையும் அஸங்கனாயிருந்து லீலையாய் செய்கிறார் அவருக்கு வைஷம்யமுமில்லை. அவிஸ்வாசமுமில்லை அவர் பெருங் கருணைத் திடங்கடலானதால், அவரைத் தூஷிப்பது பிசகு. சுகம் படுங்காலத்தில் ஈசுவரனை நினைப்பதேயில்லை. அக்காலத்தில் என்னாலன்றோ இக்காரியம் செய்யப்பட்டது. என்னுடைய சாமர்த்தியம் யாருக்கு வரும் என்று அகங்கரித்துக்கொள்ளுவதும் வழக்கம் உண்டு. அக்காலத்திலும் ஈசுவரனே இச்சுகத்தையும் கொடுத்தான் என்று அவரை ஸ்தோத்திரம் செய்தல் நன்று. அக்காலத்தில் ஈசுவர ஞாபகமே வருவதில்லை. இது எவ்வளவு அறியாமை. ஆனதால் நமக்கு எச்சம்பவம் வரினும் நமது கருமத்தால் சேர்ந்ததெனச் சகித்துக்கொண்டு மறுபடியும் துக்கப்படுவதற்கு ஏதுவான கருமங்களைச் செய்யாமல் ஸாத்விகமான கருமங்களைச்செய்வது அறிஞர்களுடைய இலக்ஷணம். இதற்காகவே நம்மான்றோர்கள் எக்காலத்திலும் "என் தலைவிதி" என்று மகாதுக்கங்களையும் சகித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனதால் பண்டையகாலத்தொட்டு பாமர்களுக்குள் வழங்கிவரும் இவ்வாக்கியம் நம்மவரிடத்திலேயே நன்மையின்பொருட்டே வழங்கி வருகின்றது.

## ஆத்மா.

ஆன்மா என்றும் 'சர்வவியாபி,' எனப்பொருள்படுத்த அவ் "வான்மா" ஏகமேவ, அத்விதீயம் அதாவது ஒன்றேதான் இரண்டற்றதென்றும், 'சர்வ பிராணிகளிடத்தும் அந்தர்யாமியாய் வசிப்பவனென்றும் "நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்றோரத்





தார் கற்கின்றதெல்லாங் கடை" என்று சொல்லப்பட்டிருப்பதால் சர்வவியாபி என்று சரீராதிகளால் செய்யப்படும் கிரியைகளுக்கு சம்பந்தமின்றியில் சாக்ஷிபூதனாயிருப்பவனென்றும், பஞ்சகோசங்களுக்கும் விலக்ஷணனென்றும், முமுக்ஷுக்களுடைய ஹிருதயத்தில் எப்போதும் தியானிக்கப்பட்டுவருவதால் அவர்கள் இருப்பிடமென்றும் ஞானிகள் சூக்ஷ்ம புத்தியால் அறியப்படுமாதலால் அவர்களுக்கு சமீபத்திலிருப்பவர்களென்றும் அஞ்ஞானிகளுக்கு மறைந்திருப்பவனாதலால் அவர்களுக்கு வெகுதூரத்திலிருப்பவனென்றும், பின்னும் பலவாறாக சொல்லப்பட்டு வருகிறான் அவ்வாத்மா உபாதிபேதத்தால் பரமாத்மா அல்லது ஈசுவரனென்றும், பிரத்யகாத்மா அல்லது ஜீவனென்றும், வியவகரிக்கப்படுகிறான்.

சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம், ஸர்வஞ்ஞத்வம் முதலியவைகளுடன் கூடினதாயும் மயோபாதியுள்ளதாயும், தத் பதத்தினால் சொல்லப்படுவதால் பரமாத்மாவென்றும், தன்னுடைய சக்தியாகிய பிரகிருதியினால் பெயரை வகித்துக்கொண்டு உலகங்களை சிருஷ்டித்து அவ்விதம் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களில் அந்தர்யாமியாய்ப் பிரவேசித்து அவைகளின் புத்தி இந்திரியங்கள் முதலியவைகளுக்கு நியாமகனாயிருப்பதால் ஈசுவரனென்றும், அவித்யோபாதிக்குட்பட்டுத் தம் பதத்தினால் வியவகரிக்கப்பட்டும், சரீராபிமானியாய் அதுவே தானென்றும், அதனால் அனுபவிக்கப்படும் விஷயங்களைத் தானனுபவிப்பதாய் ஆரோபித்துக்கொண்டு வரும்பந்தத்திற்குட் படுங்காலத்தில், பிரத்தியகாத்மா அல்லது ஜீவனென்றும் சொல்லப்படுகிறான். அவ்வாத்மாவே அவ்வியக்த ஸ்திதியில் எவ்வித உபாதியற்றது. சத்தானது இரண்டாவதற்றது. ஆனந்தமானது மாயையற்றது. உபாதியோடிருக்கில் த்வத பதார்த்தத்தைக்காட்டிலும் விலக்ஷணமாயும், அபேதமாயும், அதிஷ்டானம்போல் காணப்படுகிறதாயுமி

ருக்கிற தத்வம், பாரமார்த்திக சத்தாமாத்திரம் அவிநாசி யென்றும் பிரம்மமென்றும் சொல்லப்படுகிறது.

இப்போது பிரஸ்தாபித்த ஜீவாத்ம பரமாத்மாவையே கருதிகளில் சமானமான குணமுடைய இரண்டு பட்சிகளாகவும், சரீரமாகிய விருட்சத்தை யடைந்திருப்பதாயும், பரமாத்மாவைக் காட்டிலும் அந்நியமாகிய ஜீவாத்மா வியாபக தசையை அடைந்திருக்கிற பாப புண்ணிய ரூபமாயிருக்கிற கருமபலத்தை புசிக்கிறதென்றும், பரமாத்மா கர்மபல சம்பந்த மில்லாததாகையால் பிரகாசிக்கிறதென்றும், ஜீவாத்மாவானவன் பிரகிருதியினால் மோகத்தையடைந்து சோகிக்கிறதென்றும், ஜீவாத்மாவானவன் எப்பொழுதும் பரமாத்மாவின் கிருபைக்குப்பாத்திரனாகி அவரை யுள்ளபடி பார்த்திருப்பதினால் அப்பொழுது சோகரகிதனாகின்றானென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பரமாத்மாவானவர் ஸர்வசக்தியாகிற பிரகிருதியினால் உலகங்களையும் அநேக ஜீவராசிகளையும் சிருஷ்டித்து அதில் பிரவேசித்தாரென்று முன் சொல்லப்பட்டதல்லவா? அவ்விதம் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட உலகங்கள் பிரம்மாதிலோகம் முதல் பூலோகம் வரையில் ஏழாகும். அவ்வேழு லோகங்களுமே அப்பரமாத்மாவின் வாகனங்கள். அவைகளை அப்பரமாத்மாவுக்கு ஸ்தூல சூட்சும காரண சரீரங்கள் அல்லது உலகங்களாகவும் சொல்வதுண்டு. அப்பரமாத்மா ஸ்தூல உலகங்களில் வியக்தமாகவேண்டுமென்றாலும், சூட்சும உலகங்களில் வியக்தமாக எந்த உலகங்களில் தோன்றவேண்டுமென்றாலும், அந்தந்த உலகங்களின் பிரகிருதியணுக்களை ஸ்வீகரித்துக்கொண்டு தான் அந்தந்த உலகங்களில் வியக்தமாகவேண்டும். அப்பரமாத்மாவே நமது சரீரத்திற்குள்ளிருப்பதால் அண்டத்திற்கொத்தது பிண்டத்திற்கு மென்றவாறு பிண்டமாகிய நமது சரீரத்தை ஸ்தூல சூட்சும காரண சரீரங்களாயும், அன்னமய பிராணமய மனோமய விஞ்ஞானமய





ஆனந்தமய கோசங்களாக வேதாந்த கிரந்தங்களிலும் பிரம்மஞான சங்கத்தார்கள் 1. ஸ்தூல சரீரம், 2 லிங்க சரீரம், 3. பிராணன், 4. மனது அசுத்தமனது, 5. சுத்தமனது, 6. புத்தி, 7. ஆன்மாவென்றும் பகுத்திருக்கிறார்கள். ஸ்தூல சரீரம் லிங்கசரீரம் இரண்டையும் ஒன்றாக வைத்துக்கொண்டால் முக்கியமான ஐந்து பிரிவுகளாகும். வேதாந்த கிரந்தங்களுடைய பஞ்சகோசங்களுக்கு ஒற்றுமைப்படும்.

ஆத்மாவேறு, புத்திவேறு, மனதுவேறு, தேகம்வேறு அல்ல. ஆத்மாவே புத்தி. ஆத்மாவே மனது. ஆத்மாவே தேகம். ஒரே அக்கினிக்கு தீபம் என்றும், ஜ்வாலை என்றும், தணல் என்றும் எப்படி பல நாமங்களோ அப்படியே ஆத்மாவுக்குச் சொற்ப விகாரத்துடன் புத்தி என்றும், விசேஷ விகாரத்துடன் மனது என்றும், இன்னும் விசேஷ விகாரத்துடன் தேகம் என்றும் பெயர். பிரபஞ்சத்தில் ஸ்தூலமாய்க் காண்கிற வஸ்துக்களெல்லாம் ஆத்மாவினுடைய பற்பல தேகங்களே தவிர வேறில்லை. தேகங்கள் இருவகை, சேதனம். அசேதனம். அதாவது பிராணன் உள்ளது. பிராணன் இல்லாதது. சேதனமான தேகங்களில் மூன்றுவித பிராணன் மாத்திரமுள்ளது. 1. பிராணன் மனதுள்ளது. 2. பிராணன் மனது புத்தி உள்ளது. உதாரணமாக—கல் மலை மண் இவைகள் பிராணனில்லாத அசேதன தேகங்கள். விருட்சம், செடி, கொடி இவைகள் பிராணன்மாத்திரமுள்ள சேதன தேகங்கள். நாய், புலி, யானை இவைகள் பிராணன் மனது இரண்டும் பொருந்திய சேதன தேகங்கள். மனுஷன் தேவன் இவர்கள் பிராணன் மனது புத்தியுடன் கூடின சேதன தேகங்கள். மனமில்லாத தேகங்களுக்கு சுகதுக்கானுபவமேயில்லை. மனதே சுகதுக்கானுபவத்திற்கு இருப்பிடம். மனதினால் சுகதுக்கானுபவமிருந்தாலும் புத்தியில்லாமல் துக்கத்தை நீக்கவும், சுகத்தையடையவும் வழியில்லை. ஆகையால் புத்தியுள்ள மனுஷ்ய ஜன்மம் துர்லபம். புத்தியுள்ளவனை மனுஷனென்றும்

மூர்க்கனை மிருகமென்றும், மூடனை விருக்ஷமென்றும், நிர்மூடனை கட்டையென்றும் வாடிக்கையில் சொல்லுகிற தாத்பரியமும் காண்க. இது சுகம். இது துக்கம் என்கிற பகுத்தறிவு உண்டாகிற வரையில் பாபபுண்ணியமில்லை. ஆகையால் மிருகாதிகள் தேகம் வரையில் தோஷமில்லை. மனுஷ்ய தேகத்துக்கு தோஷமுண்டு. ஆகையால் மனுஷ்ய ஜன்மமானது நரகத்துக்கும் ஸ்வர்க்கத்துக்கும் இடையில் உள்ளது.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான் யாதினு மரிதரிது காண்" — என்றார் தாயுமானவர்.

ஸ்வபாவமாயுள்ளது சுகந்தான். வருவிக்கப்பட்டது துக்கம். துக்கம் நீங்கினால் மிஞ்சினது சுகமே. சுகத்தை எங்கேயாவது போய் சம்பாதித்துக்கொண்டு வரவேண்டியதில்லை. துக்கத்தை ஆர்ஜிக்காமலிருந்தால் அதுவே போதும். சுகந்தான் மிச்சம், வேறில்லை. துக்கார்ஜிதத்தினால் மேலும் ஸ்வபாவிக சுகத்தை நாம் மறைத்துக்கொண்டோமேதவிர, சுகம் நம்மிடத்திலில்லாமல் போகவில்லை. "சும்மாவிருக்கச் சுகமுதயமாகுமே இம்மாயா யோகமினி யேனடா" — என்கிற பெரியோர் வாக்கியத்தையும், "சும்மாவிருப்பதுவே சுகம்" என்கிற லோகவசனத்தையும் காண்க.

"சும்மாவிருக்க சுகம் சுகமென்று சுருதியெல்லாமம்மா நிரந்தரஞ் சொல்லவும் கேட்டுமறிவின்றியே, பெம்மான் மௌனி மொழியையுந் தப்பி என்பேதமையா லிம்மாயையைக்காட்டி லெந்தேனந்தோ வென்விதிவசமோ" என்றார் — தாயுமானவர்.

துக்கமில்லாமல் மிஞ்சினது சுகந்தான் என்றால், கட்டையினிடத்தில் துக்கமில்லையே. அது சுகவஸ்துதானோவென்றால், கட்டையினிடத்தில் அநுபவ சக்தியே யில்லை. ஆகையினால், சுகதுக்கம் இரண்டும் அதினிடத்திலில்லை. அநுபவசக்தியுடன் கூடின துக்க நிவர்த்தியே சுகப்பிராப்தியாகிறது. அசேதன கட்டைக்கு சுகமுமில்லை துக்கமுமில்லை. சேதனமான மனுஷ்





யனுக்கு சுகமுமுண்டு துக்கமுமுண்டு. ஞானிக்கு துக்கமில்லை சுகம் மாத்திரமே. ஆனால் ஞானியை சுகதுக்கமற்றவனென்பது கட்டையைப்போல் சுகாநுபவமில்லாதவனென்றல்ல. அதன் தாத்பரியம் துக்கம் லவலேசமுமில்லாத ஓர் அநுபவத்தை சுகமென்றுதான் சொல்லவேண்டியதென்பதே. சுகம் என்பது ஒன்று இல்லாதிருக்குமானால் துக்கமே கிடையாது. அவ்வாறு சுகத்தினிடத்திலுண்டான துக்கம் நீங்கினால் சுகம் மிஞ்சிவிடுகிறது. மிஞ்சினாலும் சுகம் என்கிற பிரஸ்தாபமிராது. துக்கத்தை உத்தேசித்துத்தான் சுகம் சுகம் என்கிறோம். துக்கத்தின் பிரஸ்தாபமற்றவிடத்தில் சுகாநுபவமேதவிர சுகப்பிரஸ்தாபமேது? ஆகையால் பிரம்மானந்தம் சுகதுக்கமற்றவிடம் என்றேற்பட்டது சுகமற்றவிடமென்பதல்ல. சுகம் இல்லாவிட்டால் பிரம்மானந்தத்தை எவன் இச்சிப்பான். ஆனந்தாநுபவமே மோக்ஷத்திற்கு முக்கிய அடையாளம். அத்வைத சித்தாந்தம் சிலர் நினைப்பது போல் சூன்யமதவாதம் அல்லவென்பது இதனால் தெரிந்துகொள்ளலாம். ஜனக விஸ்வாமித்திர முனிவர்கள்வெறுங்கட்டையின் நிலைமையை அபேக்ஷித்தா அவ்வளவு பாடுபட்டார்கள். கட்டைக்கும் ஞானிக்கும் சம்பந்தமில்லை. "பேசாத வானந்த நிஷ்டைக்குமறிவிலாப் பேதைக்கும் வெகுதூரமே"

மேலும் சுகத்தில் இருவகை. விஷயசுகம் நிர்விஷயசுகம். ஞானியை சுகதுக்க மற்றவனென்பது விஷயசுக மற்றவனென்பதே கருத்தாகவும் கொள்ளலாம். நிர்விஷய சுகமே சாஸ்வதம்.
அது மோக்ஷசுகம். அது நீங்கிய மற்ற சுகங்கள் விஷயசுகங்கள்.
விஷய சம்பந்தத்திலும் விஷயசுகம் உதிக்கிறது. விஷய சம்ப
ந்தமே விஷய நிர்ப்பந்தத்தை உண்டாக்கி துக்கத்தை உண்டாக்
குகிறது. ஆகையால் ஆத்மாவுக்கு விஷய சம்பந்தமுள்ள வரையில் துக்கமுண்டு.

## கடவுள்.

எல்லா உலகங்களின் உள்ளிலும், புறம்பிலும், அப்பாலும் எங்கும் நிறைந்த வியாபகமாய், மனத்தாலும் கண்டுபிடிக்கக்கூ

டாத அவ்வளவு ஸூக்ஷ்மமாய், தன்னுடைய சக்திகள்மாத்திரம் வெளியிற்காட்டியதாய், அதனுலச்சக்திகளையுடையது ஒன்றுண்டென்று அறிவிப்பதாய், பொருளில்லாமற் பெயரில்லை பெயரில்லாமற் பொருளில்லை என்ற வசனத்தால் கடவுள் என்ற பெயர் வழங்குகிறபடியால், அப்பெயருள்ள பொருள் ஒன்றுண்டென்றும்; கடவுள் என்ற பொதுப்பெயரைத் தவிரமற்றெந்தப்பெயரை வைத்தழைத்தாலும் அப்பெயர்கொண்டது தானாக நிற்கின்றதாய், எல்லாந்தானாய், நித்தியமாய், நிர்மலமாய், நிராமயமாய், எல்லாம் வல்லதாய், எங்கும் பரிபூரணமாக நிறைந்ததாய், அனித்திய வஸ்துக்களைத் தவிர்த்து பார்க்கிலிற்கும் நித்தியப்பொருளாய், அருபியாய், பக்திக்குமாத்திரமெட்டியதாய் விளங்குவது கடவுள். இக்கடவுளை முதலிற்றன்னுளறிந்து பிறகு அவ்வழியாக எங்குமறியும் வழிகளை பின்வரும் பக்தியினுல் தெரிந்துகொள்ளலாம். எவன் அவ்விதம் அவனையறிந்து அவனை மனப்பூர்ணமாக தியானித்துத் தானுமவனுமொன்றாகக் கலந்து நிற்கிருனே, அவன் அவனேயாகிருன். அவன் மறுபடியும் உலகிற் பிறவெய்துவதில்லை.

## பக்தி.

இவ்வுலகத்திலுள்ள ஜீவராசிகளில் மனுஷ்யனுய் பிறப்பதரிது. ஏனெனில் பிறப்பு என்பது அவ்வச்சென்மங்களிற் செய்யும் கருமங்கட்கேற்றவாறேனை, சாஸ்திரங்களாலும் அனுபவத்தாலுமறிகிறேம். ஆனதினுல் கருமத்திற்குத் தக்கவாறு ஜன்மம் வருவாதல் ஒவ்வொரு ஜீவனும் மனுஷ்ய ஜன்மத்தை அடையக்கூடிய கருமத்தைச் செய்யுமென நம்புவதற்குச் சாத்தியமில்லை ஏனெனில் நம்து கருமங்கள், மிருகத்தன்மைக்குப் போகக்கூடிய காமக்ரோதாதிகளுடன் சுபாவமாக ஆகார நித்திரை மைதுனாதிகளிலுமே செய்யப்படுகின்றன. விவேகத்தால் சாத்விகமான தெய்வகாரியத்தை செய்வோமென்றல் விவேகம் தெ





ககுணம்தான் உதயமாகிறது. அரவம் தீண்டியவனுக்கு விஷம் தலைக்கேறி அல்பகாலமிறங்கி மறுபடியும் யேறுவதுபோல், நம்மை அஞ்ஞானமென்ற ஸர்ப்பம் தீண்டி அவிவேகமென்னும் விஷம் தலைக்கேறியிருக்கிறது. சிறிது ஸாதுஸங்கமென்னும் ஔஷதத்தால் விவேகம் தெளிவுவரினும் உடனே அவிவேக விஷமேறிவிடுகிறது. அந்தோ! அவ்விஷத்தாலன்றோ இச்சமுசார சாகரத்தில் வீழ்ந்து தத்தளிக்கும்படி நேர்ந்தது. நம்மிடத்திலனுதியான அஞ்ஞானம் குடிகொண்டிருப்பதால், நாம் அடுத்த ஜன்மம் மனுஷ்ய பிறப்பையே அடைவோமென்பது சாத்தியமில்லை. ஆனதால், வசமாக மனிதஜன்மத்தை யடைந்த நாம் இதை வீணக்கலாமா! நாம் மிருகஜன்மங்களை அடைந்தால் அவிவேகமே மேற்பட்டு நீடித்த நினைப்பும், மறப்புமற்று ஆகாராதி விஷயங்களிலேயே பிரவிருத்தியுற்றலைய நேரிடும். மேலானதேவஜன்மங்களை யடைந்தால், அங்குள்ள தேவபோகத்தை அனுபவிக்கவும், போககாலம் குறைந்துவிட்டதே இனி நாம் பூலோகத்திற்குப் போகவேண்டுமே யென்றேக்கத்தாலும் காலம் கழிக்கப்படுகிறது. மறுபடியும் கீழே வருவானுயின் பூச்சியாகவோ புழுவாகவோ மிருகமாகவோ மனுஷ்யனுகவோ பிறக்க நேரிடும். ஆனதினுல் மனிதஜன்மமே பிறப்பிறப்பென்றும் பெரும்பிணியை மாற்றிக்கொள்ளத்தக்க ஜன்மமென வேற்பட்டது. ஆனதினுல் இப்பொழுதுநாம் செய்யவேண்டுவது யாது?

நம்மை ஜென்மமென்னும் சாகரத்தில் கருமத்திற்கேற்றவாறு அழுத்துகிற பரமபதியைப் பஜிக்கவேண்டும். அப்படி பஜிப்போமாயின் அவர் நம்மை கரையேற்றிவிடுவார். அவரையன்றி வேறு கதியில்லையென எல்லாவற்றையுமவரிடத்தில் ஒப்புவித்துவிட்டு பக்தி செய்யவேண்டும். பக்தியென்பதென்ன?

ஸாக்ஷாத் பரமேஸ்வரனிடத்தில் வைத்திருக்கும் பரமப்ரேமைக்கு பக்தியென்று பெயர். அப்பிரேமைக்கு நாம் எப்படிக்

செய்வதெனில், மனதைப் பரமாத்மாவினிடத்திலேயே ஒப்புவித்துவிடல். அதாவது அவருடைய விக்ரஹ ரூபமாகவே நிற்றல். அப்பொழுது தேகம் தெரியாது. சோகமுண்டாகாது. உலகவிச்சையுண்டாகாது. காமக்குரோதங்கள் விலகிவிடும். இந்திரியங்களின் வழியே மனது செல்லாது. திருப்தி அதிருப்தியென எங்குகண்டாலும் ஈசுவரனாகவே தோன்றும். அதையே பக்தியென்பர். பகவான் கீதையிலும் பலவிடங்களிலும் பக்தியோகத்தை கூறியிருக்கிறார். "மோக்ஷகாரண ஸாமக்ரியாம், பக்திரேவகரியஸீ" மோக்ஷத்திற்குவேண்டிய சாமக்ரியைக்குள் பக்தியே முக்கியம். மனதை பலவிடங்களிலலையவிட்டு பக்திசெய்வதிற் பிரயோஜனமில்லை. தேவாலயத்தில் சுவாமி தெரிசனத்திற்கு சென்றால் பக்தியே செய்யவேண்டும். அதைவிட்டு அங்கு கூத்தாடும் தாசியையும் நாயனத்தையும் ஸங்கீதத்தையும் பந்தலின் அலங்காரத்தையும் பரஸ்திரீகளின் கண்திருஷ்டிகளையும் ஜூதாடிகளின் கூட்டத்தையும் பார்த்து தான்வந்த காரியத்தை மறந்துவிடுகிறார்கள் அந்தோ என்ன அவிவேகம். இக்கலியுகத்தில் யோகஞ்செய்ய முடியாது. ஞானம் பயப்பது கஷ்டம் தியானஞ் செய்வது கஷ்டம். இந்த பக்திமார்க்கமே சுலபம். இத்தகைய சுலபமார்க்கத்திலும் பிரவர்த்திப்பது துக்கமென்றால் அந்தோ எப்படிக் கடைதேறுவது. கொண்டதே கோலம் கண்டதே காக்ஷியாகப் பூரித்த மாதர்மேல் வீழ்ந்து சோம்பலைத்தலைத்து மற்றவேளைகளிலவனுக்கே யுழைத்து பெண்பிள்ளைகளைப்பெற்று மிருகத்தன்மைக்கொப்பான தொழிலையே சதமெனவென்றெண்ணாது பரமேசுவரனைப் பூஜிப்போமாக.

நாடொர் நாடோறும் வாடாமலர்கொண்டு
டாடொர் வன்றுமம் வீடேபெறலாமே.

ஸ்ரீஸர்வேசுவரனாகிய கடவுளை நாம் ஒவ்வொருவரும் இயன்றவரையில் பக்தி செய்யவேண்டும். கடவுளைத் தொழுதால் கஷ்டங்கள் தீர்ந்து இஷ்டங்கள் கூடும். நேமநியமத்தோடு





செய்கிறவர்கள் செய்யட்டும். அப்படிச்செய்ய சாத்தியமற்றவர்கள் தங்கள் ஹிருதய பூர்வகமாய்த் தியானித்து மனதாலேயே பகவத்பூஜை செய்யலாம். ஹிருதயமெனும் கோவிலில் இருத்தி அன்பென்னும் மலரால் பூஜைசெய்து, ஜகதீசா! நான் அறியாமையால் தினந்தோறும் செய்யப்படும் குற்றங்குறைகளைப் பொறுத்துக்கொள்ளக்கடவாய். உனது கிருபைக்கு என்னைப் பாத்திரனாக்கிக்கொள்ளுவாயென்று செய்யப்படும் மானஸ பூஜையானது மிகவும் மேன்மையானது. தாயுமானவர் "நின்றுமதியாமனது" என்ற பாடலில் மானஸ பூஜையை நன்கு விளக்கியிருக்கிறார். ஏகாந்த தேவதையே! துள்ளித்திரிகின்ற மனமாகிய ஆடு உனக்கு பலியாகிறது. அன்பே அபிஷேக நீர். எனதாவியே உனக்கு நிவேதிக்கப்படுகின்றது. எனதறிவே தூபமும் தீபமுமாம். ஒருகாலமன்றி சதாகால பூஜையென்கிறார்.

என்னை நம்பு, என்னிடத்திலன்புவை. உனக்குத்துணையிருப்பேன் என்று ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுகிறார். நிர்மலமான பக்தியையுடைய கண்ணப்ப நாயனார் ஆறுதினத்திற்குள் அரனருளை அடைந்தாரல்லவா? அவனுடைய உருவமும், செய்கையும் அன்புமயமாகயிருந்தது. ஜெகத்து என்னசொன்னாலென்ன? அன்பின் மிகுதியால் எதையும் லக்ஷியம் செய்யவில்லை. யாவற்றையும் துறந்தார். தன்னையும் மறந்தார். பார்ப்பவர்கள் அசூயையாக நினைக்கப்படும் பூஜையானது கடவுள் மனதிற்கு மிகவும் உகந்ததாய்விட்டது.

"கள்ளார் துழாயுங் கணவலரும் கூவிளையும்
முள்ளார் முளரியும் அம்பலும் முன்கண்டக்கால்
புள்ளாயோ ரேனமாயப்புக்கிடந்தான் பொன்னடிக்கென்
னுள்ளாதாருள்ளத்தை உள்ளமாய்க்கொண்டேனே" என்றார்

கூவிளை யென்றால் வில்வம். சிவன் விஷ்ணு என்ற பேதாபேதம் இல்லை. சிவனுக்குபயோகப்படும் வில்வமும் விஷ்ணுவுக்கு சாத்

தலாமென்று விஷ்ணு பக்தரே சொல்லுகிறார். கண்டங்கத்திரி மலரும் பூஜைக்கு அருகமுள்ளது என்று கூறுகிறார்.

ருத்திராக்ஷப்பூனை வேடம்பூண்டு மூன்றுாறு நாழிகை மூக்கைப்பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாலும் உள்ளன்பில்லாவிடில் உபயோகமில்லை. உன்மதம் என்மதம் என்று வீண்வாதம்பேசி மண்டையுடைத்துக்கொள்வதும் கடவுள்பூஜை செய்கிறோம் களவாடினால் தோஷமில்லையென்று சொல்லுவதும், சிற்சிலருடைய வழக்கமாயிருக்க கண்டிருப்போம்.

ஆஷாட பூதிகளாய் அறுபது நாழிகையும் கோசவத்தை முழங்காலுக்குமேலே தூக்கிக்கொண்டு ஆசாரங் கொண்டாடுவதை தவிர்த்து சுசியாக ஸ்நானசெய்து சுத்தவஸ்திரம் தரித்து சிறிது நேரமாவது உள்ளன்போடு பகவத் தியானம் செய்வதே உத்தமம். வாசகின்மலம், தேகமின்மலம் இரண்டும் வெகு முக்கியமானது.

> "அன்பிலாரெல்லாந் தமக்குரியர் அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு"

பரோபகாரத்தையும் அன்பையும் ஆபரணமாகப் பூண்டவர்களாய், பரஹிம்சையை கனவிலும் கருதாமல் நிராசையை வகித்து, பாசபந்தங்களை அறுத்து, துஷ்டரைக்கண்டால் தூரவிலகு என்றபடி கெட்ட சகவாசத்தை விலக்கி ஸர்ஜனர்கள் சங்கத்தைநாடி நல்லறிவுபெற்று வாழ்வோமாக. நந்தனைப்போலவும் பிரஹலாதனைப்போலவும் துருவனைப்போலவும் நாமும் கடவுளைக்கண்டு களிப்போம்.

அவன் கிருபையிருந்தால் என்னதான் நடக்காது. ஆபத்காலத்தில் அலறியழைத்த கஜேந்திரனை ஓடிவந்து ரக்ஷிக்கவில்லையா? நம்மையும் அருட்கண்ணால் நோக்கும்படியாக ஜகதீசனை வேண்டுவோம். பொழுதை ஸத்ஜனர்களிடத்தில் கழிப்போம். திரவியத்தை ஏழைகள் பொருட்டாகச் செலவழிப்போம்.





இச்சன்மத்திலேயே நமக்கு பேரின்பம் கிடைக்கலாம். நமது தொல்வினையானது வலிதாகயிருந்தால் அடுத்த ஜன்மத்தில் பிரயோஜனப்படாதோமே! நமக்கு சன்மமில்லாமலேயே போய்விடுமா? பக்தியைப்பற்றி முன்னோர்கள் வெகு உகப்பாய் சொல்லியிருக்கிறார்கள். தாதலனாகவும் குழந்தையாகவும் ஆத்மபந்துவாகவும் குருநாதனாகவும் பலவாறு கடவுளை பினைத்து உருகிப்பாடியிருக்கிறார்கள். கிருஷ்ணாவதாரத்தில் யசோதா நந்தகோபர் முதலிய யாதவர்களுக்கு கண்மணியிலும் சிறந்த பாலனாகவிளங்கி வாஞ்சை என்னும் அன்பைக் கொள்ளைக்கொண்டார். கோபியர்களின் மனோல்லாச காரணமாகயிருந்து அவர்கள் வெண்ணையோடுகூட காதல் என்னும் உள்ளன்பைக் கொள்ளைகொண்டார். சிநேகிதனாகயிருந்து பாண்டவர்களின் நட்பு என்னும் அன்பைக் கொள்ளையடித்தார். திரௌபதிக்கு ஆபத்பந்துவாக இருந்தார். அர்ஜுனனுக்கு ஞானோபதேச குருவாகயிருந்து தன்னிடம் மிகுந்த வாத்ஸல்யத்தை உண்டு செய்தார். கிருஷ்ணாவதாரத்தின் மகிமைகளை எவ்வளவு புகழ்ந்தால்தான் திருப்தியாகும். உலகத்திலுள்ள மாந்தர்களின் அஞ்ஞானங்கள் நசிக்கும்பொருட்டு கீதை யென்னும் தத்வப்பொருளை நமக்கு அளித்திருக்கும் ஸர்வசக்தி ஸ்வரூபனையும் மங்களாகரனையும் அடியார்க்கெளியனையும் அன்புமயமானவனையும் இருக்கப்பட்ட ஜகதீசனுக்கு தண்டம் ஸமர்ப்பிக்கிறேன்.

## ஆஸ்திக பக்தி.

காலத்தை வியர்த்தமாய் போக்காமலிருப்பவர்களே விவேகிகள். இவர்கள் வயதில் சிறியவர்களாயிருந்தாலும் புத்தியில் பெரியவர்கள். நாஸ்திகவாதத்தை வெறுத்து ஆஸ்திகத்வத ஆதிமுதல் பரிசோதித்து லோகோபகாரிகளாய் விளங்கின மகாத்மாக்களுக்கு கணக்குண்டா? ஈசுவரனுடைய நிஜஸ்வரூபத்தை பலவித திருஷ்டாந்தங்களால் மனிதர்களின் ஸ்ரவணேந்திரிய

நயனேந்திரியங்களுக்கு விளங்கும்படி செய்தவர்கள் ஆஸ்திக பக்தர்களே. பக்தி என்பது மனதிலுள்ளது. அங்கிருந்தே உற்பத்தியாகிறது. அது பிறக்கவேண்டுமானால் ஸத்புருஷர்களின் ஸங்கம் அவசியம். விஸ்வாசமே பலத்தை தரத்தக்கது. மாதாபிதாக்களுக்கும் மக்களுக்குமுள்ள விசுவாசத்தை பாருங்கள். ஸதிக்கும் பதிக்கும் மத்யகாலத்திலுண்டாகும் ஆத்மஸ்நேகமே இதற்கு நிதர்சனம். விசேஷ தினங்களிலும் பிரார்த்தனை ஸமயங்களிலும் நமது காயம், வாக்கு, மனம் முதலிய திரிகரணங்கள் எவ்வித நிலையிலிருக்கின்றன? ஸூக்ஷ்ம புத்தியுள்ள ஆரியர்கள் தங்கள் புத்திர பௌத்திர பிரபௌத்ராதிகளுக்கு என்றும் அழியாத ஆஸ்தியைத் தேடி வைத்திருக்கிறார்கள். அது எந்த ஆஸ்தி? அதுதான் ஆஸ்திகபக்தியென்னும் அழியாப் பொருள். சில அவிவேகிகள் நீங்கலாக மற்றவர்களின் நடத்தை ஆசார பக்தி சீலங்களே ஆஸ்திகபக்திக்குப் போதுமான சாக்ஷியங்களாயிருக்கின்றன. தங்கள் முன்னோர்கள் சொல்லியுள்ள பித்ருபக்தி, மாத்ருபக்தி, பதிபக்தி, குருபக்தி, தெய்வபக்தி, முதலியவைகள் நாளது வரையில் குறையாமல் வளர்ந்துகொண்டே வருகின்றன. இந்த உலகத்தில் தர்மபரர்களும், உபகாரிகளும், வித்யா பாலகர்களும், தத்வ விசாரகர்களும், உபதேசிகளும், அடிக்கடி வெளிவந்துலாவுகின்றனர். அஞ்ஞானிகள் ஏராளம் வந்தபடி உளறுவது சகஜமே. அதனால் ஸத்ய தர்மங்கள் தாழ்வடைந்ததென்ன? சிவா! ஹரி! என்று நாம கீர்த்தனங்களைப்பாடி பஜித்தாலும், ஸத்ய ஸ்வரூபனிடமே சப்தம் போகிறது. அன்ய மதஸ்தர்கள் தங்கள் தெய்வநாமாவளிகளை ஆவலோடு யார் படித்தாலும் ஆதியந்தமில்லாத நித்தியானந்த வஸ்துவையே நாடுகிறது. உன்னுடையது தாழ்ந்தது. என்னுடையது விசேஷ உயர்ந்தது என்ற அஹங்கார மமகாரங்களை வெளியிடுவோர்கள் உண்மையறிந்தவர்களல்ல. நிச்சயஞானிகள் எல்லோரையும் ஸமத்துவமாய் நினைப்பார்கள். சட்டம் தண்டனை முதலிய





நியாயசாஸ்திர விசாரணைகளை ஏற்படுத்துவது ராஜனுடைய தர்மமாகும். அவன் நியாயத்தில் பக்திகொண்டவன். குரு பற்பல கிரந்தங்களிலுள்ள ஸாராம்சத்தை எடுத்து சிஷ்யர்களுக்கு தர்மோபதேசம் செய்வான். இவன் தர்மப்பிரியன். பிரியசதி தன் பர்த்தாவிடம் தன் ஹிருதயத்தை ஒப்புவித்து அவனுடைய சுகக்ஷேமங்களில் சிரத்தை காட்டுவாள். இவர்களிடம் தர்மம், நியாயம், சத்தியம், உபகாரம் முதலியவைகள் குடிகொண்டிருக்கின்றன. தெய்வத்துக்குப் பயந்தவர்கள். பூர்வாசாரப் பிரியர்கள். நவீன காலத்துக்கேற்ற நற்குணங்களை வெளியிடத் துணிந்தவர்கள்.

மனோவியாகூலமுள்ள மந்தபாக்யர்களால் யாதொரு பிரயோஜனமுமில்லை. மண்வெட்டி கூடை சுமந்து திரிவதற்கே அவர்களின் உருவங்கள் வெளிவந்தன போலும். சாஸ்திரங்களில் பக்தியை அநேகவிதமாய் வர்ணித்திருக்கிறார்கள். பக்தியால் பரமனுடைய பிரியத்தை பெறலாம். ஸ்திரீ புருஷர்கள் ஒருவரையொருவர் பிரிந்திருக்க மனமிசையார். இதற்கு காரணத்தை யோசிப்போமானால் ஒருவருடைய பிரேமம் ஐசுவரியத்தையும், மற்றொருவனுடைய அன்பு ஸௌந்தர்யத்தையும் ஆஸ்ரயித்துக்கொண்டிருக்கின்றன. இத்தகைய பிரேமத்துக்கு விஷயமான வஸ்து காலகதியால் நாசமாகுமானால் அப்பொழுது வைரம் வந்து தோன்றும். இது உலகவாசிகளுக்கு அனுபவமாயிருக்கிறது. பக்திக்கு அழகு பணம் ஸம்பாஷணை முதலிய ஆடம்பரங்கள் அவசியமில்லை. பிரேம ஸ்வரூபமான நித்திய வஸ்துவே பக்திக்கு விஷயம். இத்தகைய ஆஸ்திகபக்தியை நமது குழந்தைகளுக்குப் புகட்டவேண்டும். சிறுவர் சிறுமிகளின் ஆனந்த ஹிருதயங்களில் அமிருத ரஸமுள்ள வசனங்களால் ஆஸ்திக பக்தியை பதியவைப்பது பெரியவர்களின் கடமையாகும். ஈசுவர சம்மந்தமான விஷயங்களை வைதிக லௌகீக சம்பிரதாயங்களுடன் யுக்தியுக்தமாய் மக்களுக்கு மனதில் புகும்

படி போதித்து வந்தால் மத்யவயதில் அவர்கள் மகத்பதவியை யடைவார்களென்பதில் சம்சயமில்லை.

## குருபக்தி—குருஸ்வரூபம்.

குருவென்றால் அஞ்ஞானமாகிய இருளைப்போக்குகிறவர். சிஷ்யருடைய அஞ்ஞானத்தைப் போக்கி பக்தியை உண்டாக்கி. அப்பக்திமூலமாய் மனதிலிருக்கும் துர்எண்ணங்களாகிய அழுக்கைச் சுத்திசெய்பவர். குருவென்பாருள் அநேக வகுப்புக்களுள. ஆனால் முக்கியமானவை இரண்டு. அவையாவன:— பரிபூரணர், அபரிபூரணர்.

பரிபூரணர்.— இவர்களில் குருவுக்கும் குருவாய் 'குரோர்க்குரு" என்னும் பெயரையடைந்து எல்லாவகை உபதேசங்களும் பிறப்பிடமாய் நித்யமாய் சுத்தமாய் ஞானஸ்வரூபியாய் தேஜோமயமாய் சர்வவியாபகமாய் தயாஸ்வரூபியாய் சிறிதிற் சிறிதாய்ப் பெரிதிற்பெரிதாய் மகாதேவராயிருக்கும் சதாசிவரே முதற் குருவாயிருக்கிறார். இம்மகாநுபாவரையே மகாவிஷ்ணுவென்று சொல்லுவார்கள். இந்த பரமபுருஷர் பிரகிருதியை பலமறுசெய்து பரிபூரண ஆனந்தமயராய் ஜீவாத்மாவிலிருக்கும் அஞ்ஞானத்தை நசிக்கச்செய்து அந்த ஜீவனை தன்னை விகாசச்செய்வதிலேயே எப்போதும் ஊக்கங்கொண்டவராய் ஜனங்களை தயையோடு கடாக்ஷித்துக்கொண்டு அவர்களை பரிசுத்த நிலைக்கு கொண்டுவந்து பரிபூரணர்களாகச் செய்கிறார். அதனாற்றான் இம்மகா புருஷருக்கு மகாகுருவென்றும், குருமூர்த்தியென்றும் பெயர் வந்தது.

ஒரு ஜீவாத்மா நிர்மலமான புத்தியோடு ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட அநுஷ்டானங்களைச் செய்துகொண்டும் இந்த மகாபுருஷரைப் பூஜித்து தியானஞ்செய்து ராஜயோக ஞான அப்பியாசத்தால் அநேக ஜன்மங்களில் செய்யும் கர்மங்களை நிவர்த்தி





செய்துகொண்டு வருவானாகில் அஜ்ஜீவன் அநேக ஜன்மங்களில் பரிபூரண சுபாவத்தை யடைந்து குணாதீதனாய் ஜீவன்முக்தியையும் நிறைவந்து சுகர் நாரதாதிகளைப்போல் அஷ்டமா சித்திகளையடைந்து ஏழுலோகங்களில் திரியவல்லவனாய், மாயையை ஜயித்தவனாய் பரிபூரண பிரம்மானந்தத்தை அனுபவித்துக்கொண்டு ஸ்தூல சரீரத்தை விட்டபிறகு ஈசுவரனுடைய ஸாமீபத்தை யடைந்து கைலாசம் வைகுண்டம் என்று சொல்லப்படுகிற மோக்ஷ ஸ்தானத்தை அடைகிறான். அப்படி அடைபவர்களில் சிலர் அந்த பிரம்மானந்தத்தையே அனுபவித்துக்கொண்டு இப்பூலோகத்தைத் திரும்பிப் பார்க்காமல் மோக்ஷஸ்தானத்திலேயே இருந்துவிடுகிறார்கள். மற்றவர்களோ தாங்கள் மோக்ஷஸ்தானத்தையாவது கைலாசத்தையாவது அடைந்தபோதிலும் பூலோகத்தில் அநேக ஜனங்கள் அஞ்ஞானமாகிய இருளால் ஸன்மார்க்கம் தப்பி துர்மார்க்கங்களில் பிரவேசித்து பாபங்கள் செய்து கர்மங்களை விருத்தி செய்துகொண்டு அதனால் படும் துன்பங்களையும் பார்த்து மனம் சகிக்கமுடியாதவர்களாய் 'ஐயோ' பூர்வம் இவர்களைப்போல் நானும் ஒரு ஜீவனாயிருந்து யோகஞான அனுஷ்டானங்களினால் இப்பரம பதவியை யடைந்தேனல்லவா? அஞ்ஞானத்தினாலல்லவா இவ்வளவு ஜனங்களும் பாபங்கள்செய்து உபாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் சன்மார்க்கத்தைப் பின்பற்றக்கூடியவர்களுக்கு ஞானத்தை உபதேசித்து அவர்களையும் நம்மைப்போல் மோக்ஷத்திற்கு கொண்டுவரவேண்டும் என்று எண்ணி தங்களுடைய பரமபத வாசத்தைவிட்டு மகாகருணையோடும் தயையோடும் பூலோகத்திற்குத் திரும்பி வருகிறார்கள்.

இப்படி திரும்பிவரும் தயாஸ்வரூபியும் ஜீவன் முக்தருமான புருஷர்களையே மகாரிஷிகளென்றும் பரிபூரணரென்றும், ஆரூடரென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இப்படிப் பல்லாயிரம் ஜனங்களாய் பக்திசிரத்தையினால் பாடுபட்டுக் கிடைத்த மோக்ஷத்தைவிட்டு அஞ்ஞானமாகிய இருளால் மூடப்பட்டிருக்கும் நம்

லைப்போன்ற ஜீவன்களுக்கு ஞானமாகிய வெளிச்சத்தைக் கொடுத்து சன்மார்க்கத்தைக் காட்டவேண்டுமென்று ஆவல்கொண்டு பூலோகத்திற்குத் திரும்பிவந்து மானிடசரீரத்தில் அவதரிக்கும் இப்பேர்க்கொத்த மகானுபாவர்களையே காரணகுருவென்று சொல்லுகிறார்கள். காரணகுருவானவர்கள் ஜீவகோடிகளுக்கு பக்தியையும் ஞானத்தையும் போதிக்கும் நிமித்தம் குருமூர்த்தியாகிய ஸாக்ஷாத் மகாதேவரின் பிரதிநிதியாக ஏற்பட்டு வெகுகாலம் அவ்விஷயத்திலேயே பிரயத்தனப்படுகிறார்கள். இப்படி காரணகுருவான மகாபுருஷர்களில் சிலர் இப்பொழுதும் இப்பூலோகத்திலிருக்கிறார்கள். இவர்களின் முக்கியஸ்தானம் தற்காலத்தில் இமயமலைப்பிராந்தியம். ஆனாலும் இவர்கள் ஸர்வவியாபகமாய் சூக்ஷம சரீரத்தில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பூலோகத்திலிருக்கும் ஜீவகோடிகள் தங்களை பரிசுத்தமாக்கிக்கொள்ளும் நிமித்தம் எப்போதும் பாடுபடும் இம்மகானுபாவர்கள் பூர்வயுகங்களில் ஜனங்கள் நல்லவர்களாயும் பரிசுத்தர்களாயுமிருந்தமையால் அவர்களுக்கு அப்போதைக்கப்போது தரிசனம் கொடுத்து வந்தார்கள். இப்போது பாபம் விருத்தியானதால் ஜனங்கள் அவர்களை தரிசிக்க யோக்யதை யற்றவர்களாயிருக்கிறார்கள் இப்படியிருந்தும் அம்மகானுபாவர்கள் நம்மை எப்போதும் திவ்ய கடாக்ஷத்துடன் பார்த்துக்கொண்டு நம்முடைய ஞானவிருத்திக்குத் தகுந்த பிரயத்தனம் செய்துகொண்டேயிருக்கிறார்கள்

ஸப்தரிஷிகள் நாரதர், சுகர், வேதவியாஸர், கோத்திரரிஷிகள், உத்தவமைத்திரேயர் முதலான மகாத்மாக்கள் இக்காரணகுரு வர்க்கத்தில் சேர்ந்தவர்கள். இவர்கள் நடக்க அரிதான கும்ப ஸமுத்திரத்தைக்கடந்து இந்திரியங்களை நிக்கிரகித்து சாந்தராய் தமக்கு ஒன்றும் வேண்டுதலில்லையாயினும் சூரியபகவான் யாதொரு பிரதியுபகாரமும் எதிர்பாராமல் உலகிற்கெல்லாம் வெளிச்சம் கொடுப்பதுபோல் ஜீவன்களை முக்திக்கு கொண்டுவ





ரும் கோரிக்கையையே உடையவர்களாய் நம்முடைய நன்மைக்குப் பாடுபடுகிறார்கள். இவர்களின் சங்கத்திற்கு ஆதிகுருவான மகாதேவரே தலைவராக யிருக்கிறார். காரணகுருவானவர்கள் பிரதி நூறு வருஷத்திற்கு ஒருதரம் ராஜயோகஞான அப்பியாசங்களை ஜீவகோடிகளுக்குப் போதிக்கும் நிமித்தம் தங்கள் முக்கிய சிஷ்யர்களை பூலோகத்திற்கு அனுப்புகிறார்கள். இந்த சிஷ்யர் குரு உத்திரவின்படி கொஞ்சகாலம் பூலோகத்தில் ஜனங்களோடுகலந்திருந்து ஜீவகோடிகளின்நன்மைக்காக பாடுபட்டு ராஜயோகஞானமென்கிற தானியத்தை பூலோகத்தில் விதைத்து ஞானமார்க்கத்தை அனுஷ்டானம் செய்துகொள்ளத் தகுந்தவர்களுக்கு வேண்டிய உபதேசங்கள் செய்து கடைசியில் தங்கள் குரு சந்நிதானம் போய்ச்சேருகிறார்கள். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர், பன்னிரெண்டு ஆழ்வாராதிகள், வீரப்பிரம்ம, முதலியோர்களே இந்த சிஷ்யர்களில் சேர்ந்தவர்கள்.

பிரபஞ்சத்தில் சக்ரவர்த்தி ஒருவனிருக்க அவரின் கீழ் பல உத்தியோகஸ்தர்களும் ஏற்பட்டு இந்தஸ்தூலபிரபஞ்சம் எப்படி ஆளப்படுகிறதோ அம்மாதிரியாக ஞானப்பிரபஞ்சத்திற்கு தெய்வீகமான ஏற்பாடு ஒன்று அநாதியாயிருக்கின்றது. இந்த ஞான ராஜ்ஜியத்தில் மகாதேவரே சக்ரவர்த்திபோலும், அவர் ஆக்ஞைக்குள்பட்ட காரணகுருவானவர்களே கவர்னர்கள்போலும் மேலே சொன்னபடி இவர்களால் பிரதி நூறு வருஷத்திற்கு ஒருதரம் பூலோகத்திற்கு அனுப்பப்படும் முக்கிய சிஷ்யர்களே கலெக்டர்கள் போலும் கொள்ளலாம்.

எந்த மகாபுருஷர்கள் தங்களுடைய லாபத்தைக் கோராமலும் பலாபேட்சையில்லாமலும் ஜீவகோடிகளுக்கு பக்திஞானங்கள் பிறப்பதற்கு ஸதா பாடுபடுகிறார்களோ அவர்கள் அனைவர்களும் காரணகுருவின் சிஷ்யவர்க்கத்தில் சேர்ந்தவர்கள்.

எந்த பக்திமான் பரோபகாரத்திற்குப் பாடுபட எத்தனிக்கிறானோ அவன் காரணகுருவின் கடாக்ஷ வீக்ஷண்யத்திற்கு அருக

றுகிறான். அப்போதைக்கப்போது காரணகுருவான ரிஷிகள் கூட பூலோகத்தில் ஸ்தூலசரீரத்தோடு அவதரித்து ஜனசங்கத்தில் தாமும் ஒருவராய் சிலகாலம் வசிப்பதுமுண்டு.

காரிய குருக்கள்:— இவர்கள் அனைவரும் பரிபூர்ணர்கள் அல்ல. இவர்களில் அநேகர் காரணகுருக்களுடைய முதல்சிஷ்யர்களாயிருந்தும் பரிபூர்ணபாவத்தை அடையாதவர்களின் முதல்வகுப்பில் சேர்ந்தவர்கள். இவர்களைவிடத் தாழ்ந்தபடியிலிருப்பவர்களாய் அநேகரிருக்கிறார்கள். ஆனால், காரணகுரு ஜீவர்களுக்கு போதிப்பதற்காக பிரத்தியக்ஷமாகவாகிலும் பரோக்ஷமாகவாகிலும் காரியகுருக்களை பொறுக்கியனுப்புவார். பூததயை, கடவுளுடைய தியானம், சித்தயோகாக்கிரமம் இவைகளை அப்பியாசஞ்செய்து காரணகுருக்களால் ஏவப்பட்டு ஜீவர்களோடு கலந்து இந்த ராஜயோக மார்க்கத்தை ஜீவர்களுக்குபோதிப்பவர்கள் காரியகுருக்களென்று சொல்லப்படுவார்கள்.

இவர்களில் சிலர் காரணகுருக்களுடைய உத்தரவையும் பிரேரபணையையுந்தெரிந்து காரியங்களைச் செய்கிறார்கள். இன்னும் சிலர் இவர்களைவிட கீழ்வகுப்பில் இருப்பவர்கள் அந்தக் காரணகுருவினுடைய உத்தரவையும் பிரேரபணையும் தெரிந்துகொள்ளாமல் பரோபகாரமாய் பாடுபடுவார்கள்.

இப்பேர்ப்பட்டவர்களுடைய ஹிருதயத்தில் பிரவேசித்து காரணகுருக்கள் இவர்களுக்குத்தெரியாமலே பரோபகார புத்தியை பிரேரேபித்து இவர்கள் மூலமாக இராஜயோக அப்பியாசத்தைவிருத்திசெய்வார்கள்.

விசாரம் செய்கிற சுபாவத்தையுடையவர்களுக்குசாதாரணமாய் ஒரு புருஷன் அகஸ்மாத்தாய்வந்து சந்தேகத்தை நிவர்த்திசெய்வான். அதுமுதல் இவருக்கு ஞானம் அதிகரிக்கும். இவ்விதமாய் சன்மார்க்கத்தைக் காட்டின புருஷர் காரணகுருவினுடைய பிரேரேபணையால் வந்தவரென்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது. காரணகுரு அநேகவிதமாய் ஜீவனை நல்வழி





த்துக் கொண்டுவருவார். முக்கியமாய் மூன்று மார்க்கங்கள் தெரியவரும்.

தம்மில் ஒருவர் பூலோகத்தில் அவதாரம் எடுத்தாகிலும் அல்லது அவருடைய முக்கியமான சிஷ்யரை அவதரிக்கும்படிச் செய்து அவர் மூலமாயாகிலும் அவர்களுடைய சிஷ்யர்கள் அல்லது அந்த சிஷ்யர்களுடைய சிஷ்யர்கள், இந்த சிஷ்யகோடி மூலமாயாகிலும் ஜீவகோடிகளுக்கு ராஜயோகமார்க்கத்தைப் போதித்து ஜீவர்களை பரிசுத்த நிலைக்குக் கொண்டுவருகிறார்.

இந்தக்காரண குருக்கள் சூக்ஷ்ம சரீரத்தை உடைத்தானவர்களாய் பிரதி ஜீவனுடைய ஹிருதயத்தில் பிரவேசிப்பதற்கு ஹிருதய கமலத்தின் வாயிலில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சூரியன் தன் கிரணங்களை பிரதி வீடுகளுக்கு அனுப்பி, ஓ! ஜீவர்களே நீங்கள் வாயில் திறக்கும்பட்சத்தில் இந்த வெளிச்சத்தை உங்களுடைய வீடுகளில் பிரகாசிக்கச் செய்வேனென்று சொல்லி அனுப்புவதுபோல காரணகுருக்களும் ஞான உபதேசங்களை அனுப்புவார்கள். ஒரு மனிதன் வாயில், பலகணி சந்து இவைகளைக் கெட்டியாய் மூடி உள்ளேயிருக்கும் பட்சத்தில் சூரியனுடைய வெளிச்சம் உள்ளே பிரவேசிக்காமல்போகும். உட்புறம் இருள் அதிகரிக்கும். ஆனாலும் சூரியனுடைய கிரணங்கள் இந்த மனுஷன் அஞ்ஞானத்தினால் கதவை மூடிக்கொண்டிருக்கிறான் அல்லவா யென்று, இருளினுடைய தொந்தரவை சகிக்காமல் கதவை கொஞ்சம் திறந்தவுடனே உள்ளே பிரவேசித்து வீட்டினுடைய இருளைப்போக்கடிக்கிறேன் என்று கதவினிடம் காவலிருந்தாற் போலிருந்து கதவைத்திறந்தவுடனெப்படி பிரவேசிக்குமோ அதைப்போல் தயாளுவான காரணகுரு ஜீவனுடைய அஞ்ஞானத்தைப் பார்த்து சிந்தித்து மிகவும் பரிதாபத்தோடும் கருணையுடனும் பிரதி ஜீவனுடைய

ஹிருதயவாயிலில் சர்வகாலத்திலும் காத்துக் கொண்டிருப்பார்.
நம்முடைய காமக்குரோதாதிகள் எல்லாம் திடமான கதவுகளாக
ஏற்பட்டு காரணகுருவை நம்முடைய ஹிருதயத்தில் பிரவேசிக்
காமல் செய்கின்றன. யாராகிலும், இந்த அஞ்ஞானத்தைவிட்டு
பூததயைக்கிதமான பக்தியையும் ராஜயோகத்தையும் அப்யசி
க்கும் பக்ஷத்தில் அந்த காரணகுரு நம்முடைய ஸ்தூலதிருஷ்
டிக்கு அகப்படாமற்போனாலும் ஹிருதயத்தில் பிரவேசித்து நம்
முடையமனதில் பக்தி ஞானங்கள் விருத்தியாகும்படிச் செய்து
காளடைவில் நாம் பக்குவமானபிறகு நமக்குக் காரணகுரு பிர
த்தியக்ஷமாவார்.

அந்தக்காரணகுரு சர்வகாலங்களிலும் நம்மைப்பார்த்
துக்கொண்டிருக்கிறார். மலையின்மேலிருக்கிறவன் இராத்திரி
காலத்தில் கீழேபார்த்து கீழேயிருக்கும் வீடுகளில் எங்கும் வெ
ளிச்சமில்லாமல் ஒரு வீட்டில் மாத்திரம் வெளிச்சமிருக்கும்பக்ஷ
த்தில் அதைப்பார்த்து தக்ஷணமே அந்த வீட்டை எப்படி அடை
யாளம்பிடித்து வருவானோ அதேவிதமாய் அந்த காரணகுரு
எந்த ஜீவனுடை ஹிருதயத்தில் பக்தி ஞானங்கள் பரிபக்குவ
மாய் பிரகாசித்துக் கொண்டிருக்குமோ அப்பேர்பட்டவனை திவ்
விய திருஷ்டியினால் கண்டு அவனுக்கு உபதேசம் செய்வதற்கு
தக்ஷணமே வந்து உபதேசம் செய்து போவாவார் சிஷ்யனால்
அழைக்கப்படாமலே பசியினால் வருத்தப்படும் குழந்தையிடத்
தில் தாய் ஓடிவருவதுபோல் சிரத்தையுண்டான சிஷ்யனிடம்
வந்து குரு உபதேசம் செய்து போவார். இப்படிப்பட்ட குரு
விருக்கிறார் என்று சிஷ்யனுக்குத் தெரியவேண்டியதில்லை. சிஷ்
யன் பரிசுத்தனாய் சிரத்தை பக்தியுண்டானவனாக யிருந்தால்
போதும். துருவனுக்கு ஆரண்யத்திலும் பிரகலாதனுக்கு கர்
ப்பத்திலேயும் திவ்வியதரிசியான நாரதமகாமுனி கூப்பிடாம
லே இவருடைய பரிபக்குவங்களை தெரிந்துக்கொண்டு மிகுந்த
தயவுடன் உபதேசித்தாரல்லவா.





பரிக்ஷித்து ராஜாவுக்கு அழைக்கப்படாமல் தயாசமுத்திரரா
ன சுகமகாரிஷி வந்து ஸ்ரீமத் பாகவதத்தை போதித்தாரல்ல
வா? அப்படியே காரணகுரு நாம்கூட பரிசுத்தமானவர்களா
யிருந்தால் நமக்குபதேசம் செய்வதற்கு யெப்போதும் சித்தமா
யிருக்கிறார். இப்பவும் அப்பேர்பட்ட சிறத்தையுண்டானபேர்க்கு
உபதேசம் செய்திருக்கின்றார்.

சிஷ்யர்களின் தர்மம்:—சிஷ்யன் பரிபூரணமான காரண
குருவைப்போலாவதற்கு பிரயத்தனப்படவேண்டும். காரணகுரு
பூரணமான தயாசுரூபத்தையுள்ளவராய், எப்பேர்ப்பட்ட அழு
க்கில்லாத பரிசுத்தமானவராயிருக்கிறாரோ, அப்படியே சிஷ்யர்
கள்கூட அதே மாதிரியான தயாசமுத்திரனாய் பரிசுத்தமான
வனாய் ஆகவேண்டும். சிஷ்யன் அந்த ஸ்திதியை அடைவதற்கும்
மனத்தினழுக்கை நாசம்செய்து சர்வபூதங்களின் மேல் தயயை
அப்பியசிக்கவேண்டும். காமக்குரோதத்தையும், பேதபுத்தியை
யும் அகங்காரத்தையும் நாசம் செய்யவேண்டும். இவைகளை
நாசம் செய்வதற்குத் தியானமே முக்கிய ஸாதனம்.

தியானமென்றால் காரணகுருவையாகிலும் அல்லது ஈஸ்
வரனையாகிலும் சர்வகாலத்திலும் மனதில் கீர்த்தி, மனதில்
பூஜைசெய்து, சேவித்து விசுவாசஞ்செய்து பக்தியை அப்பிய
ஸிக்கவேண்டும். இந்தத் தியானத்தினால் பரிசுத்தமடையலாம்.
எப்படியென்றால், ஒரு வெள்ளைத்துணியை சிகப்பு சாயத்தில்
தோய்த்தால் சிகப்பாகும். பச்சைசாயத்தில் தோய்த்தால் பச்
சையாகும். எந்த சாயத்தில் தோய்த்தாலும் அந்த சாயம் அத
ற்குண்டாகும். அப்படியே மனது யெந்த குணத்தையுடைய
வஸ்துவை தியானிக்குமோ அந்த வஸ்துவின் குணத்தை அடை
யும். அதாவது அந்த ஜீவன் அந்தகுணத்தை உடைத்தானவ
னுவான்.

திருடனை தியானித்தால் திருடனாவான். விபசாரினை
நினைத்தால் விபசாரியாவான். சாராயம், பங்கி, அபின் முதலி
யவைகளைத் தின்பவர்களை நினைத்தால் அநேகமாதிரி அப்பியாச
த்தையுடையவர்களாவான். ஆகையினால் அப்பேர்பட்டவர்களைக்
குருவாய் தியானிக்கும் சிஷ்யர் கெட்டுப்போவார்கள். இது
சாஸ்திரானுபவ சித்தாந்தமாம்.

சாந்தமான மனதையும் இந்திரியங்களை ஜெயித்துமிருக்கிற
குருக்களை நினைத்தால் அவர்களைப்போலாவார். ஆகையால்
கடவுளையாகிலும் காரணகுருவையாகிலும் தியானிக்கிறவரை
யில் நம்மில் அந்தபரிபூரணதேஜஸ் பிரவேசித்து மனது பரிசுத்த
மாகும். ஆகையால் சர்வகாலத்திலும் அவஸ்தைகளிலும் தியா
னத்தை அப்பியசிக்கவேண்டும். தியானத்தில் மனதினுடைய
அழுக்கை நாசம் செய்ய சுலபமார்க்கமொன்று இருக்கிறது. வேப்
பிலையைத் தின்பதினால் உண்டாகும் கசப்பை சக்கரையினாலெ
ப்படி போக்குவமோ, அதேவிதமாய் கோபமுள்ளவனாயிருந்தால்
கடவுளை சாந்தமூர்த்தியாகத் தியானிக்கும் பக்ஷத்தில் கோபம்
நாசமாகும். காமியாயிருந்தால் இஷ்டதேவதையை காமதஹனி
யாய் தியானிக்கும் பக்ஷத்தில் காமம் நாசமாகும். அப்படியே
இதர துர்குணங்களை அவைகளுக்கு விரோதமான சற்குணங்க
ளால் நாசம் செய்யவேண்டும். பக்தன் ஸர்வபூதங்களையும்
சமமாக வெண்ணித்தலை உண்டாக்கி சர்வத்திரானுடைய
க்ஷேமத்தை தியானம் செய்யவேண்டும். இப்படி செய்துகொ
ண்டு வருவதினால் பக்தனுடைய சுயலாப புத்தியும் அகங்கார
மும் நாசமாய் காரணகுருவினுடைய தயைக்கும் பாத்திரனா
வான். பரிசுத்தமடைந்த பிறகு காரணகுரு பிரத்யக்ஷமாவார்.

ஆகையால் சிஷ்யர்களுடைய மேலான கதிக்கு தியானமும்
பூதத்தையும் பக்திக்கு இரக்கைகளைப்போல் முக்கியமான சா
தனங்கள். மனது சுவாதீனப்பட்டாலொழிய இவைகளை அப்பி
யாசிப்பதற்கு சாத்தியப்படாது. மனதை அசையும்படிச் செய்





வது இந்திரியங்களாகையால் முதலில் இந்திரியங்களை சுவாதீனப்
படுத்திக் கொள்ளவேண்டியது. இவைகளில் நாக்கு மயச்சவஸ்
துக்களில் ருசிகண்டு மனதை விசேஷமாய் சலிக்கும்படி செய்
கின்றது.

இந்த வஸ்துக்கள் ஞானத்தை நாசம் செய்வதல்லாமல்
ஸ்தூலசூக்ஷ்ம சரீரங்களைக் கொடுத்து ஆயுளையும் க்ஷீணம்செய்
கிறது. தேஜஸை நாசம் செய்கிறது. இந்த வஸ்துக்களை பிசா
சுகள் ஆக்ரயித்துக் கொண்டிருக்குமென்றும் இவைகளைத்தின்
பவர்களுக்கு பிராந்தியை உண்டாக்குமென்றும் திவ்யதிருஷ்டி
யை உடைத்தான ராஜயோகிகள் சொல்லுகிறார்கள். யோக
சாஸ்திரங்களுமுரையிடுகின்றன.

ஆகையால் கெட்டவஸ்துக்களை சாப்பிடுகிறதை விட்டுவிட
வேண்டும். காமக்குரோத விபசாரங்களை முழுமையும் விடவே
ண்டும் அகங்காரம், பேதபுத்தி முதலியதை பூர்த்தியாய் நாசம்
செய்யவேண்டும். சத்வகுணமுள்ள ஆகாரத்தைபுசிக்கவேண்டும்.

சாந்தி, தாந்தம், உபாதி, திதிட்சதா, சிறத்தை முதலிய
சமாதானங்களை அப்பியசித்து இந்திரியநிக்கிரகமுள்ளவனாய்
பிரம்மசரியத்தை அப்பியசித்து, மனதை ஸ்திரமாக்கிக்கொண்டு
அதைப்பரிபூரண வஸ்துவுடன் நிறுத்தவேண்டும். சர்வபூதங்
களிடத்திலும் தயவுடையவனாய் சுயலாபாபேக்ஷையை விட்ட
வனாய் பிரதிபலத்தைக் கோராமல் அனைவரையும் நல்லஸ்திதி
க்கு கொண்டுவர கடவுளை சதா தியானம் செய்யவேண்டும்.
இந்த தர்மங்களை சிரத்தையாய் அனுஷ்டித்துக்கொண்டுவர தன்
னைச்சுற்றிக்கொண்டிருக்கிற சூரியனொளி பார்ப்பதற்கு சாத்திய
ப்படாத குருடனுக்குக் கண்பார்வை வந்தவுடன் சூரியனுடைய
பிரகாசம் எவ்விதமாகக்காணப்பட்டு அவன் அந்த வெளிச்சத்
தைப்பார்த்து எவ்விதமாக ஆனந்திப்பானோ அதே மாதிரியாக
அஞ்ஞானம் நிவர்த்தியானவுடனே நம்மைச்சுற்றி எப்பொழுதும்

வியாபித்திருந்தபோதிலும் நமக்குத் திருவுருவாயில் காணப்படாமலி ருந்த ஜோதிஸ்வரூபமான காரணகுரு தரிசனம் கொடுத்து நம்மு டைய கையைப்பிடித்துக்கொண்டு குரோ குருவான மகாதேவ ரிடம் சேர்த்து நமக்கு பிரம்மானந்தத்தை உண்டாக்குவார். சம் பூர்ணமானவராகச்செய்வார். ஆகையினால் இந்த தர்மங்களை அநுஷ்டிப்பதற்கு வேண்டிய பக்தி சிரத்தைகளை நமக்கெல்லாம் ஜகதீஸ்வரன் அருள்புரிவாராகவும்.

## விக்ரஹ ஆராதனம்.

நமது தேசத்தில் அநேக மதஸ்தர்கள் குடியேறப்பெற்றிரு க்கிறார்கள். அவர்களுள் சிலர் மண்சிலை முதலியவற்றால் விக்ர ஹமாக்கி கடவுளை வணங்குவது அக்ஞானியின் காரியமென்கி றார். இது சரியா தப்பாவென்பதை யாவரும் ஆலோசித்தறிய வேண்டியகாரியந்தான். கடவுளொருவர் உண்டென்பதை எல் லாமதஸ்தர்களும் ஒப்பவேண்டுவதாயிருப்பதால் கடவுளுக்கு உரு வமில்லையென்பது அவர்கள் விவகாரம்.

அவர் எண்ணிபபடியே நாமும் கடவுளுக்கு உருவமில்லை என்போமாயின் கடவுளுக்கு ஸர்வசக்தியில்லாமல் போய்விடும். நம்மைப்போன்ற மனிதர்களுக்கே உருவத்தையெடுக்கும் சக்தியி ருக்க, கடவுளுக்கு இந்த சக்தியில்லை யென்பது, எல்லா சக்தி யும் உள்ளவரென்பதில் உருவமெடுக்கும் சக்தியில்லாததால் இது குறைவாகும். இதனால் உருவமெடுக்கும் சக்தியும் கடவுளுக்கு உள்ளதே. ஆனால் கடவுள் சரீரம் நம்மசரீரம்போல் தோல், எலும்பு, மாம்சம், ரக்தம் முதலிய சம்மந்தமற்று நம்மை வணங் குபவரை அனுக்கிரகிக்கும் சித்பிரகாச சரீரமுடையவர். இத னால் சரீரமில்லையென்பது கூடாது.

அவர் சரீரம் சித்பிரகாசமாயிருக்க, கல் முதலியவற்றில் அவர் இருப்பதாய் கும்பிடுதல் கூடுமோவெனின், கடவுள் ஸர்வ வியாபகரென்பதை எந்த மதஸ்தர்களும் ஒப்பவேண்டுவதுதான்.





இந்த உலகத்துள் ஸர்வம் என்னும் பதார்த்தங்கள் எது என்ப தை நாம் ஆலோசிப்போம். இந்த உலகத்தில் மண், ஜலம் அக்னி, காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆத்மா என்னும் எட்டு பதார்த்தங்களே உள்ளவைகள். கடவுள் இந்த எட்டு பதார்த்தங்களிலும் வியாபித்திருப்பதைத்தான் சர்வவியாபக மென நாம் சொல்லக்கூடும் இந்த எட்டு பதார்த்தங்களிலும் ஆகாசம் முதல் ஆத்துமாபரியந்தம் உபாசனை செய்வதற்குச் சரி ப்படாத வஸ்துக்கள். மண் முதல் ஆகாசபரியந்தம் உள்ள வஸ் துக்களுக்கு பஞ்சபூதமென்று பெயர். இந்த பஞ்சபூதங்களி லும் மண்ணினிடத்தில் கெந்தம், ரஸம், ரூபம், ஸ்பர்சம், சப் தம், என்னும் பஞ்சகுணங்களுள்ளது. ஜலத்தினிடத்தில் ரஸம், ரூபம், ஸ்பரிசம், சப்தம் என்னும் நான்கு குணங்களுள்ளது. அக்னியிடத்தில் ரூபம், ஸ்பரிசம், சப்தம் என்னும் மூன்று குண ங்களுள்ளது. வாயுவினிடத்தில் ஸ்பரிசம், சப்தம் என்னும் இரண்டு குணங்களுள்ளது. ஆகாசத்தினிடத்தில் சப்தமென் னும் குணம் ஒன்றேயுள்ளது.

இதனால் மண்ணினிடத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், இந்த ஐந்தும் சேர்ந்து இருக்குமென்பதை எந்த மதஸ் தர்களும் ஒப்பவேண்டுவதுதான். நாம் மேலேகாட்டிய எட்டு பதார்த்தங்களிலும் ஐந்து ஒன்றாக சேர்ந்திருக்கும் மண் விசேஷ மென்பது. கடவுளுக்கு இந்த எட்டு பதார்த்தங்களிலும் வியாப கமில்லாமலிருந்தால் ஸர்வவியாபகமென்பது பொய்யாய் போகு மிறவ இதனால் எல்லா பதார்த்தங்களுள்ளும் கடவுளுக்கு வியா பகமுண்டு. இதனால் வியாபகம், வியாப்பியமென இவ்விடத்தில் இரண்டு பதார்த்தமாய் காணப்படும். வியாபகமென்பது சரீரியும் வியாப்பியமென்பது சரீரமுமாகும். வியாபகம் வியாபித்தால் கடவுளுக்கு உலகம் சரீரமாயின. அவர் சரீரம் எட்டினுள் ஐந்து ஒன்றாக சேர்ந்திருக்கும் பார்த்திப சம்மந்தமான சிலை முத

வியவைகள் அவருக்கு சரீரமல்லவென்பதாய் எந்த மதஸ்தர்களா லும் சொல்லவே முடியாது. இதனால் சிலை முதலியவைகள் அவர் சரீரமென்பதே நிர்மாணம். மனிதர் அக்ஞானத்தால் கடவுள் உருவமென செய்யப்பட்ட சிலை கடவுளாகுமோவெ னின் மனிதரால் கடவுளென நினைக்கப்படுவதில் கடவுளுக்கு திருப்தியுண்டாகுமென்பதாய் எந்த மதஸ்தர்களும் ஒப்பவேண்டு வதாயிருப்பதால் கடவுளெனும் ஞானம் வந்தோர் அஞ்ஞானிகளா வார்கள். கடவுளெனமனதில் நினைத்து அவரை வணங்காதிருந் தால் நாம் ஆத்மரக்ஷிப்பை அடையமாட்டோம். கடவுளை வணங்குவ தனால் ஒருகுறிப்பானஸ்தானமில்லாமல் வணங்கவும் முடியாது. நம க்கு கலெக்டர், லெட்ஜி முதலியவர்களின் பிரியம் வேண்டுமா னால் இந்த இரண்டுபேர்களையும் மனதில் நினைத்தமாத்திரத்தில், நாம் உத்தேசித்த காரியம் முடியாது. இந்த இரண்டுபேர்களை யும் பார்த்து அவர்களுக்கு தொண்டூழியம் செய்தாலொழிய நமது காரியம் சித்திக்கமாட்டாது. கடவுளுக்கு நாம் தொண் டூழியம் செய்திருப்போமாயின் நாம் ஆத்மரக்ஷிப்பை அடைய மாட்டோம். அவருக்கு தொண்டூழியம் செய்வதற்கு அவர் சரீ ரமிருந்தாலொழிய நாம் செய்யும் ஊழியம் பிரயோஜனமடை யாது. இதனால் அவர் வியாபகமான சிலையில் அவரை ஆவிர்ப்ப விக்கசெய்து வணங்குவது கடவுளே யாகும். வாசற்படியில் போட்டிருப்பதும் கல். கோயிலில்வைத்து வணங்குவதும் கல். இவ்விரண்டும் கல்லாயிருக்க ஒரு கல்லிற்கு விசேஷமும், ஒரு கல்லிற்கு தாழ்வும் எப்படி உண்டாகுமெனின், நடு வீட்டில் வெளிவாசல் திண்ணைமுதல், ரேழி, பட்டசாலை, சமையற்க ட்டு கொல்லைக்கூடம், கக்கூசு இவையெல்லாம் சேர்ந்துள்ள வீடு என்கிறோம். கக்கூசிற்கும் சமையற்கட்டிற்கும் தாழ்வு உய ர்வு இருப்பதுபோல் இந்த இரண்டு கல்லிற்கும் தாழ்வு உயர்வு உண்டாவது சகஜந்தான். வீட்டை நாம் கட்டி இன்னென்ன





விடத்தில் இன்னென்ன காரியம் செய்வது என்பதை நிச்சயித்து இருப்பதுபோல் இந்தக்கல்லை வாசற்படிக்கென்றும், அந்தக் கல்லை வணங்குவதற்கென்றும் ஏற்படுத்தியிருப்பதால் உயர்வு தா ழ்வுகள் அவசியம் இருக்கத்தக்கதே. ஆனால் வாசற்படிக்கல்லும் கடவுளுக்கு அங்கமாகயிருப்பதால் அதை மிதித்தல் கூடுமோவெ னின் வாசற்படிக்கல் அங்கமாத்திரம் ஆகுமேயொழிய அங்கிரூ பமான கடவுள் ஆவிர்பாவம் அதிலுள் இல்லாததால் மிதித்தால் தோஷமாகாது. கடவுள் சர்வவியாபகராயிருப்பதால் இந்தக்கல் லில் அவர் இல்லையென்பது கூடுமோவெனின், வியாபகம் அப்ர த்யக்ஷம், பிரத்யக்ஷம் என இரண்டு பேதமாயிருப்பதால் அதிலுள்ள வியாபகம் அப்ரத்யக்ஷமும், ஆலயாதி சிலையிலுள்ள வியாபகம் பிரத்யக்ஷமாயிருப்பதால், பிரத்யக்ஷமாயுள்ள சிலை விசேஷமா கும். அது எதுபோலெனின் கட்டையில் அக்னி ஸர்வவியாபக மாய் இருக்கின்றது. இந்த கட்டையில் அக்னியால் செய்யும் பிரயோஜனம் உண்டாகாது. அதை கயறு முதலிய சாதனக்க ருவியால் கடைந்தெடுத்து நெருப்பை பிரத்யக்ஷத்தில் காண்போ மாயின் அந்த நெருப்பில் சமையல் முதலிய பாகத்திற்கு சாதக மாக்கிக் கொள்ளுகின்றோம். கட்டையிலிருக்கும் நெருப்பு அப்பிரத் தியக்ஷமும் கடைந்தெடுத்த நெருப்பு பிரத் யக்ஷமாவதுபோல் கடவுளாக நிர்மாணம் பண்ணப்பட்ட சிலை யில் ஆவாஹனாதி ஸம்ஸ்காரங்களில் கடவுள் வெளிப்பட்டு விள க்குவர். இதனால் ஸம்ஸ்காரமற்ற சிலையில் கடவுள் வெளிப்ப டார். ஸம்ஸ்காரத்தால் இல்லாதது வெளிப்படுமோவெனின் இல்லாதது ஒருநாளும் வெளிப்படாது. உள்ளதே வெளிப்படு தல்வேண்டும். பதார்த்தங்களில் பிரத்யக்ஷத்தில் தெரியாது மறைந்திருக்கும் குணங்கள் ஸம்ஸ்காரத்தால் வெளிப்படுகிற வழ க்கந்தான். ஸம்ஸ்காரத்தால் என்ன குணம் அதிகரிக்குமெனின் அரிசியினிடத்தில் அன்னமென்னும் சுவையாகிய குணம் அரிசி யாயிருக்கும்பொழுது இல்லாதது. அதை சமையல் செய்து

பாகப்படுத்தினால் அந்த ருசி உண்டாகிறது. அதுபோல் கட
வுள் எல்லா பதார்த்தங்களிலும் வியாபித்திருப்பினும் ஸம்ஸ்கார
த்தால் அவரை ஆவிர்பவிக்கச் செய்தல்வேண்டும். ஸர்வ வியா
பகமாயுள்ள கடவுளை ஓரிடத்தில் ஆவிர்ப்பவிக்கச் செய்வதால்
மற்றவிடங்களில் வியாபக மற்றுப்போமெனின், கட்டையில்
அக்னி ஸர்வ வியாபகமாய் இருப்பதை கட்டையை கடைந்து
நெருப்புண்டாகச் செய்தால் மீந்திருக்குங் கட்டைகளில் அக்னி
யில்லாமல் போய்விடாது. அதுபோல் ஆவாஹனத்தால் கடவு
ளுக்கு ஸர்வ வியாபகம் குறையாது. நாமே கடவுளைக் கற்பி
த்து நாமே வணங்குவது குழந்தைகளின் விளையாட்டுப்போலா
மெனின் நாம் கடவுளை மனதில் நினைப்பது என் பைத்தியக்கா
ரன்போலாகாது? நாம் நினைக்காமலும், நாம் கற்பித்து வணங்
காமலும் கடவுள் வணக்கம் எப்படி செய்தல்கூடும். இதனால்
நமது பாவனையில் கடவுள் இருக்கத்தக்கவரே. கல்லினிடத்
தில் கடவுளிருந்தால் கிள்ளினால் அவருக்கு வலி தோற்றுமோ
வெனின் கிள்ளுகிறவனுக்கு வலி தோற்றுமேயொழியகிள்ளப்ப
டுகிறவனுக்கு வலி தோற்றாததுபோல் கடவுளுக்கு வலி தோற்று
வது நமக்கெப்படித்தெரியும். அவரை கூப்பிட்டால் வருவாரோ
வெனின் அவரை தெரிந்துகொண்டன்றோ கூப்பிடுதல்வேண்
டும். தெரியாதவர் கூப்பாட்டிற்கு அவர் வரவேமாட்டார். அவ
ரை எப்படி தெரிந்துகொள்ளவேண்டுமெனின் கடவுள் வணக்க
த்திற்கு குருவாயுள்ளவரிடத்தில் சரியை, கிரியை, யோகம்,
ஞானமென்னும் பேதங்கள் தெரிந்து அவரைக் கூப்பிட்டால்
கடவுள் வசத்தடையிராது. என்னையா! உங்கள் சித்தாதிகளே

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்ற சூதுமந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிசுவை யறியுமோ.





என்னும்பாடலால்கல்லை கடவுளாக வணங்காதேயெனச் சொல்
லியிருக்கின்றார். இதற்கு விரோதமாய் கல்லைவைத்து வணங்கு
வது சரியன்றெனின், அவர் சொல்லியிருப்பதும் விக்ரஹ ஆரா
தனை செய்யவேண்டுமென்பதை நன்றாய்க் காட்டுகின்றது. நட்
டிருக்கும் கல்லுகளைச் சுற்றிவந்து நாலு புட்பஞ்சாத்தி முணு
முணுப்பான சூதான மந்திரங்கள் சொல்லுகின்றாய், நட்டகல்
பேசுமா நாதனாகிய கடவுளன்றோ அதிலுள்ளாவிர்ப்பவித்திருக்
கின்றார். இதினால் கடவுள் சிலையென்பதை விட்டுவிடு. இந்த
நாதனுக்கு அந்தச்சிலை சாதகமாயிருப்பதும், கறி சமைத்தற்கு
சட்டி சட்டுவம் இதுகள் சாதனமாயிருந்து கறிவர்க்கச் சுவையை
உண்டாக்கினாலும், சட்டிசட்டுவம் கறியின் ருசியை அறியுமோ
என்றதால் கறிக்கு சட்டிசட்டுவம் ஆதாரமாயிருந்ததுபோல் கட
வுளாவிர்ப்பவத்திற்குச் சிலை ஆதாரமாம். அக்னியால் தபிக்கப்
பட்ட சட்டியில் சட்டுவத்தால் பாகமாய் ஆத்மாக்கள் புசித்து சந்
தோஷமடைவதுபோல் ஞானாசார்யன் தமது ஞானாக்னியினால்
சிலையை தபிக்கச்செய்து ஆவாஹனம் என்னும் துடுப்பால் பாக
ப்படுத்தி கடவுளென்னும் சுவையை அதிலுண்டாக்கி ஆத்மாக்
கள் நித்தியானந்தமான கடவுள் சுகத்தைபுசித்து ஆத்மரக்ஷிப்
பான முக்தியை அடையச்செய்கிறார். இதனால் கடவுள் சிலை
யென்பது கருத்தல்ல. சிலைக்கன்னயமாய் உள்ளே வியாபித்தி
ருப்பவர் என்பது அந்த பாடலின் கருத்தாகின்றது. இதினால்
நமது தேவாலயங்களில் செல்லும் ஒவ்வொருவரும் கடவுளை கல்
லென மதித்து அவமதிக்காது கடவுளாகவே கொண்டு வணங்கு
தல் வேண்டும். கல்லு அசத்து. கடவுள் சத்து. அசத்தினிட
த்து சத்து ஆவிர்பவித்து அநுக்கிரஹிப்பதெப்படியெனில் கட
வுள் அசத்திலும் சத்திலும் வியாபகர். அவர் வியாபகத்தை
வெளியில் பிரகாசப்படுத்துவது அசத்தாகாது. அசத்துசத்தாவ
தெப்படிக்கெனில்; நமது சரீரம் அசத்து. ஆத்மா சத்து. ஆத்ம
ஆவிர்ப்பாவத்தால் சரீரம் சத்தாய்விடுவதுபோல் கடவுளாவிர்ப்ப

வத்தால் அசத்தும் சத்தாய்விடும். இதினால் விக்ரஹவணக்கம் செய்பவரே கடவுள் லக்ஷணத்தை அறிந்த ஞானியெனவும், இதைப்பொய் யென்பார் சுத்தஅஞ்ஞானியெனவும் தீர்மானிக்க வேண்டும்.

## பஸ்மதாரணவைபவம்.

### பஸ்மம்—விபூதி.

நம் ஆரியர்களிலநேகர் சிவசின்னமாகிய பஸ்மத்தைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். அநேகர் விஷ்ணு சின்னமாகிய கோபீசந்தன முதலியவைகளைத்தரித்துக்கொள்ளுகிறார்கள். அவைகளில் பஸ்மத்தின் மகிமைகளை யாமறிந்தமட்டும் தெரிவிப்போம். ஏனெனில் இக்காலத்திலநேகர் பஸ்மத்தைக் கையாற் றொடவும் கூச்சப்பட்டு தரித்துக் கொள்பவர்களையும் பரிகசிக்கின்றனர்கள். அநேகர் அதனுண்மையையறியாது பரம்பரையாகவந்த குலாசாரதருமத்தைக் கைநழுவவிடுகிறார்கள். அந்தோ! அது கலியின் கொடுமையன்றோ? நமது மூதாதையரான மஹாரிஷிகள் ஒருவிஷயத்தையும் உண்மையறியாது வீண் காரியத்திற் பிறவர்த்திப்பது வழக்கமில்லை. அவர்கள் நுண்ணறிவினாலாராய்ந்த விஷயங்களைச் சிஷ்யர்கட்குப்போதித்ததுடன் புஸ்தகங்களிலுமெழுதிவைத்திருக்கிறார்கள். ஆனதால் பஸ்மத்தைப் பற்றி அவர்கள் யாதுதெரிந்துகொண்டிருக்கிறார்களென்பதைச்சிறிது விசாரிப்போம். முதலில் பஸ்மத்தைப்பற்றி வேதப்பிரமாணத்தையும். புராணப்பிரமாணங்களையும், அதை தரித்துக் கொள்ளுவதால் உடம்புக்கு ரக்ஷை யென்பதையும் வைத்திய சாஸ்திரத்தில் சிறிது யுக்திகளும் சொல்லப்படுகின்றன.

பஸ்மாவுக்கு ஐந்து நாமங்களுள. அவையாவன:—விபூதி, பஸிதம், பஸ்மா, க்ஷாரம், ரக்ஷா. மிகவும் ஐசுவரியத்தைக் கொடுப்பதாற் பூதி என்று பெயர். ஸர்வபாபத்தையும் பக்ஷிப்பதால் பஸ்மம் என்று பெயர். எல்லாவற்றையும் பிரகாசிப்பதால் பஸி





தம். ஆபத்தைபோக்குவதால் க்ஷாரம். பூதங்கள், பிரேதங்கள், பைசாசங்கள், பிர்ம்மராக்ஷசுகள், அபஸ்மாரங்கள், சம்சாரபயம் முதலியவைகளிடத்திலிருந்து ரக்ஷிப்பதால் ரக்ஷா என ஐந்து வகையாகப் பிரித்து அதற்குத் தாத்பரியமும் கூறப்பட்டிருக்கிறது. இதைச் சூதஸம்ஹிதையில் வெகு விரிவாய்க் கூறுகிறார். அதை இங்கு தெரிவிப்போம்.

நைமிசாரண்ணியத்தில் தபஸிகளாய் இடைவிடாத சிவபக்தி பண்ணுகிற மஹாரிஷிகளைப்பார்த்து சூதர் சொல்லுகிறார்.

இந்த பஸ்மதாரண வைபவத்தை அறிவதால் மனுஷ்யன் சம்சாரபந்தத்தினின்று விடுபடுவானோ அதைக் கூறுகின்றேன். பஸ்மமானது தருமத்திற் சிரத்தையுள்ள மகான்களால் நாலுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. பிராம்மணர்களே! அவைகளில் முக்கியமானதைக் கூறுகிறேன். மஹாபஸ்மா என்று ஒன்று. மற்றொன்றிற்கு ஸ்வல்பம்பஸ்மா என்று பெயர். முதலில் மஹாபஸ்ம லக்ஷணத்தைக் கூறுகிறார். மஹாபஸ்மாவென்பது மாயையென்ன? அதனது காரியமென்ன? இவைகட்கு சாக்ஷியாகவும் தத்துவஞானத்தால் அவைகளைப் பிரகாசிப்பதினால் ஸர்வபாபக்ஷயத்திற்கு ஏதுவாகவும் மகாதேவனான சாக்ஷாத் பரப்பிரம்ம ஸ்வரூபத்தினுடைய ஞானத்தினால் ஸர்வ பாபங்களும் அஞ்ஞானங்களும் விரட்டப்படுவதால் மகாதேவனே மகாபஸ்மா. மஹாரிஷிகளே! ஞானம் வேதத்தின் உத்தரபாகமாகிய உபநிஷத்தால் கூறப்படுவதே வித்தை யென்று பெயர். மற்றவை அவித்தையே. எவனுக்கு மகாபஸ்மாவான பரமேஸ்வரனே வியாபித்த ஆத்மஸ்வரூபமென்றும் அதுவே தானென்றும் தோன்றுகிறதோ அவனுக்கு மற்ற பஸ்மத்தாற் பிரயோஜனமில்லை. எவனுக்கு சர்வத்தையும் பிரகாசிப்பிக்கிற மகாதேவனான பஸ்மசுவர்த்தருபமாகத் தோன்றுகிறதோ அவனுக்கு வர்ணாஸ்ரம தருமத்தால் காரியமொன்றுமில்லை. எந்த சிவயோ

கிக்கு மகாதேவனான பஸ்மா ஆத்மரூபமாகத் தோன்றுகிறதோ ஜீவனுக்குத் தபோதானங்களாற் பிரயோஜனமில்லை. ஜீவனுக்கு மகாதேவனான பஸ்மரக்ஷிஸ்வரூபமாகப் பிரகாசிக்கிறதோ அவனுக்கு வேதம், ஸ்மிருதி முதலியவைகளாற் பிரயோஜனமில்லை. எவனுக்கு மகாதேவன் பஸ்மா பிரத்தியக்ஞை (ஸமஞ்ஞை) ரூபமாகத் தோன்றுகிறதோ அவனுக்கு தீர்த்தாடனாதிகளால் பயனில்லை. ஆனதால் மகாதேவனான பஸ்மவிஞ்ஞானத்தை யறிந்தவனே மகாயோகி. கிருதகிருத்தியன், மேதாவி, வேறுசொல்லவேண்டியதென்ன? அவனே பரமசிவன். பஸ்மவிஞ்ஞானத்தின் பொருட்டே அனாதியான வேதமும் பிரவிர்த்திக்கிறது. ஸ்மிருதி, பாரதாதி இதிகாச புராணங்களும் பிரவிர்த்திக்கின்றன. ஆஸ்திகர்களே! பஸ்மவிஞ்ஞானத்தை யோகிக்கு ஒருபோதும் செய்யவேண்டுவதொன்றுமில்லை. சரீரம் கீழே விழுகிறபரியந்தம் தேசயாத்திரையைப் பற்றியும் அவன் சிந்திக்கவேண்டுவதில்லை. ஆனதால் மகாபஸ்மாவைத் தெரிந்துகொண்டாலொழிய ஜன்ம நிவர்த்தியே உண்டாகின்றது. மகாபஸ்ம மகாதேவனே. இதனால் பஸ்மாவினது தாத்பரியத்தைகேவல ஈசுவரஸ்வரூபமாகவும், அதை யறிவற்கே பிரயாசைப்படவேண்டுமென்றும் ஏற்படுகிறது. அம்மகா பஸ்மத்தை அடையச் சக்தியற்றவர்களுக்கு சுவற்பம் பஸ்மாவைச் சாதனமாகக் கூறுகிறார்.

பிராம்மணோத்தமர்களே! சுவற்பம் பஸ்மமானது அநேகவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரௌதம் என்பது ஒன்று. ஸ்மார்த்தம் மற்றொன்று. இதில் ஸ்ரௌதம் பஸ்மா. (அக்னிஹோத்திரத்தாலுண்டான பஸ்மா). அதுவே முக்கியமாகத் தரித்துக்கொள்ளவேண்டியது. மற்றது கௌணம். மற்றும் லௌகீக பஸ்மா யென்று ஒன்றுண்டு. இவைகளிற் ஸ்ரௌத பஸ்மாவும் ஸ்மார்த்த பஸ்மாவுமே பிராம்மணர்கட்குரியது. மற்றவர்களுக்கு லௌகீகபஸ்மா மாத்திரமுரியது. பஸ்மத்தை சர்வாங்கமும் உத்தூளனம் பண்ணிக்கொண்டு பிறகு திரிபுண்டர தாரணம்





பண்ணிக்கொள்ளவேண்டும். மந்திரத்துடன் தாரணம் பண்ணிக்கொள்க. மற்றவர்கள் மந்திரமின்றி தரிக்கலாம். அஞ்ஞானம் நீக்கும்பொருட்டு சிவசின்னமாகிய பஸ்மத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். ஆனதினால் பஸ்மத்தைப்பற்றி சுருதி; ஸ்மிருதிகளில் பலவாறு பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பஸ்மமானது பக்தனுக்கு அங்கம். பரமசிவன் எப்பொழுதும் பஸ்மத்தையே தாரணம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவர் ஸர்வஸம்ஸாரரூபமான சிம்மாசனத்திலேயே எப்பொழுதும் வியாபித்துக்கொண்டிருக்கிறார். அவர் இப்பிரபஞ்சமெல்லாம் நாசத்தையே முடிவாய் உடைத்தாயிருக்கிறார். முடிவிற் சாம்பலாகவே போகிறது. ஆனதினால் சரீரத்தையும், இப்பிரபஞ்சத்தையும், புத்திர மித்திராதிகளையும் மெய்யென்று எண்ணவேண்டாம் என்று விபூதியென்ற குறியாற் காட்டுகிறார். மற்றும் விபூதியைத் தரித்துக்கொள்ளுவதாற் சரீரத்திலுண்டாகும் ஆரோக்கியத்தை யாலோசிப்போம். பசுவினது வயிற்றிலிருந்துண்டாகிற கோரோஜனையென்பது அநேக வியாதிகளைப் போக்குகிறது. வைத்திய சாஸ்திரங்களில் பசுவினது மூத்திரத்தை அனுபானத்தோடு பானம் பண்ணுவதால் சரீரத்திற்கு ஆரோக்கியமென்றும், மேதையின் விருத்தியென்றும் தெரிகிறது. கோமூத்திரத்தில் கடுக்காயின் பிஞ்சு ஊறுமானால் அம்மூத்திரம் குங்குமப்பூ வாசனையை தருகின்றது. ஆனதால் பசுவினிடத்துள்ள சர்வ பதார்த்தங்களாலும் சரீரத்திற்கு ஆரோக்கியமுண்டாகின்றது. மற்றும் பசுவானது மிக்க பரிசுத்தமான மிருகம். அநேகமாய்ப் பசுக்கள் மிக்க சாதுவாகவே இருக்கும். மற்றும் வைத்திய சாஸ்திரங்களிற் கூறியபடி கோமயத்தைக்கொண்டு அநேகர் அபூர்வ ஔஷதங்களை செய்கிறார்கள், பசுவின்பால எல்லாருக்கும் ஆரோக்கியகரமென்றும் அறிவை வளர்க்குமென்பதும் அனைவருமறிந்த விஷயம். இவ்வுலகில் ஒருவராவது பசுவின்பாலை உண்ணாதவரில்லை. பசுக்கள் மேயுங்காலத்தில் அநேக ஔஷதிகளை மேய்கின்றன. அது

வேபசுவின் வயிற்றில் பரிபக்குவப்பட்டு கோமயமாகின்றது. அது அநேக மூலிகைகளாலமைந்ததென்று கண்டு அதனால் விபூதியை இயற்றுகிறார்கள். அதில் அநேக வியாதியைப்போக்கக்கூடிய மூலிகையின் சத்திருப்பதால் அச்சத்தில் (மனிதனுடைய சரீரத்தில்) வியாதியானது வராமலிருக்கக்கூடிய சத்தியிருக்கின்றது. வயித்தியர் சில மூலிகைகளின் பஸ்மத்தைக்கொண்டு அநேக வியாதிகளைப் போக்குகிறார்கள். அவ்வாறே கோமயமும் அநேக மூலிகைகளாலமைந்ததால் அதைச் சாம்பலாக்கினாலும் அவைகளின் சத்தே யிருப்பதினாலும் அதைத் தரித்துக்கொள்ளுவதினால் வியாதியே சரீரத்தில் உண்டாகாமலிருக்கலாம். அதில் மிகப்பரிசுத்தமாகிய அணுக்கள் ஒன்றாய்க்கூடியிருப்பதால் அதை உடம்பில் பூசிக்கொள்ளுவதால் எப்போதும் மயிர்துவாரத்தின் வழியாக அநேக சக்தியை சரீரத்தில் அபிவிர்த்தி செய்கிறது. அதற்காகவே உத்தூளனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் உடம்பின் கணுக்களிலும் சந்திகளிலும் விபூயைப் பூசச்சொல்லியிருக்கின்றன. அதற்கு காரணம் யாதெனில் சந்திகளிலும் கணுக்களிலும் இரத்தம் நெருங்குவதால் அங்கு அடிக்கடி கெட்ட வியாதிகளை விருத்தி செய்யக்கூடிய மாண்டுக்கள் ஒன்றாய்க்கூடும். அதை ஒழிப்பதற்காகவே அங்ஙனம் விதிக்கப்பட்டிருக்கின்றன. விபூதியை தரித்துக்கொள்ளுவதால் எப்போதும் சரீரத்தில் ஒருவித ரக்ஷையாகவே யிருக்கிறது. மற்றும் மந்திரங்களாலபிமந்திரித்து விபூதியைப் போடுவதால் பிசாசு முதலானவை பறந்துவிடுகின்றன. அதற்கு காரணம் யாதெனில், மனிதனது சரீரத்தில் தேஜஸ் என்ற ஒரு சக்தியிருக்கின்றது. அது ஆகாரத்தினாலும் ஸ்நான பானத்தினாலும் சாத்வீகாதி விருத்திகளினாலுமுண்டாகின்றது. அது, நல்ல சாத்வீக ஆகாரம், நல்ல நதியின் ஸ்நானம், ஈஸ்வர பக்தி, முதலியவைகளைச் செய்பவர்களிடத்தில் (அவைகள்) நல்ல தேஜஸை உண்டாக்குகின்றது. அத்தேஜஸ்





ஒருவரிடத்திலிருந்து மற்றொருவரிடத்து நினைப்பினும் கண்ணாற் பார்ப்பினும் கையாற்றொடினும் போகும் இயல்புள்ளது. அதற்கு காரணம் யாதெனில், "அணில் கொம்பிலே ஆமை கிணற்றிலே" என்று நம் தேசத்தில் ஓர் பழமொழியுண்டு. இது எதற்காக ஏற்பட்டதெனில், ஆண் அணில் கொம்பிலிருந்து தனது பேடையை நினைத்து காமத்தோடு கர்ஜித்தால் கிணற்றிலுள்ள ஆமைகேட்டு கர்ப்பத்தை அடைகிறதாம். மற்றும் மனுஷ்யன் பார்ப்பதினால் அவைகளுக்கு திருஷ்டிதோஷம் வந்துவிடுகின்றதெனக் கூறுவதும் இக்காரணத்தாலேயே. மீன்களிலும் ஆண்மீன் பெண்மீனைப்பார்ப்பதாலேயே கர்ப்பமுண்டாகின்றது.

மந்திரவாதிகள் தான் உபாசித்த தெய்வசம்பந்தமான தேஜஸை விபூதி மூலமாய்க் கொடுப்பதால் அபஸ்மாரங்கள் குணமடைகின்றன. விபூதி சுபாவமாகவே பரிசுத்தமானதாலும், இன்னும் தெய்வீக தேஜசு சேர்வதாலும் பைசாசங்களை யோட்டுகின்றது. இன்னும் சரீரத்தில் விபூதியைப் பூசிக்கொள்ளுவதால் மற்றவர்களுடைய அசுத்ததேஜஸ் நம்மிடத்தில் வராமலிருக்கும்படி தடுப்பதுடன், கெட்ட தேஜஸை யொழித்து நல்ல தேஜஸை அபிவிர்த்தி செய்வதும், அந்த நல்ல தேஜஸை நமது சரீரத்தைவிட்டு வெளிவிடாது காப்பாற்றுகிறது. மற்றும் சரீரத்திலுள்ள துர்மலங்களை வெளியிற் போக்குகிறது. சரீரத்திலுள்ள துர்நீரனைத்தும் தொலைத்துவிடுகின்றது. அழுக்குகளைப்போக்கி சுத்த இரத்தத்தைக்கொடுக்கும் வல்லமையுடையது. எக்காலத்தும் உடம்பில் உஷ்ணத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும். இமயமலையில் பனியில் வசிக்கும் ஜனங்கள், தங்கள் சரீரத்தைக் காப்பாற்ற முக்கிய சாதனமாக விபூதியையே அணிகிறார்கள். விபூதி யணிந்தோரிடத்தில் வியாதியே யணுகாது. அதனாலேயே அதற்கு "ரக்ஷா" என்ற பெயர் அமைந்திருக்கிறது. இவ்விபூதியை யணிந்தும் அநேகருக்கு வியாதி பீடிக்கின்றதே யெனின், அஃது விபூதியின் குற்றமன்று. அவரவரது சரீரத்தில் அபிரி

மிதமான வியாதிஉண்டாக்கத்தக்க குணங்களிருக்கின்றன. அக்குணங்களைப் போக்கக்கூடிய ஔஷதங்களை உண்பதால் அவ்வியாதி போகவேண்டும். விபூதி அவ்வாறு ஔஷதத்திற்கு வீரியத்தை கொடுக்கும் சக்தியுள்ளதென்றறியவேண்டும். பொதுவாக விபூதியைச் சரீரத்திலணிவதால் அநேக சௌகரியமுண்டென்பதைமாத்திரம் தெரிவித்தோம். இத்தகைய மகாமகிமை பொருந்திய விபூதியின் சக்தியை யறிந்தே நமது மஹரிஷிகள் அதை தெய்வீக சக்தியுடையதென தெய்வசின்னமாக அணிகின்றனர்கள். சுருதி, ஸ்மிருதி புராணங்களிற் கூறியபடி இவ்விபூதி மிக்க மகிமை பெற்றிருத்தலால் எல்லோரும் இதை யணிவதில் சிரத்தை வைத்தால் முதலில் சரீரத்திற்கு ஆரோக்கியமும், புத்திக்கு மேதையும், ஈசுவரனுக்குப்பிரியத்தையும் உண்டாக்குகின்றது. ஆனதால் விபூதியை யணிவது முக்திக்கு மார்க்கமென்று ஏற்படுகிறது.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

## ஓர் விநோத ஞானவியவகாரம்.

அண்டபிண்ட பிரம்மாண்ட அகண்ட மண்டலாதிபதியாகிய
பரிவிரட்டு கோர்ட்டாரவர்கள் சமுகத்திற்கு.
பிரவர்த்திநிதீ வருஷத்திய நிவர்த்தி நெம்பர்.

வாதி.

நிரஞ்சனகோட்டை ஜில்லா சிரமங்கலம் தாலூகா நவத்துவாரமங்கலம் மாகாணம் கன்னையனூரிலிருக்கும் கருஜூர் சுயப்பிரகாச முதலியார் குமாரன் ஜாதி சுக்கிலம், மதம் சம்மதம், தொழில் பந்தம், ஏகவயதுள்ள ஆத்மஞான பண்டிதர்.





ஷை தரப்பு வக்கீல்.

1. பக்திஞானபண்டிதர்.
2. வைராக்கியராயர்.
3. விவேகமூர்த்தி அய்யர்.

பிரதிவாதிகள்.

ஆவரணசக்திபுரம் ஜில்லா அவித்யாமங்கலம் தாலூகா அவிவேகபுரம் மாகாணம் சிதாபாசக்குடி கிராமத்திலிருக்கும் ஜாதி (பலபல) மதம் (பலவிதம்) தொழில் விதண்டை: 1. இராகராவுத்தன். 2. துவேஷமூர்த்திராவ். 3. காமா நாயக்கன். 4. குரோதப்பய்யர். 5. லோபநாத பிள்ளை. 6. மோகனாத பண்டிதர். 7. மதத்தநாயுடு 8. மாச்சரியமுதலி. 9. ஈருஷைசெட்டியார். 10. அசூயை அய்யங்கார். 11. டம்பராஜா. 12. தற்பபத்தன். 13. அகங்கார சாம்பான்.

ஷை தரப்பு வக்கீல்.

1. மண்ணாசை உடையார்.
2. பெண்ணாசை நயினார்.
3. பொன்னாசை முதலியார்.

சேக்ஷன்.

சாமவேத சாந்தோக்கிய உபநிஷத்தின்படி வாதி பிராது.

எனக்கு பூர்வீகச் சொந்தமாகிய பரமபத க்ஷேத்திரத்தைச் சேர்ந்த அறிவானந்தபுரம் யேகபோகக் கிராமங்களாகிய மூலக்குளம் 1. சுவாதிஷ்டானபுரம் 2. மணிபூரகமங்கலம் 3. அநாகதம்பட்டி 4. விசுத்திநல்லூர் 5. ஆஞ்ஞைக்குடி 6. இந்த கிராமங்களை சாகுபடி செய்யும் காலங்களிலும், தண்ணீர்பாயுங் காலங்களிலும், மகசூல் காலங்களிலும், ஷை பிரதிவாதிகள் துராகிருதமாகப் பிரவேசித்து சித்தமேழியை ஒடித்தும், ஞானப்பயிரில் இன்பதுன்ப மாடுகளை விட்டழித்தும், பக்திவாய்க்காலை அடைத்

தும், வைராக்கிய கன்னியை நூர்த்தும், கருணையேறியின் பாய்மரங்களைக் கட்டியும், கணவாய்களை வெட்டியும், பயிரின் தத்துவப் பல களைகளைப் பரிக்கவொட்டாமல் செய்வதும் தவிர, குத்தகை யேற்பட்டிருக்கிற 21600 கலம் மகசூல் நெல்லை தடவை ஒன்றுக்கு நாலு நாலு கலமாகச் சூறையிட்டும், என்னுடைய சுவானந்த சுகானுபவத்தில் இருக்கவொட்டாமல் செய்து வருகிறார்கள். ஆகையால் கோர்ட்டாரவர்கள் தயவுசெய்து அடியில் கண்ட என்னுடைய சாக்ஷிகளை விசாரித்தும், எதிரிகளின் கட்டுப்பாடான சாக்ஷிகளின் வாக்குமூலங்களை நிராகரித்தும் வாதிபக்கம் தீர்ப்பு செய்யவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

வாதிதரப்பு சாக்ஷிகள்.

1. ஸாத்வீகபுரம் விவேக தீக்ஷிதர். 2. வாயுவுபுரம் காத்தவராய கவுண்டர். 3. மணிமங்கலம் பார்வைராய முதலியார். 4. சப்தாதிபுரம் சாந்தலிங்கம் பிள்ளை. 5. சர்மேந்திரியநல்லூர் வாக்குநாத பண்டிதர். 6. மேலையூர் அவியக்தநாதய்யர். 7. பிராசீனபுரம் புராதனபண்டிதர். 8. சத்துவக்குடி ஸர்ஜனப்பய்யர்.

பிரதிவாதி தறப்பு சாக்ஷிகள்.

1. கோசமாபுரம் அனாத்மனாதசெட்டி. 2. ஷையூர் அவிவேக பக்தன். 3. பொய்யூர் வல்லாள ராவுத்தன். 4. பாழூர் அபாண்டமுதலி 5. அவித்யாமங்கலம் சிதாபாசய்யர். 6. விஷேதமங்கலம் குடிமயக்க கோனான். 7. கீழையூர் அபான சேர்வைக்காரன். 8. சூதபுரம் சோரனாத நாவிதன்.

பிறக்கியானம்வந்த தேதியில் அந்தக்கறணநல்லூரில் வியாஜ்யமூலம் உண்டாயிருக்கிறது.



இந்து தூக்க சிகிச்சா சாஸ்திரத்துடன்

ஸ்ரீசுப்பிரமணியர்

# ஸர்வரோக நிவாரண மாந்திரீகம்.

ஹிந்து ஹிப்னாடிசம். "இந்து தூக்க சிகிச்சா சாஸ்திர
மும் ஸ்ரீ சுப்பிரமணியர் ஸர்வரோக நிவாரண மாந்திரீகமும்"
என்னும் பெயருள்ள புஸ்தகமொன்று கும்பகோணம் மங்கள
விலாச புத்தகசாலையின் சொந்தக்காரர் ஸ்ரீமான் வி. எஸ். இரா
தாகிருஷ்ணஐயரால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது
இது ஸ்ரீமான் சு. இராமசாமி ஐயரால் இயற்றப்பட்டதாகும்.
கும்பகோணம் ஸ்ரீமான் எஸ். பஞ்சாபகேச சர்மா பி. ஏ. அவர்க
ளால் இதற்கு ஆங்கில பாஷையில் சிறப்புப் பாயிரம் எழுதப்பட்
டிருக்கிறது ஹிப்னாடிசம் என்று ஆங்கிலபாஷையில் சொல்ல
ப்படும் யோக நித்திரையைப்பற்றி இந்நூல் மிக விஸ்தாரமாகக்
கூறுகின்றது. மேனாட்டாருக்கு இத்தகைய சாஸ்திரம் புதிதே
யாயினும் நம்மவர்களுக்குப் புதிதன்று. "திருமால் பாற்கடலில்
யோக நித்திரை செய்கின்றார்" என்றும், "அறிதுயில் அமர்ந்
தோன்" என்றும் நம்முடைய நூல்கள் கூறுகின்றன. "தூங்
காமற்றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலமோ?" என்றார் தாயுமானவர்.
இவையெல்லாம் ஹிப்னாடிசம் என்னும் "விழிப்புநிலை உறக்கம்"
நம் நாட்டில் பூர்வகாலத்திலேயே உண்டென்பதைப் புலப்படுத்
துகின்றன. ஸ்ரீ சுப்பிரமணியர் மந்திரம் ஸ்ரீபஞ்சாட்சர மகாமந்
திரம் இவைகளுடைய மகிமைகளைப்பற்றியும் வேறு பல மந்திர
ங்களைப்பற்றியும், இந்நூல் விரிவாக எடுத்துக் கூறுவதோடு,
அம்மந்திரங்களை இன்னின்ன முறையாய் உச்சரித்தால் இன்னி
ன்ன வியாதிகள் நீங்கும் என்ற விவரத்தையும் எடுத்துரைக்கின்
றது. அந்தந்த மந்திரங்களுக்குரிய சக்கரங்களும் இதில்போட்
டுக் காட்டப்பட்டிருக்கின்றன. தவிர, ஆத்மா, மனம், நாடிகள்
இவைபோன்ற நுட்ப விஷயங்களின் இயல்பைப்பற்றியும், வியா
திகளுக்குப் பொதுவாய்ச் செய்யக்கூடிய சிகிச்சைகளைப்பற்றியும்
இதில் நன்றாய் இதன் ஆசிரியர் எடுத்துவிளக்குகின்றார். ஸ்ரீஷண்
முகமூர்த்தியின் அழகிய திருவுருவப்படமொன்றும் இதில் காண
ப்படுகின்றது. மொத்தத்தில் இந்நூலாசிரியர் மிகுந்த பிரயா
சையோடு தம்முடைய நீண்டநாள் அநுபவத்தை ஒட்டி இப்புத்
தகத்தை எழுதி முடித்திருக்கிறார் என்று சொல்வது மிகையா
காது. இப்புத்தகத்தின் விலை ரூபா 1-8-0 மிகக்குறைந்த விலை
என்றே சொல்லலாம். வேண்டுவோர் மை. இராதாகிருஷ்ண
ஐயருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். வைசியமித்திரன்.

**இதன் விலை ரூபா 1-8-0.**

இரண்டாவது

# ஞானமிர்தம்.

(ஓர் வேதாந்த தமிழ் நாவல்)

இது 'பஞ்சாட்சர மகிமையை' விளக்கும் ஒரு நாவலாகும். இக்காலத்தில் பெரும்பான்மையோருடைய மனம் ஆழ்ந்த தத்துவநூலாராய்ச்சியிலும் மதவிஷயமான சாஸ்திரப்பயிற்சியிலும் செல்லாமல் இலேசானவையும், படிப்பதற்கு இன்பந்தரத்தக்கவையுமான புஸ்தகங்களை வாசிப்பதில் செல்கின்றதென்பதை இனிதறிந்து இந்நூலாசிரியர் பஞ்சாட்சர மகிமையை நாவல் மூலமாக விளக்க முன்வந்தது பெரிதும் பாராட்டற்பாலதே. படிப்பதற்கு இனிமையாய் இந்நாவலிருந்தபோதிலும், உலகவழக்கச் சொற்களை அளவுக்கு அதிகமாக ஆங்காங்கு புணர்த்தியிருத்தல், அவ்வளவு சிலாகிக்கத்தக்க தன்றென்றே கருதுகிறோம். ஹாஸ்யரசம் நிரம்பியுள்ள பகுதிகள் படிப்பவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியன. இன்னும் சிறிது உயர்ந்த கடிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்குமானால் இப்புத்தகத்தின் தோற்றம் நன்றாயிருந்திருக்கும். இப்புத்தகம் வேண்டுவோர் கும்பகோணம் மங்களவிலாச புத்தகசாலையின் சொந்தக்காரர் ஸ்ரீமான் C. S இராதாகிருஷ்ண ஐயருக்கு எழுதப்பெற்றுக்கொள்ளலாம். விலை அணா 10. வைசியமித்திரன்.

## OPINIONS.

**GNANAMIRTAM.**—We are in receipt of a copy of the interesting Tamil Novel "GNANAMIRTAM" By Mr. C. S. RAMASWAMI AIYAR of Kumbakonam. The names of the characters suggested the work to be an allegory, but whatever its name, it smells as sweet with its easy Tamil and the quaint humour which underlies the whole work. Copies of the work book can be had of Mr. C. S. RADAKRISHNAIYER Editor, Lokanukoolan, of Kumbakonam, and the price of each copy is only 10 As. (The Hindu.)

Your "GNANAMIRTAM" is really very humarous and interesting. The author has surely the object of reforming the present day priesthood in view. The latter half infuses piety in the reader's mind.

Yours Sincerely,

S. PANCHAPAGESA SERMA B. A., L. T.,

*Assistant, Teachers' College, Saidapet.*





சுதேசமித்திரன் :— இப்பெயர்கொண்ட தமிழ்க்கதையை ஸ்ரீமத் சு. இராமஸ்வாமி அய்யர் இயற்றி கும்பகோணம் ஸ்ரீமத் C. S. இராதாகிருஷ்ண அய்யர் வெளியிட்டிருக்கிறார். இக்கதையில் பஞ்சாக்ஷரத்தின் மகிமையை எடுத்துக்கூறியிருப்பதோடு மனிதரின் குண விசேஷங்களை, வடிக்கையாகச் சொல்லியிருக்கிறது. இதன் விலை அணா 10

பிழைக்கும் வழி :— இந்த நாவல் ஸி. எஸ். ராமஸ்வாமி அய்யரால் இயற்றப்பட்டது. இது பக்திமார்க்கத்தை நன்றாய் விளக்கிக்காட்டுகிறது. இதன் நடை சுலபமாயிருக்கிறது. இதை யாவரும் வாசித்துப் பயனடையலாமென்று நினைக்கிறோம். இதன் விலை அணா 10. வேண்டுவோர் ஸி. எஸ். ராதாகிருஷ்ண அய்யர், மங்களவிலாசபுக் டெப்போ, கும்பகோணம் என்று எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

இந்து சாதனம் :—இது கும்பகோணம் பிரம்மஸ்ரீ சு. இராமஸ்வாமி அய்யர் அவர்களால் இலகுவான தமிழ் வசன நடையின் இயற்றப்பட்ட நவீன கதை. இந்நூலின் இடை இடையே விபூதி, உத்திராக்கம், பஞ்சாக்ஷரமாகியவற்றின் மகிமைகள் கூறப்பட்டிருத்தலின் இஃது சைவசமயிகள் எவராலும் இனிது படிக்கற்பாலதாகும். இதன் விலை அணா 10. பிரதிகள் கும்பகோணம் மங்களவிலாஸ புக்டெப்போவிற் பெற்றுக்கொள்ளலாம். எமக்கனுப்பிய பிரதியை ஏற்று மகிழ்ந்தோம்.

ஞானபானு :—இது ஓர் புதியகதை. இது எட்டு அத்தியாயங்களடங்கிய 179 பக்கங்களுள்ளது. பண்டைகாலத்து பாவனை நிறைந்துள்ளது.

திராவிடாபிமானி :—இப்பெயர்பூண்ட புஸ்தகத்தின் முதற்பாகம் வரப்பெற்றோம். இதோர் சிறந்த நாவல். இப்புஸ்தகம் ஸி. எஸ். இராமஸ்வாமி அய்யரால் எழுதப்பட்டு, லோகானுகூலன் பத்திராதிபர் மிஸ்டர். ஸி. எஸ். இராதாகிருஷ்ணய்யரால் அச்சியற்றப்பட்டது. இப்புஸ்தகம், அதன் பெயருக்கேற்ப பக்திக்கடுத்த விஷயமாய் வரையப்பட்டுள்ளது. அதனை போதிக்கும் நோக்கத்தையே குறியாகக்கொண்டு கதை யெழுதப்பட்டிருப்பினும், நாவல் என்பதற்கு இருக்கவேண்டிய இலக்ஷணங்களெல்லாம் இதில் இனிதமைந்திருப்பது பாராட்டற்பாலது. கதையில் கூறப்படும் முத்தண்ணா, கலியண்ணா, பள்ளிச்சிறுர்கள் இவர்களுடைய செய்கைகள் வாசிப்போருக்கு விடா நகைப்பை உண்டாக்கும். வண்டிக்காரனாகிய வாதாபி வெளித்தோற்றத்

தில் வண்டிக்காரனைப்போல காணப்படினும் வாஸ்தவத்தில் பெரிய ஞானியாக விளங்குவதும், அவன் கலியாணராவுக்கு நல் உபதேசம் புரிந்து நல்வழியில் திருப்புவதும் வாசிப்போரின் [illegible]க விட்டுவில[illegible]டியதல்ல. இக்காவலில் தர்மோபதேச [illegible] திபோ[illegible] னும் நிறைந்து கிடைக்கின்றன. இது யாவரா[illegible] பயம் [illegible] கூடியது. யாவர்க்கும் விளங்குமாறு எளிய நடையில் [illegible] பட்டிருக்கிறது. நல்ல கிளேஸ் காயிதத்தில் அச்சடிக்கப்ப[illegible]ருக்கிறது. இதன் விலை அணா 10.

லோகாநுகூலன்:—இஃது Mr. C. S. ராதாகிருஷ்ணய்யர் அவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. ஆடவர்களும், பெண்டிர்களும், இதை படித்தானந்திக்கக் கூடியது. இதில் வைத்தியகேசரி, இல்லாமை நாயனார், யாசககேசவய்யர் முதலியவர்கள் பஞ்சாக்ஷர சர்மாவாக பாவனைசெய்து அரசனை ஏமாற்றப்பார்ப்பது முதலியவைகள் நன்றாக எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது.

பிராந்தசுநேகன்:—ஓர் நவீன கதை. ஞானம், ஒழுக்கம், பக்தி, இவைகளின் சொரூபம் பயன். இவைகள் தெளிவாய் விளக்கப்பட்டுள்ளது. முறைமை பயனில் கண்ணோக்கமுள்ளாருக்கு இது இன்றியமையாத் சாதனம்.

மூன்றாவது

# கந்தபுராண வசனச்சுருக்கம்.

மதுராந்தகம் கடப்பேரி சுப்ரமணியசிவாசாரியரால் இயற்றியது.

சிவபிரான் தன் கைமாறற்ற பெருங்கருணையான் அட்டாதச வித்தைகளை தோற்றுவித்தருளி அதற்கு கர்த்தாவாய் நின்று சூலபாணியெனும் திருவபிதானம் பெற்றிலங்கி விளங்குகின்றனர். அவ்வட்டாதசவித்தைகளாவன.—வேதம் நான்கும், அங்கமாறும் மீமாம்சை நியாயம், புராணம், ஸ்மிருதி, ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தவேதம் ஆகவித்தை பதினெட்டு. இவற்றில் பரமசிவன் உலகத்தை படைக்குமாறு கூறுவது புராணம். இப்புராணத்தினுள் சைவப்பகுதி பத்தில் காந்தமெனும் புராணம் ஆறு சங்கிதைகளும் ஒரிலக்கம் கிரந்தங்களுமுடையனவாம் அச்சங்கிதைகளாறனுள் சங்கரசங்கிதையில் முதற்கண்டத்துள்ளாகியது. இதுசிவரகசிய கண்டமெனும் பெயர்த்து அது ஏழு காண்டங்களையுடையதாயிருக்கும். ஸ்ரீசுப்ரமண்யர் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை 8 அணா.

விலாஸம்—மங்களவிலாஸ புக்டேப்போ, கும்பகோணம்.



## "THE SKANDA PURANA"

THE MADRAS MAIL.— The importance of the Hindu Puranas as furnishing materials for the re-construction of the history of India for periods for which there are no authentic histories, has not been adequately reali[illegible]f these Puranas there are eighteen recognised ones, an[illegible] have been sought after by people more for their religious and mythological value than for any historical materials they may contain. That these Puranas or ancient records are a store-house of a religious and historical traditions has been fully realised by antiquarians, who have made researches into them. It is not possible for all to conduct re-search work in this field, but any educated Hindu can help in securing accurate editions of these ancient works and in the publishing thereof. We are glad to see that Mr. C. S. Radakrishna Iyer, Editor of the LOKANUKULAN, of Kumbakonam, has been instrumental in publishing in Tamil prose the "Skanda Purana" written in readable Tamil by Mr. S. Subramania Sivachariar. This Purana has been long popular amongst Hindus, and deals with the story of Subrahmanya apparently a non-Aryan deity that has been amongst the earliest to be absorbed into the Hindu pantheon. The book is written in literary Tamil. It is to be hoped that the other Puranas will also be similarly published. Mr. Radakrishna Iyer will do well in any abridgment of these works to secure the co-operation of some student of Indian history to examine the manuscripts, so that no meterial of historical valu is omitted in the process of abridgment.

"KANDAPURANA VACHANA CHURUKKAM"

THE MADRAS STANDARD :— We have received a copy of this book from its publisher Mr. C. S. Rathakrishna Iyer of Kumbakonam. We have gone through the book and are glad to say that the story is written in easy readable Tamil and the grand truths that lie hidden in this sacred story have been well brought out as a perusal of same will amply testify.

விலாஸம்—மங்களவிலாஸ புக்டேப்போ, கும்பகோணம்.

Iam in receipt of your "Kandapurana Vachanam." The book is written in easy simple style and gives an idea of the sacred ...k of Kandapuranam, which is at present reader in verse by few. ... the public ... be very much benefitted by the work.

Yours Sincerly,

...ANCHAPAGESA SERMA, B. A., L. T.

...sistant, *Teachers' College, Saidapet.*

## கந்தபுராண வசனச் சுருக்கம்.

**சுதேசமித்திரன்** :—இது மதுராந்தகம் சு. கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரால் இயற்றப்பட்டு கும்பகோணம் ஸ்ரீமத் C. S. இராதாகிருஷ்ணய்யரால் வெளியிடப்பட்டது. கந்தபுராணத்தை வசனநடையில் படித்தறிய விரும்புவோர் அனைவரும், இப்புத்தகத்தை வாங்கிப்படிக்கலாம். உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், ஆகிய இவ்வாறு காண்டங்களையும் பற்றி எழுதியிருக்கிறது. இதன் விலை அணா 8.

**இந்து சாதனம்** :—சுப்பிரமணியக் கடவுளின் வரப்பிரசாதம்பெற்று விளங்கியவரும், மெய்ச்செவிப்புலவர் உச்சியிற்கொள்ளும் மகிமை வாய்ந்தவருமாகிய கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள் தமிழில் இயற்றியருளிய கந்தபுராணத்தை, தருமபுராதீனத்து ஸ்ரீசம்பந்த சரணாலய சுவாமிகள் சுருக்கிப்பாடி அந்நூலுக்குக் கந்தபுராணச்சுருக்கமெனப் பெயருந் தந்தனர். அக்கந்தபுராணச்சுருக்கம் கற்றோரன்றி மற்றோரும் எளிதில் கற்றுணரும் வண்ணம் மதுராந்தகம் சு. கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரவர்களால் இனிய தமிழில் கத்தியரூபமாய் எழுதப்பெற்று லோகானுகூலன் பத்திராதிபர் பிரம்மஸ்ரீ வி. எஸ். இராதாகிருஷ்ணய்யரவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கின்றது. பிரதிகள் பளபளப்பான கடிதத்தில் அழகுற அச்சிடப்பெற்று நான்முகத்தில் அறுமுகக்கடவுள் திருவுருவப்படமொன்றும் அழகுற அமைத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கந்தபுராணச்சரித்திரத்தைச் சுருக்கமாக அறியவிரும்புவோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும். இதன் விலை அணா 8. பிரதிகள் கும்பகோணம் மங்களவிலாச புத்தகசாலையிற் பெற்றுக்கொள்ளலாம். எமது பார்வைக்கனுப்பிய பிரதியை உவந்தேற்றோம்.





**பூர்ணசந்திரோதயம்** :—இது மதுராந்தகம் கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரால் இயற்றப்பெற்று, கும்பகோணம் லோகானுகூலன் பத்திராதிபர் மகா-ா-ா-ஸ்ரீ ராதாகிருஷ்ண ஐயரவர்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. விரிவாய்க் கிடக்கும் ஸ்கந்தபுராணம் இக்காலத்தியர்க்குப் [illegible] சுருக்கமாக இலகுவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. நன்றாக அச்சியற்றியிருக்கிறது. இதன் விலை அணா 8 தான். வேண்டுவோர் ஷை ஐயரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பிராஞ்சுநேசன்** :—இது மதுராந்தகம் கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரால் செய்யப்பெற்றது

கும்பகோணம் லோகானுகூலன் பத்திராதிபர் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஐயரவர்களால் வெளிப்படுத்தப்பெற்றது. டெமி இரவுன் 16 பக்கங்கொண்ட 16½ பாரமுள்ளது. 124 பக்கங்களுள்ளது. தமிழ்நடை படிப்பவருக்கு பொருள் சுலபமாக விளங்கும்படி நன்றாய் எழுதப்பட்டுள்ளன. ஆண்பெண்பாலாரிருவரும் மனையிடங்களில் கந்தபுராண ஸாரத்தை யுணர்ந்து அம்மூர்த்தியிடம் பக்தியை விளைக்கத்தக்கது. மங்களவிலாச புத்தகசாலையில் கும்பகோணத்தில் பிரதி எட்டணாவுக்கு கிடைக்கும்.

**சென்னை வியாபாரி** :—நம்முடைய பார்வைக்கும் அபிப்பிராயத்திற்கும் வந்திருக்கும் இப்புத்தகம் கடப்பேரி மிஸ்டர் S சுப்பிரமணிய சிவாசாரியாரால் எழுதப்பட்டு கும்பகோணம் லோகானுகூலன் பத்ராசிரியர் மிஸ்டர் C. S. ராதாகிருஷ்ணய்யரால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. சிங்காரமான செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

**வைசியமித்திரன்** :—இப்பெயர்கொண்ட புத்தகமொன்று கும்பகோணம் மங்களவிலாஸ புத்தகசாலையின் சொந்தக்காரர் ஸ்ரீமத் C. S. இராதாகிருஷ்ண ஐயரால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மிக விரிந்து கிடக்கும் கந்தபுராணத்தைச் சுருக்கமாக அழகிய வசனநடையில் மதுராந்தகம் ஸ்ரீமத் சு. கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியார் எழுதியதும், அதனை ஷை இராதாகிருஷ்ணய்யர் பிரசுரஞ் செய்ததும் உலகோபகாரமான செயல்களேயாகும். இப்புத்தகம் கலாசாலை மாணவர்களுக்கும், தமிழ் கற்கும் சிறுவர்களுக்கும் பெரிதும் பயனுடையதாகும். ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியரின் கருத்தோடு முரண்படாமல், வாசகர்களுக்கு இன்பம் பயக்கும்படி இடையிடையே கந்

…தபுராணச் செய்யுட்களையும் எடுத்துக் காட்டியிருக்கும் ஆசிரியரின் திறம் பாராட்டத்தகுந்தது. இப்புத்தகத்தின் விலை அணா 8. வேண்டுவோர் ஸை. கும்பகோணம் இராதாகிருஷ்ண ஐயருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

திரா… :—இப்புஸ்தகமும் வரப்பெற்றோம். இது மதுராந்தகம் [கட்டு]ப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியாரால் இயற்றப்பட்டு, கும்பகோணம் லோகாநுகூலன் பத்திராதிபர் மிஸ்டர் வி. எஸ். இராதாகிருஷ்ணய்யரால் அச்சிடப்பட்டது. இதில் ஸ்ரீ சுப்பிரமண்யமூர்த்தி, ஸ்ரீ ஷண்முகமூர்த்தி இவர்களின் அழகிய படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன் பெயருக்கேற்ப இப்புஸ்தகம் அமைக்கப்பட்டிருப்பது ஆசிரியரின் [திற]மையை நன்கு விளக்குகிறது. இப்புஸ்தகம் உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், [தேவகா]ண்டம், தக்ஷகாண்டம், என்னும் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. உயர்ந்த கடிதத்தில் முத்துக்கள் போன்ற எழுத்தில் மிகு சுத்தமாய் அச்சடிக்கப்பட்டிருக்[கிறது]. இப்புஸ்தகத்தின் விலை 3 அணா. வேண்டுவோர் கும்ப[கோணம்] மங்களவிலாச புக்டெப்போவுக்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

பிறைத்[?]பி… :—இது மதுராந்தகம் கட்டுப்பேரி மிஸ்டர் எஸ். சுப்பிரமணிய சிவாசாரியாரால் எழுதப்பெற்று, கும்பகோணம் 'மங்களவிலாஸ புஸ்தகசாலை' சொந்தக்காரரும், 'லோகாநுகூலன்' பத்திராதிபருமாகிய மிஸ்டர் வி. எஸ். ராதாகிருஷ்ணய்யரால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணா 8. ஸ்கந்தபுராணம் பதினெட்டு புராணங்களிலொன்று. இந்தப்புராணத்தில் ஸுப்ரமண்ய ஸ்வாமியினுடைய பிறப்பு, வளர்ப்பு, பராக்ரமங்கள் ஆகிய இவைகள் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. இந்தப்புராணத்தை காஞ்சீபுரம் கச்சியப்ப சிவாசாரியார் என்ற புலவர் பாடலாகப்பாடினர். பாடலாயிருப்பதை ஸாமான்யப் படிப்புள்ளவர்கள் படித்தறியக்கூடாமையாயிருக்கிற காரணத்தால் ஸர்வத்ரருக்கும் பயன்படும்படி மிஸ்டர் ஸுப்ரமண்ய சிவாசாரியாரால் இனிமையும் ஸரளமுமான வசனநடையில் எழுதியுள்ளது. மிகவும் நன்றாயிருக்கிறது. யாவரும் இந்தப்புஸ்தகத்தை வாசித்துப் பயனடையலாம். வேண்டுவோர் கும்பகோணம் மங்களவிலாஸ புக்டெப்போவுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

---

விலாஸம் :—

மங்களவிலாஸ புக்டெப்போ, கும்பகோணம்.

# மங்கள விலாஸ புக் டெப்போ,
## கும்பகோணம்.

**தத்வஞானபோதினி.** விலை ரூ.

இந்நூல் வேதாந்த சாஸ்திரத்தின் தத்வங்கள் ஆசாரியபக்தி, ஈஸ்வரபக்தி முதலிய பல அரிய விஷயங்களை ஒருங்கு சேர்த்து ஒருவாறு கோர்வைப்படுத்தி சுருக்கமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள இனிமையான நூல் ... ... ... 0—

**பக்தி விளக்கம்.**

இந்நூல் ஈஸ்வரனது அவதார விசேஷங்கள் மூர்த்திகளின் மஹிமைகள் ஈஸ்வரனது அடியார்கள், பக்தர்கள், குருபக்தி, ஸ்திரீகளின் கற்புகள் [illegible] களின் மஹிமைகள் முதலானவைகளை எடுத்துக் காட்டி பக்தியை ஊட்டக்கூடியது ... 0—

**மஹாத்மாக்கள்.**

இந்நூல் ஈஸ்வர அம்சபூதர்களாய் கலியிலிஸ் தம்மஹிமைகளை எடுத்துக்காட்டி அவதரித்த சில மஹாத்மாக்களின் சரிதைகள் அடங்கியது ... ... 0—

**ஸ்ரீசுப்பிரமண்யர் ஸர்வ ரோக நிவாரண மாந்திரிகம்.**

இந்நூலில் ஸ்ரீ சுப்பிரமணியர் அவதாரம், மந்திர உற்பத்தி, பஞ்சாக்ஷரம், பஞ்சபூதங்கள் பிரணவ மந்திரம், உபாஸனை, கடவுள் முதலியவாவும், 27 நக்ஷத்ர மந்திரங்களும், காளி, ஆஞ்சநேயர், கெருடர், நரஸிம்மர் இவர்களின் மந்திரங்களும், திருநாமங்களும்; பூஜா விதிகளும், பலவித வியாதிகளும்; அவைகளின் சிகிச்சைகள் சொல்வதும், சக்கிரங்களாலும், படங்களாலும் விளக்கியிருக்கின்றன ... 1—

**கந்தபுராண வசனச் சுருக்கம்.**

இதில் கந்தபுராணத்தைச் சுருக்கமாயும், வசனரூபமாயும் அச்சிட்டிருக்கிறது. இதன் முற்பக்கத்தில் ஸ்ரீ முருகக்கடவுளின் திருவுருவ படங்களும் அமைந்திருக்கின்றது ... ... ... 0—

**ஞானாமிர்தம்.**

பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தின் தத்வங்களை நன்கு எடுத்து போதிக்கும் இனிய வேதாந்த தமிழ் நூல் 0—

Apply to:—C. S. RATHAKRISHNA AIYAR,
Proprietor, Mangala Vilasa Book Depot,
KUMBAKONAM.


TITLE PAGE PRINTED AT THE SRI VIDYA PRESS, KUMBAKONAM.